Regd. No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 2. | ஹிஜ்ரி 1349 ஷஅபான்மீ 1931 ஜனவரிமீ | இதழ் 1

22 JAN 1931

உள்ளடக்கம் — பக்கம்

1.	ஸூரத்துல் பீல்	... 1
2.	நாயக வாக்கியம்	... 3
3.	நமது இரண்டாம் மலர்	... 5
4.	தியாகமே வெற்றித் திரவுகோல்	... 7
5.	சங்கடம் யாருக்கு	... 10
6.	விதி என்பது யாது	... 17
7.	சுயேச்சை அளித்தது இஸ்லாமன்றோ	... 20
8.	காப்பியடித்த பா. தாவூத்ஷாவின் வழக்கு	... 22
9.	ஜிஹாங்கீரும், ரூபாவதியும்	... 26
10.	இஸ்லாமும் பர்தாவும்	... 29
11.	ஷஃபான் மாதச் சிறப்பு	... 33
12.	றமலானின் சிறப்பு	... 35
13.	நோன்பின் மகிமை	... 37
14.	நோன்பின் விபரம்	... 38
15.	ஆசிரியர் குறிப்புகள்	... 47

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு	...	,,	4 0 0
தனிப் பிரதி	...	,,	0 4 0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரேபக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T. மதராஸ்.

حفاظة الاسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம் [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 2	ஹிஜ்ரி 1349 ஷஅபான் ௴ 1931௵ ஜனவரி ௴	இதழ் 1

சூரத்துல் பீல்.

நிகரற்ற அருளாளனும் அளவற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் (நான் இதனை ஓதுகின்றேன்.)

1. உமது இறைவன் யானைக்காரர்களுடன் யாது செய்தானென்பதை நீர் பார்க்கவில்லையா ?

2. அவர்கள் தந்திரங்களை யவன் பிரயோஜனமற்றவையாய்ச் செய்துவிட வில்லையா ? (கண்டிப்பாய்ச் செய்தான்).

3. இன்னும் அவர்கள் மீது பறவைகளைக் கூட்டங் கூட்டமாக அனுப்பினன்.

4. அவை அவர்கள் மீது போடிக்கற்களை யெறிந்தன.

5. எனவே, அவர்களை மேல்லப்பட்ட புல்லைப்போலாக்கி விட்டான்.

[அதாவது: முஹம்மதே! உமது இறைவன் யானைக்காரர்களுடன் என்ன செய்தானென்பது உமக்குத் தெரியுமன்றோ? அவர்கள் சூழ்ச்சிகள் யாவும் பலனற்றவையாய்ப் போகும்படிச் செய்து, அவர்கள் பால் பறவைக் கூட்டங்களை ஏவினதும் உமக்குத் தெரிந்ததே. அப்பறவைகள் அவர்கள் மீது பொடிக்கற்களைப் பொழிந்மையால், அவர்கள் சரீரங்களை மெல்லப்பட்டபுல்லைப்போன்று செய்துவிட்டான் என்பதே.]

இத்திருவத்தியாயம் மக்கீயாம். இதற்கு 'சூரத்துல் பீல்' யானை அத்தியாயம் எனப் பெயரிடப் பெற்றது. இதில் யானைக்காரர்களாம் அஸ்ஹாபுல் பீல் உடைய சரித்திரம் குறிக்கப் பெற்றமையே யாம். இச்சரிதை இறைவன் சக்தியின் வல்லமையையும், யானைகளே போன்று எம்மாட்டு பெரிய ஜீவன்களாயினும் அல்லாஹுத் தஆலாவின் கோபாக்கினி வந்துள்ள காலத்து மிகச்சிறிய வஸ்துக்களிடமும் தமது சக்தியைக் காட்டத் திறனற்றுப் போகும் என்பதையும் நன்கு விளக்குகின்றது. இத்துடன் அவனது வீடாம் கஃபாவை யவமதிப்பது அவன் கோபாக்கினிக்குக் காரணமாம் என்பதும் இதனால் அறியக்கிடக்கின்றமை கண் கூடு. இச்சரிதை நாயகம் (ஸல்.) அவர்கள் ஜனனத்திற்குக் கொஞ்சம் முன்பு நிகழ்ந்தது. இதனால் நாயகம் (ஸல்.) அவர்களை யவமதிக்கும் குப்பார்கள் நாயகம் (ஸல்.) அவர்கள் நபித்துவத்தின் அடையாளங்களில் இதுவுமொன்றெனக் கொண்டு, அவர்களை யவமதியாமலும், அவர்களைப் பொய்யாக்காமலுமிருத்தல் வேண்டு மென

வும், அறியாப் புறத்தினின்றுதவிபுரிந்து, தனது பக்தர்களைக் காக்கும் இறைவன் எவ்விதமும் காத்து வருவானெனவும் இதனால் அச்சுறுத்தப் பட்டிருக்கின்றது. அச்சரிதையாவது :

அபிஸீனியா முழுமைக்கும் அரசனாயிருந்த நஜ்ஜாஷியின் புறத்தினின்றும் எமன் தேசத்திற்கு அதிபதியாய் நியமிக்கப்பெற்ற ‘அப்ரஹா’ வென்பான் எமன் தேசத்து மக்கள் ஹஜ்ஜுக் காலங்களில் ஒவ்வொரு கோணத்தினின்றும் மக்காவுக்குச் செல்வதைக் கண்டு “இவர்கள் எங்கு செல்கின்றனர்?” எனக்கடாவினன். ஜனங்கள் ‘கஃபா’ வென்னும் புனித வீட்டை நாடிச் செல்வதாய்ப் பதிலளிக்கவே, அன்னவனுக்குப் பொறாமை ஏற்பட்டு “அவ்வீட்டிற்குப் போட்டியாய் நம் தேயத்திலும் ஒரு வீட்டைக் கட்டுங்கள்!” எனக் கட்டளைப் பிறப்பித்தான். எனவே, எமன் தேசத்திற்குத் தலை நகராய ‘ஸன்ஆன்’ என்னும் ஊரில் ஒரு கட்டடத்தைக் கட்டுவித்து, அதன் சுவர்களை ரத்தினங்களாலலங்கரித்து, நல்ல ஆடையாபரணங்கள் பூண்ட விக்கிரகங்களை யதனுள் வைத்து. சாம்பிராணி முதலிய மணங்கள் வீசும் தூப தீப வஸ்துக்களையும் அதனுள் வைத்தான். அத்துடன் அதனைச் சுற்றிலும் பிரயாணிகளுக்குத் தங்கு மிடங்களையும் கட்டினான். இஃது குரைஷ்களுக்கு மனவருத்தத்தை யுண்டாக்கியது. இந்நாட்களில் பனீகனானா என்னும் வம்சத்தைச் சேர்ந்த ஒருவர் எமனுக்குச்சென்று, அரசனைக்கண்டு, இக்கட்டிடத்தின் பணிகளை யேற்றுக்கொண்டார். சில தினங்களில் எத்தகைய இன்னலுமின்றியே வெளியே வரப்போக அவருக்குச் சாத்தியப்படவே, ஒரு இரவு அவ்வீட்டில் மலஜலம் கழித்துவிட்டு ஓடிவிட்டார். காலையில் இதைக் கண்ணுற்ற ஜனங்கள் அரசனிடம் முறையிடவே, அவன் விசாரிக்கச் செய்ததில் அந்த மக்காவாசியே இங்ஙனம் செய்துவிட்டு ஓடியதாய்த் தெரிந்தது. இதனால் மக்காவாசிகள் மீது அன்னவனுக்கு இன்னும் கோபம் அதிகமாயது. இத்துடன் ஹரமில் நின்றும் ஒரு வியாபாரக் கூட்டத்தார் அக்கட்டடத்தின் அருகில் இராத்தரித்தனர். காலையில் புறப்படும் நேரத்தில் தவறிப் போகும் பொருட்களைப் பார்ப்பதற்காக தீ மூட்டினர். அந்நேரத்தில் காற்று பலமாக வீசியதால், தீ அவ்வீட்டையும் பற்றி, எரித்துவிட்டது. இதைக்கண்ட அக் கூட்டத்தார் ஓடிவிட்டனர். அரசனுக்கு இதுவும் மக்காவாசிகளின் வேலையே என்பது தெரியவரவே அவன் கோபம் முன்னிலும் பன்மடங்காயது.

எனவே பெரிய சேனையுடன் கஃபாவை இடிப்பதற்கு மக்காவுக்கு வந்தான். அச்சேனையில் பன்னிரண்டு யானைகளு மிருந்தன. இடையில் காணும் ஒவ்வொரு ஊர் ஜனங்களும் ‘கஃபாவை இடிக்கவேண்டாம்’ எனவும், அதற்குப் பதிலாய் வேறேதும் வாங்கிக் கொள்ளும்படியும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டும், பயனற்றதாய்ப் போயிற்று. இச்சேனைகள் மக்காவை அண்மிக்கவே, மக்காவாசிகள் மருண்டோடி மலைகள்மீது ஏறிக்கொண்டனர். எனினும், நாயகம் (ஸல்.) அவர்கள் பாட்டனார் அப்துல் முத்தலிப் மட்டும் தனியாய் மக்காவி லிருந்தார்கள். அவர்களுக்கும் மனக்கலக்கம் ஏற்பட்டு இறையுதவியையே வழிபார்த்திருந்தனர். திடீரென பச்சைப் பறவைகள் ஜித்தாவின் புறமிருந்து வெளிக்கிளம்பி வந்தன. ஒவ்வொரு பறவையின் அலகிலும் ஒன்றும், இறக்கைகளின் பக்கத்துக்கொன்றாக இரண்டும் ஆக மூன்று பொடிக் கற்கள் இருந்தன. அவைகள் அக்கற்களை அந்த யானைப்படையின் மீது எறிந்தன. அக்கற்கள் யாதாமொருவன் தலை மீது பட்டால், உள்ளுக்குச் சென்று பின்புறமாக வந்துவிடும். இச் சம்பவம் மக்காவிற்குச் சுமார் ஆறு மைல் தூரத்திலுள்ள “வாதியெமுஹஸ்ஸர்” என்னு மிடத்தில் நிகழ்ந்தது, அவர்களுடனிருந்த யானைகளும் மக்காவின் புறம் செலுத்தினால் முழந்தாட் பணிந்து உட்கார்ந்துகொள்ளும் எமன் புறம் செலுத்தினால் நடக்கும். இதைப்பார்த்த அவ்வரசன் யானைப்பாகர்களை மிரட்டினான். இச் சமயத்திற்றான் பறவைக்கூட்டங்கள் வந்துற்றன. யானைகளுட்பட அச் சேனைகளையே அழித்து விட்டன. இவைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டு மலைமீதிருந்த மக்கவாசிகள், கீழிறங்கி வந்து சேனையின் பொருட்களைக் கொள்ளை கொண்டனர். குரைஷிகளுக்கிருந்த செல்வம் இதுவே. அக்கற்கள் நுபுவத்திற்குப் பின்பும் இருந்தன. ஸஹாபாக்(ரலி.) களில் அநேகர் அவைகளைப் பார்த்துமிருந்தனர். இச்சம்பவத்திற்கு ஐம்பத்தை

ந்து தினங்கட்குப் பின்னர் நாயகம் (ஸல்.) அவர்கள் ஜனித்தார்கள். எனவே, இச்சரிதை யை எடுத்துக்கூறி இறைவன் குரைஷிகளை யச்சுறுத்துகின்றான். இதுவே இவ்வத்தியா யம் இறங்கியதன் காரணமு மாகும்.

இவ்வத்தியாயத்தின் மூன்ருவது வசனத் தில் 'அபாபீல்' என்னும் பதம் உபயோகிக் கப் பட்டுள்ளது. அஃது 'கூட்டங் கூட்ட மாக' என்னும் பொருளைக் கொடுக்கும். அப் பறவைகளைப் போன்று அதற்கு முன் பும், பின்பும் எங்கும் காணப்படவில்லை. அவைகளின் நிறம் யாது என்பதற்கு அபிப் பிராய பேதமிருப்பினும், யாம் முன் கூறியதே போன்று பச்சை என்பதே ஆன்றோர் பலர் வாக்காகும். அவைகள் முகங்கள் மிருகங் கள் முகங்களே போன்று இருந்ததாய் இக் ரிமா (ரலி.) கூறுகின்றார்கள்.

நான்காவது வசனத்தில் 'ஸிஜ்ஜீல்' என் னும் பதம் உபயோகிக்கப் பட்டுள்ளது. அஃது ஸிஜ்ல் என்னும் தாதுவினின்றும் உண்டாயதாய்ச் சிலர் கொள்கின்றனர். ஸிஜ்ல் என்பது தோண்டி எனப் பொருட்படும். தோண்டியி னின்றும் ஜலம் கொட்டுவது போல் இடைவிடாது அவை வருஷிக்கப்பட்ட மையால் அவைகளுக்கும் இப்பெயர் வந்தது. இன்னும் சிலர் 'இஸ்ஜால்' என்னும் தாதுவி னின்றும் வந்ததாய்க் கொள்கின்றனர். இஸ் ஜால் 'அனுப்புவது' எனப் பொருட்படும். இதன்பிரகாரம் 'அனுப்பப்பெற்ற வஸ்துக் களே போன்ற கற்கள்' எனப்பொருள்கொள் வர். இன்னும் சிலரோவெனின் 'ஸிஜில்லு' என்னும் தாதுவினின்றும் வந்ததாய்க் கொள் வர். இஃது புத்தகம் எனப் பொருட்படும். இதன் பிரகாரம் 'அவர்களைப்பற்றி எழுதப் பட்டிருக்கும் விதிப் புத்தகத்தினுள்ள கற் கள்' என்பதும் பொருளாம். இவைகளைத் தவிர்த்து நாம் பதவுரையில் கூறியதே போ ன்று 'பொடிக் கற்கள்' என்பதும் பலர் அபிப்பிராயமே. அபூஸாலிஹ் (ரலி.) அந் தக் கற்கள் ஒவ்வொன்றின் மீது அதைக் கொண்டெறியப்படுபவன் பெயர் வரையப் பெற்றிருந்ததாயும், தாம், அதை உம் முஹானீ (ரலி.) வீட்டில் கண்டதாயும் கூறு கின்றனர்.

இறுதியாக இறைவன் அன்னாரை மெல் லப்பட்ட புல்லைப்போன்று செய்து விட்ட தாய்க் கூறுகின்றான். பிராணிகள் புசித்துக் கழித்த புல், வைக்கோல் இவைகளைப் போ ன்று, கவனிப்பாரற்றுக் கிடந்தனர் அக் குழாத்தினர். புழுக்கள் அரித்துவிட்ட புற் களேபோன்று, கற்களின் உஷ்ணத்தினால் திரேகத்தினுட்பாகம் வெந்துபோய் அன்னார் கிடந்ததும் உண்மையே. எனவே, இறைவன் அவர்களை மெல்லப்பட்ட புற்களுக்கு ஒப் பிட்டுக் கூறினான். இச்சரிதையில் அநேக அற் புதங்கள் நிரம்பி யிருப்பது கண்கூடு. முத லாவதாக, யானைகள் மக்காவின் புறம் செல் வதற்கு அடியெடுத்து வைக்காமல் முழந்தா ளிட்டுக் கொள்வது; இரண்டாவதாக, அத ற்கு முன்பும், பின்பும் எவரும் கண்டறியாத கோலத்தில் கூட்டங் கூட்டமாக பறவைகள் வருவது; மூன்ருவதாக; அத்தகைய அற் புதக் கற்களைக்கொண்டு வருவது; நான்காவ தாக; அக் கற்களுக்கு இருந்த சக்தி இவை களாம். வல்லாஹு அஃலம்.

நாயக வாக்கியம்.

உங்களுக்கு முன் சென்று போனவர்களின் (ஆத்மார்த்த) வியாதிகளாய பொறாமை, பகை மை உங்களிடையே பரவிப்போயிருக்கின்றன. அவை மொட்டையடிப் பவையா யுள்ளன. 'அவை முடியை மொட்டையடிக்கும்' என நான் கூறவில்லை. எனினும், மார்க்கத்தை மொட்டை யடித்து விடுகின்றன. என் ஆத்மா எவன் கைவச மிருக்கின்றதோ, அ(வ்விறை) வன் சத்தியமாக, நீங்கள் விஸ்வசிக்காதவரை ஸ்வர்க்கத்தில் புகமாட்டீர்கள்; நீங்கள் ஒரு வரை யொருவர் பிரியம் வைக்காதவரை விஸ் வசிக்க மாட்டீர்கள். நீங்கள் ஒருவரை யொரு வர் பிரியம் வைப்பதற்குக் காரணமான வொரு பொருளை நான் உங்களுக் கறிவிக்க வேண்டா மா? (அதாவது:) உங்களுக்கிடை சலாமை நிறுவுங்கள்!

இப் பொன் மொழியை நாயகம் (ஸல்.) அவர்கள் 'கைருல் குரூன்' என்னும் நன்மை மிகுந்த காலமாம் ஸஹாபாக்கள் (ரலி.) உடைய காலத்தில் அருளிச் செய்தார்கள். அக்காலத்தே உண்மை இஸ்லாம், ஜனங்கள் உள்ளங்களில் குடிகொண்டிருந்தது. அக்காலமே பொறாமை, பகைமை இவைகளைவிட்டும் ஒழிய வில்லை என்றால், நம் காலத்திற்குச் சொல்லவும் வேண்டுமா? பொது மக்களென்ன; படித்த வகுப்பாரும் இக் கெடுதிகளில் அகப்பட்டுழல்வதை நாம் காண்கிறோம். ஈமான் என்னும் நிதிக் குவியலுக்கு பொறாமை தீப்பொறி என்பதை எவரும் அறிகின்றன ரல்லர். மேலே பொறிக்கப்பட்ட நாயக வாக்கியமே போன்று, ஈமானை-மதத்தை பொறாமை மழுங்க மொட்டையடித்துவிடு மென்பதை யோசிக்கின்றன ரல்லர். தற்காலத்தோர்கள் பொறாமை, பகைமை இவைகளுக்கு நிகரற்றோர் என்பதும் மிகை யாகாது. 'தலைவர்கள்' எனக் கூறப்படும் ஒரு சிலரை விட்டு விடுவோம். அன்னார் தலைமையையே இறைவனென மதித்திருக்கின்றனர் என்பது கண் கூடு. இவர்களுக்கு அல்லாஹ் (ஜல்.), ரசூல் (ஸல்.) உடைய உபதேசம் எங்ஙனம் பயன்படப்போகின்றது. ஏழைகளையும் விட்டுவிடுவோம். "வறுமை குப்ருக்கு நெருங்கி யிருக்கின்றது" என்னும் ஹதீதுக் கேற்ப, அவர்கள் தங்கள் வறுமையின் காரணமாய்ப் பொறாமையில் கிடந் துழல்கின்றனர். இவ்விரு குழாத்தினர் மாட்டும் யாம் ஆச்சரியம் கொண்டோமின்று தம்மை 'இறைபக்தியில் முதிர்ந்தோர்' எனவும், பொதுமக்களுக்கு 'வழிகாட்டிகள்' எனவும் கூறிக்கொள்ளும் குழாத்தினர் மாட்டே யாம் ஆச்சரியங் கொள்கின்றோம். தற்காலம் இவர்களை விட அதிகமாக பகைமை, பொறாமை இவைகளுக் குறைவிடமாக வொரு கட்டமும் இராதென்ப துண்மையே.

நமது மூதாதைகள் ஒற்றுமைக்கு உறைவிடமாயும், அன்புக்கு அடிப்படையாயும் விளங்கினர். இவர்கள் ஸ்தானத்தில் வீற்றிருக்கும் தற்காலப் பேர்வழிகளோ, அவர்களுக்கு முற்றும் மாற்றமா யிருக்கின்றனர். ஒவ்வொருவனும் உலகத்தில் பகைமையை நிறுவுதற்கும் அதன் மூலமாய்ப் பெயர் பெறுதற்குமே முயற்சிக்கின்றான். நமது முன்னோர்கள் நடந்து சென்ற நன்வழிகளைப் புறக்கணித்து, 'புதுவழி' யொன்றை நிறுவுகின்றான். ஹா! தற்காலம் நாயகம் (ஸல்.) அவர்களின் சத்வழியைப் புறக்கணித்து நிற்கும் கூட்டங்களெத்தனை? இவைகளின் நோக்கமென்ன? பிளவு படுத்தித் திரிவதேயன்றோ? இத்துணை கூட்டங்களும் நாயகம் (ஸல்.) அவர்களின் சன்மார்க்க நெறியாம் சுன்னத் வல் ஜமாஅத்தைக் கைப்பிடித் தொழுகி வந்தால் முஸ்லிம்கள் நிலை யாதா யிருக்கும்? "நீங்கள் விசனமுற வேண்டாம்! நீங்கள் (உண்மை) மூமின்களா யிருந்தால், நீங்களே உயர்ந்தோர்" என்னும் இறைவாக்கின்படி எல்லாத் துறைகளிலும் முன்னணியிலேயே நிற்போமன்றோ? ஸஹாபாக்கள் (ரலி.) தாபிஈன்கள் (ரலி.) தமது அன்பினால் உலகையே வசப்படுத்தினார்கள். அவர்கள் அன்பின் காரணம், ஒற்றுமையின் காரணம் சென்ற விடமெல்லாம் சிறப்புற்று விளங்கினார்கள். அவர்கள் ஸ்தானத்தில் உட்கார்ந்திருக்கும் நமது நிலைமை யாது? வியாபாரம், கைத்தொழில், விவசாயம் முதலிய ஒவ்வொரு துறையிலும் போட்டி; பொறாமை! பகைமை, இதன் பயன்தானென்னே? இற்றைக்கு யாவரினும் தாழ்ந்தோராய்க் காணப்படுகின்றோம்.

எனவே, நாயகம் (ஸல்.) அவர்கள் இத்தகைய தீமைகளுக்கெல்லாம் காரணமான பொறாமை, பகைமை போன்றவை மார்க்கத்தையே மொட்டை யடித்துவிடும் எனக்கூறியிருக்கின்றார்கள். இவைகளே அழிந்து போன, பூண்டற்றுப் போன முன் சென்ற வகுப்பாரிடத்தே காணப்பெற்ற வியாதிகள் என்பதும் இப்பொன் மொழியால் நன்ரு தெரிகின்றது. தவிர, ஒருவரை யொருவர் அன்பு பாலிப்பதை ஈமானுக்கு அடிப்படை எனவும் கூறியிருக்கின்றார்கள். அன்பில்லாத விடத்து இறைவனையும், அவன் ரசூல் (ஸல்.) அவர்களையும் அறிவதும் அசாத்தியமே. இஃதில்லாத விடத்து ஈமான் காணப்படுவதெங்ஙனம்?

இறுதியாக பெருமானார் (ஸல்.) பிரியம் நிலவுதற்கு நல்ல பாதையையும் காட்டியிருக்கின்றார்கள். அதுவே சலாமை நிலவச்செய்வதாம். இதனால் ஒருவருக்கொருவர் முகமலர்ச்சி, சம்பந்தம், ஒற்றுமை ஏற்படுதல் கண்கூடு. இவ்விதமாக, பிரியத்தைப் பெற்று, அதன் மூலம் ஈமான் உள்ளவர்களாய் மிளிர்ந்து, ஸ்வர்க்கத்திற்குச் செல்லவேண்டுமென்பதை இப்பொன் மொழி அறிவுறுத்துகின்றது காண்க.

حفاظة الإسلام مدراس

நமது இரண்டாம் மலர்.

இறைவன் திருவருளால் சென்ற ஆண்டின்கண் மலர்ந்த நமது ஹிபாஜத்துல் இஸ்லாம் நறியச் செழுமலர் கண்டு அதன் இனிய தேனை நம் அன்பர்கள் அனைவரும் உண்டு களித்திருப்பர் என்று நம்புகின்றோம். தன் இன்னுரைகளாம் தாதுக்களால் சத்தியச் சன்மார்க்க நன்மணம் இவ்வுலகில் இதுகால் பரவி வருதற்கு இடையூராய் தலைதூக்கியுள்ள வழி பிறழ்ந்த துர்நாற்றத்தைப் போக்கிற்று என்பதும் பொருந்தும். இதற்குச் சான்றாக இவ்வாண்டில் அரும்பியுள்ள இரண்டாம் மலர் முதலிதழின்கண்ணும் பல உண்மைகள் வெள்ளிடை மலைபோல் நம் அன்பர்கட்குத் தெற்றெனத் துலங்கும். கொடிய நாற்றத்தால் எங்ஙனம் பல தொத்து நோய்களும் அத் தொத்து நோய்களால் உண்டாகும் பலன்களாய பலவீனம் மரணம் முதலியன விளைகின்றனவோ, அங்ஙனமே, வழிமாறிய போதனைகளும் மனிதனின் செழுமைக்கு இடர்செய்து நிற்ப. கொடிய நாற்றம் எங்ஙனம் இயற்கைக்கு இயைந்தது இன்றே அங்ஙனமே மார்க்க முரண்கொண்ட போதனைகளும் பிறவும் இறைவன் திருவருட் சம்மதத்திற்கு நேர்படாவாம். எனவே, துர்நாற்றத்தைப் போக்க சுகந்தம் இன்றியமையாததாய் இருப்பதோடு சுகாதாரம் காட்டற்கும் உரித்தாய் இருப்பதே போன்று நம் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" நம்மவர்சட்கு இன்றியமையாததாயும் நம்மவரை மேலேற்ற வல்லதாயும் இருக்கின்றது என்பதை நமக்கு நாடோறும் வரும் பாராட்டுக் கடிதங்கள் வாயிலாயும், நாம் ஆற்றிய அற்பப் பணிகளின் பெரும் பயனாலும் நன்கறிகின்றோம். ஆகாயவிமானம், மின்சார இருப்புவண்டித் தொடர், கம்பியில்லாத் தந்தி முதலிய முதற்றர நாகரிகக் கருவிகளை உடைய இக்காலத்தில், நமக்குப் பத்திரிகைகள் உணவுபோல்வனவாம். உயிரைப் பாலிக்க உணவு அவசியமாவதாயின், அறிவைப் பாலிக்க அறிவுடைய கட்டுரைகள் செய்திகள் முதலியன பொருந்திய நற் பத்திரிகைகளும் அவசியமாம். நாம் தற்கால அறிவின் போக்கை ஒட்டி தற்கால நாகரிகம் முதிர்ந்த சாதனங்களைக் கைக்கொண்டே ஒழுக வேண்டியவர்களாகின்றோம். நம் முஸ்லிம் மக்கள் அனைவரும் இதுகாரும் கண்டிராத வகையில் ஒன்றுபடவும் நமது நாயகம் (ஸல்.) அவர்கள் பெருமையினையும் நம் திருமறையின் சீர்குன்றாச் சிறப்பினையும், நமது பெரியார்களின் சட்டதிட்டங்களையும் ஒருங்கே ஒரே விதமான மனப்பான்மையுடன் கற்றறிந்து உணர்ந்து முன்னேற்றமடையவும் தற்காலச் சாதனமாய பத்திரிகைகளை நாம் முழுமனதுடன் வரவேற்கின்றோம். அறிவு என்னும் கொடியை வளர்க்கும் தண்ணீர் போன்றும், அஞ்ஞானம் என்னும் பூண்டை வேரறக்களையும் களைக்கட்டு போன்றும், ஒற்றுமை என்னும் கயிற்றைத் திரிக்கும் இராட்டை போன்றும் துலங்குவது பத்திரிகையாம். அஞ்ஞானம் அகன்று அறிவு மேம்பட்டு ஒற்றுமைபூண்டு வாழ்வதே நல்வாழ்வாம்; அஞ்ஞானம் மெஞ்ஞானத்தால் அகலும். அறிவு அநுபவத்தால் மேம்படும்; ஒற்றுமை அன்பால் உரம் பெறும். இவை

யனைத்தும் நம் முஸ்லிம் சமுகத்திற்கு உண்டாதற்கு பத்திரிகைகள் வேண்டும். முக்காலும் வேண்டும். நம்மைப் புறத்தே நின்று தாக்கி நம்மையும் நம் அரியத் திருமறைப் போதனைகளையும் பரவவொட்டாமல் சிலர் செய்து வருகின்றனர். நம்மை நம் அகத்தே நின்று தாக்குவாரும் உளர். இவ்விரண்டு தரத்தாரும் அன்றி அரசியல் காரணங்களால் நம் சமுகத்தை அழிவிக்கவும் கருதுவர் சிலர். இதற்குப் பாலஸ்தீன் நிகழ்ச்சிகள் தக்க சான்றுகளாம். இவையேயன்றி மனிதர்க்கு இயற்கையாய் உள்ள அறிவின் குறைவும் (அறியாமை என்றுகூற அஞ்சுகின்றோம்) உளது. இவைகளை எல்லாம் நாம் ஒருமித்து நின்று உண்மை சத்தியத்தைக் கடைப் பிடித்து எதிர்த்து உண்மைப் பாட்டையில் நடந்துகோடற்குப் பத்திரிகைகளின்றி நம் சமுகம் என் செய்யும்? நமது நபிகள் பெருமானின் (ஸல்) திருநாளைப் பத்திரிகைகள் வாயிலாலன்றோ முஸ்லிம்களனைவரும் ஒரே நாளில் கொண்டாடும்படிச் செய்தோம். நம் பெருமானின் திருவுருவப்படத்தை வெளியிட்ட பாதகச்செயலைப் பத்திரிகைகளாலன்றோ நம்மவர், அனைவரும் அறியுமாறு செய்து நாம் கண்டித்து நற்பயன் பெற்றோம். நம் மார்க்கத்திற்கு முரணாகத் தற்கால நாத்திகப் போக்கும் விஞ்ஞானக் கடவுள் போக்கும் கொண்ட கொடியர்களின் வெறு வாய்க்குப் பத்திரிகைகளாலன்றோ ஆப்பிறுத்தோம். பத்திரிகைகளாலன்றோ நம்மவர் அரசியர்பதவியில் சமுக இயல், வணிக இயல் உரிமைகட்கும் கிளர்ச்சி புரிந்து பாடுபடுகின்றோம் எனவே, இக்காலத்தில் தமக்கென ஓர் பத்திரிகை யில்லாச் சமுகம் ஒருக்காலும் முன்னேற இயலாது என்பது திண்ணம். எல்லோரும் மோட்டார், இரயில் முதலிய சாதனங்களைக் கொண்டு பிரயாணம் செய்யுங்கால் ஒரு சிலர் பழங் கட்டைவண்டிகளால் பிரயாணம் செய்தலை ஒக்கும் நமக்கென நாம் ஒரு பத்திரிகையை அழைத்துக் கொள்ளாமல் வாழ்வது.

ஆதலின், அன்பர்காள்! முஸ்லிம் சகோதரர்காள்! இவ் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" பத்திரிகை உங்களுடையதாகும். உங்கட்கு என்று பெரும் பொருள் உதவியின்றி அறிய முயற்சியில் மாதம் ஒருமுறை இப் பத்திரிகை இதழ் விரிக்கின்றது. உங்களின் மத, சமுக, அரசியல், வணிக உரிமைகளைக் காப்பாற்றுமாறு கச்சுவரிந்துகட்டி நிற்கின்றது. உங்கட்காக உங்கள் பகைவரை ஒடுக்க முனைந்து எழுகின்றது உங்களில் ஒற்றுமையை உரம்பெறச் செய்து உங்களை வயிரம்போன்றதோர் சமுகமாக்கிவருகின்றது. எனவே, இவ்வுண்மைகளை உணர்ந்த நீங்கள், "ஹிபாஜத்துல் இஸ்லாம்" தற்பெருமைக்காகப் பிறர் கட்டுரைகளையோ புதிய கருத்துக்களையோ விலைமாறமுற்படாது நமது பெரியார்களின் கருத்துக்களையே மீண்டும் மீண்டும் இனிய முறையில் அறிவுறுத்தி வருகின்றது என்னும் உண்மையை உணர்ந்த நீங்கள், நமது ஒப்பிலாப் பெரும் சமுகத்தினராய நீங்கள், மெய் வேதத்தை இறைவனால் அருளப்பெற்று அதனைக் காப்பாற்றும் பெரும் பணியை ஏவலிடப்பெற்ற நீங்கள், இனி விழிப்புற்று முன் வருவீர்களாக. இப் பத்திரிகையை இதுகாறும் போற்றிப் பாராட்டித் தமது கட்டுரைகளாலும், பொருளுதவியாலும், சந்தாவாலும் வலிமைப்படுத்தி இப்பத்திரிகைக்கு நற்பெயரை நல்கி, இதனோடு தொடர்புகொண்ட சங்கத்திற்கும் சங்க உத்தியோகஸ்தர்கட்கும் ஊக்கத்தைப்புகட்டி வந்தமைக்கு எம் அகங் குழைந்த வந்தனம். இனி, நம் சமுகத்தினர் அனைவரும் ஒருமுகமாய் இதனை ஆதரித்து மென்மேலும் ஓங்கச் செய்வர் என்று நாம் எதிர் பார்ப்பதோடு, அதுதான் நம்மவர் கடமையும் ஆகின்றது என்றும் அறிவுறுத்த விரும்புகின்றோம்.

வாசகர்கள் அனைவரும் இவ்விரண்டாம் மலரின் முதல் இதழை ஏற்று மனமகிழ்வர் என்றும் எதிர் பார்க்கின்றோம்.

தியாகமே வெற்றித் திறவுகோல்.

"என் வணக்கமும் என் தியாகமும் என் வாழ்க்கையும் என் மரணமும் உலக நாதனும் ஒப்புயர்வற்ற இறைவன் பொருட்டே. இதனையே எனக்கு அறிவுறுத்தப் பெற்றுள்ளது, நானே முஸ்லிம்களுள் முதல்வனவன்"

—அல் குர்ஆன்.

இறைவன் பாட்டையில் ஆற்றும் தொண்டினும் இதைவிட சிறந்ததோர் நன்மையில்லை; தன்னை உயர்த்தவும் தனக்கு உற்சாக உணவு ஊட்டவும் இதனினும் வேறு எத்தகைய ஊழியமும் இல்லை. நம் வாழ்க்கையே, நம் வாணாட்களே, நம் வாணாட்களின் ஒவ்வொரு வினாடி, நிமிஷம், மணி, யாவுமே இறைவனுடையனவாம். எனவே, இவற்றை நாம் இறைவன் பொருட்டே கடத்தாது வேறென் செய்ய இயலும்? இறைவன் தொண்டே நமக்கு சுயேச்சையை அளித்து உலகச் சிறையினின்றும் விடுவிக்கும்; இறைவன் தொண்டே நமக்கு ஈடில் வெற்றியை நல்கும்; இறைவன் தொண்டே சகோதரத்துவம் பெறும் உபாயம்; சுயநலன் அழிக்கும் கோடரி; தீய ஆசைகளைத் தகிக்கும் தீ; பாவம் போக்கும் பரம அவுஷதம்.

சமுகத்தை முன்னேற்றுவிக்கச் சீர்திருத்தங்களை மார்க்கத்திற்கு முரண்பாடின்றிச்செய்தலும், தந்தை தாய்ப் பேணலும் சகோதர வாஞ்சை யுறலும், உற்றார் உறவினர் நண்பர்பால் நல்லெண்ணம் கோடலும் நற்செயல்கள் என்பதில் ஐயமின்று; தன் மனைவியின் அன்பின் மணவாளனாய்இருத்தலும்நன்றாகும்; தன் மக்களின் இன்னுயிர்த் தந்தையாய் இருத்தலும் இனியதாகும்; எனினும் இறைவன்பால் எளிமை பூண்டு இவ் வெளிமையிலேயே மேற்கூறிய செயல்களையும் அவற்றிற்குரிய குணங்களையும் கைக்கொள்ளுதலே சாலச் சிறந்ததென்பதை எடுத்தியம்பவும் வேண்டுமோ? இறைவன்பால் எளிமையை உடைய மனப்பான்மையோடன்றி எச் செயல் செய்யினும் எவ் வெண்ணம் படைக்கினும், பயனின்றாம். இறைவனை முன்னிட்டுச் செய்யாச் செயல்களாலும், இறைவனை முன்னிட்டுக் கருதாப் பாவனைகளாலும் நாம் துக்கத்திற் கீடாவோம் என்பது முக்காலும் திண்ணம். இதனாற்றான் ஒரு மனிதன் முற் சேவை புரிதற்கும் அவனுக்கு அல்லாஹ்வின் பக்தியும் இறுதி நாள் தீர்ப்பின் நம்பிக்கையும் இன்றியமையாதனவென்று திருமறை அறைகின்றது. இஸ்லாம் மதம் உலக மக்கள் எல்லோரும் ஒருங்கே உயர்வுறுமாறு உண்மை புகட்டும் ஓர் ஒப்பற்ற மார்க்கம். எல்லா மக்களும் இன்புற்றிருப்பதே நம் மதத்தின் நோக்கமாதல் பற்றி, இறைவன் எல்லா மக்களையும் தன் பாட்டையில் சேர்க்கும் கருத்துடையான் என்னும் உண்மையை நாம் அடிப்படையாகக் கொண்டே நம் வாணாட்களைக் கடத்தல் வேண்டும். அளவு கடந்த அருளாளனின் கருணை மாரி எங்கும் வியாபித்துள்ளது என்பதை உன்னி நாம் உழைத்தாலன்றி நம் ஊழியம் இறைவனுக்கு அங்கீகாரமாவதில்லை. எனவே, தனிப்பட்ட துறையில் இழிந்து சேவைபுரிவதனால், அச் சேவை அத் தனிப்பட்ட துறைக்குரிய மக்களின் பாராட்டிற்கும், பணத்திற்கும் இலக்காகின்றதே யன்றி எவனுக்கு இலக்காயின் நாம் ஈடேறுவோமா அவனுக்கு இலக்காகின்றதில்லை. நாம் என்றும் பொதுப்பட உழைத்தல் வேண்டும்; பொதுப்பட நினைத்தல் வேண்டும்; பொதுப்பட வாழல் வேண்டும். இல்லையேல் நம் வாழ்க்கை விழலாய்ப் போம். இறைவனின் பொது நோக்கையும் பொதுத் தன்மையினையும் உணர்ந்த உண்மை மார்க்கத்தினராய நாம் பொதுநலனுக்குப் பாடுபடுவதில் நம் நாயகம் (ஸல்) அவர்களைப் போன்றும், அவர்களின் சஹாபிகளைப்போன்றும் தீரர்களாய், தியாகிகளாய், திண்மை பெற்றவர்களாய் இருந்து உலகத்திற்கு வழி காட்டல் வேண்டும். இறைவனின் நோக்கமே நமது உயிர் ஓம்பலினும் உயரிய கடனாகும். என்று இறைவன் இன்னார் இனியார் என்று பிரித்துணராமல், எல்லாத் தேயத்தினர்க்கும் எல்லா உயிர்கட்கும், கருப்பர் வெள்ளையர் சிவப்பர் மஞ்சள் நிறத்தார் என்னும் பாகுபாடின்றி தனது தனிப் பெருங் கருணையை எஞ்ஞான்றும் சுரந்த வண்ணமாய்

இருக்கின்றான் என்னும் நுண்ணிய உண்மையைத் திருமறையால் நன்குணர்ந்து கொண்டோமோ, அன்றே நாமும் பொதுநலச் சேவகர்களாயினோம். திருக் குர்ஆனும், திருச் சம்பிரதாயங்களும், மதக்கட்டளைகளும் இடித்துரைக்கும் பொதுநோக்கும் பொதுநலன்பற்றி வாணாட்களை ஈடுபடுத்தலும், சத்தியச் சன்மார்க்க மதத்தின் உத்தமப் போக்குடையோர்க்கே உண்டாகும். நம் சொந்த கருமங்களினும் பொது நலன்பற்றிய கருமங்களே முதல்வன என்றும், தன் வயிற்றின் பொருட்டும், தன் மனைவி மக்கள் பொருட்டும் தன் செல்வத்தின் பொருட்டும் சதாகால விவகாரத்தில் ஆழ்ந்திருப்பதினும் பொது நலப் பண்பின் பொருட்டு உயிர்த் தியாகமும் செய்தல் சிறப்புடையதென்றும் நம் சன்மார்க்கம் எடுத்தோதுகின்றது. இவ்வுண்மை இறைவனிலும் அவன் இறுதித் தீர்ப்பு நாளிலும் நம்பிக்கை உடையார்க்கே இனிது புலனாகும். ஆதலாற்றான் உண்மை முஸ்லிம்களே பொதுநலத் தொண்டர்களாதற்கு எல்லாப் பொருத்தங்களும் படைத்தவர்களாகின்றனர். எனவே, தன்னையும் தனது எல்லாவற்றையும் அடக்கி ஒடுக்கிப் பொதுவாகிய இறைவனின் பெருந்துறையில் மடக்கிச் செலுத்தும் செயலே தியாகம். இத்தகைய தியாகம் செய்ய வல்லவரே உண்மை மதத்தின் நுண்மையறிந்த நல்லவர்கள். இத்தகைய தியாகிகளின்றி இவ்வுலகம் என்றும் இகபரமிரண்டினும் ஓங்கிச் செழிப்புறாது.

இவ்வுலகத்தில் எத்தகைய செயல்களால் நமக்கு இவ்வுலகப் பிரதிபலன் இல்லையோ, அஃதாவது கைமாறின்றி புரியும் கருமங்களால் நமக்கு ஆனந்தம் உண்டு என்பதில் ஐயமில்லை. உதாரணமாக நல்ல தோழன் ஒருவனுடன் அன்பு பூண்டொழுகுகின்றோம். இத் தோழமையினால் நாம் ஒரு பிரதிபலனும் அடைவதாயில்லை. எனினும் தோழன் நம்மைக் காண வந்தான் எனவுமே நம் முகம் மலர்கின்றது. இஃதே போல் கைம்மாறு கருதாது நாம் ஆற்றும் எல்லாச் செயல்களிலும் இன்பம் உதிக்கின்றது. இத்தகைய இன்பம் நாம் என் பெற்றோம் எனின், அஃது இறைவனால் அளிக்கப் பெற்றதனாற்றான். நம் பக்தன் சுயநலமின்றி இத்தொழிலைச் செய்தனன், சுயநலமின்றி ஆற்றும் எல்லாக் கருமங்களும் பொதுநலக் கருமங்களே ஆகின்றன, எனவே பொதுநலனுக்குப் பாடுபடும் நம் பக்தனுக்கு நாம் சிறிது கருணை சுரப்போமாக என்று இறைவன் திருவுளங் கொண்டனன் போலும். இனியதோர் நட்பிலே இத்துணை இன்பம் உண்டாயின், எல்லாவற்றினும் இனிய, சிறந்த பொதுநல ஊழியத்தில் எத்துணை இன்பம் இறைவனருளால் சுரக்கும் என்பதை நாம் இச் சிறிய எடுத்துக் காட்டினின்றும் இனிதுணரலாம். இக்காலத்தில், கடந்த நூறு ஆண்டுகளாக வெள்ளையர்கள் மாதர் போகத்தையும் மாதர் ஊழியத்தையும் மாதர்க்கு ஏவல் புரிதலையும், மாதர் உயர்வையும் பற்றியே எண்ணிச் சிந்தித்து நூல்கள் வரைந்து வாழ்க்கை கடைப்பித்து வருகின்றனர். எந்த நூலை எடுப்பினும் அந்நூலின் கண் மாதர்களே பட்டுப் பூச்சிகள் போல் உலவுகின்றனர். மாதர் என்னும் பதத்திற்கும் அம் மாதர்களால் உண்டாகும் சுகத்திற்கும் நவநவமான வண்ணங்களால் அலங்காரம் செய்யப் பெற்றுள்ளது. மாதர் என்னும் பதம் தேனினும் இனியதோர் சொல்லாய் விட்டது; அவர்கள் அளிக்கும் இன்பம் அமிழ்தினும் சுவையுடையதாயிற்று. என்னை? பொது நலம் கருதாது, சுயநலத்திலும் சுய வாழ்க்கையிலும், சுய இன்பத்திலும் காலம் கடத்தத் துணிவு கொண்டமையால் வெள்ளையர்கள் இறைவனின் உண்மையை மறந்தனர்; இறைவனின் இறுதி நாள் தீர்ப்பினை எண்ணுகின்றார்களல்லர்; என்றும் அழியா நம் இஸ்லாம் மார்க்க உண்மைகளை நுகர்ந்தார்களல்லர்; எனவே, மாக்களே போல் தாம் தாம் அநுபவிக்கும் மெய்ச்சுகமே (மெய் = தேகம்) மெய்ச்சுகமென்று (மெய் = உண்மை) தட்டழிந்து நிற்கின்றனர். மாதர் வனப்பும் அவர்தம் இன்பமும் ஆகா வென்று நாம் கூறுகின்றோமன்று. மாதர்தம் போகம் இயற்கையின் போக்கில் உள்ளது என்பதை நம் சன்மார்க்கம் மறுக்கவில்லை, ஆயின், மாதர் தரும் சுகமே எல்லாம் என்றுக் கருதி, சதா காலமும் மாதரைப் பற்றிப் புகழ்வதும் மாதரைப் பற்றி நூல்கள் வரைவதுமாய் மாதர்களையே சிந்தனை செய்து கொண்டு வாழ்வது வெறுப்புடைய தாம் என்று கூறுகின்றோம். பசி என்பது ஓர் இயற்கை உணர்ச்சி. இப் பசி நோயை நல்ல முறையில் அகற்றிக் கோடல் அவசியமே. எனினும் ஒரு மனிதன் காலை

முதல் மாலை வரை, இரவிலும் தான் உண்ட ஊணைப் பற்றியும், உண்ணப் புகும் உண்டிகளைப் பற்றியும், அவ்வுண்டிகளைப் பக்குவப் படுத்தும் முறைகளைப் பற்றியும் பேசிக் கொண்டு, நினைத்துக் கொண்டு இருப்பானாயின் அவனை நாம் எந்த இனத்துடன் சேர்ப்போம்! இஃதே போல் மாதர் சுகமும், மற்றும் தம் தேகத்திற்குரிய எல்லாச் சுகங்களும் நமக்கு அவசியமாயினும், அவையனைத்தும் நமது முழுக்காலத்தையும் ஈடுபடுத்தற்கு உரியவையாகா. எந்த விதமான சுகத்திற்கு, எந்த விதமான சேவைக்கு, எந்த விதமான எண்ணத்திற்கு, எந்த விதமான வாழ்க்கைக்கு, நம் இளமை வாலிபம் மூப்பு இவை பாதகம் பயவாவோ, அந்த விதமான சுகமே உண்மைச் சுகம், அதற்காக ஆற்றும் தொண்டே உண்மைத் தொண்டு, அத்தகைய தொண்டில் ஈடுபடுத்தப் பெற்ற வாழ்க்கையே உண்மை வாழ்க்கை.

இவ் வாழ்க்கை பொது நலனுக்கு ஆற்றும் வாழ்க்கையே என்பதை நமது சத்தியச் சன்மார்க்கம் ஒன்றுதான் வலியுடன் செப்புகின்றது. காலதேச வர்த்தமானங்கட்கு கட்டுப் படாது நம் மனம் வேலைசெய்ய வேண்டுமாயின, நாம் சதாகாலமும் இறைவன் எண்ணத்திலேயே அசைவுற் றிருத்தல் இன்றியமையாததாகும். மற்றெல்லா எண்ணங்களும் பருவ வேறுபாட்டாலும், திறமை, தேசம், விவகாரம் முதலிய வேறு பாடுகளாலும் அழிவுபடும். எனவே, உலக பந்தத்திலேயே முற்றிலும் உழலாமல், எந்த வழியைப் பற்றினால் நமக்குத் துக்கம் நீங்கிச் சுகம் பிறக்குமோ, எந்த ஒரு நண்பனைப் பின்பற்றினால் நம் நிலைமையை முற்றிலும் உணர்ந்து ஆறுதல் அளிப்பானோ அந்தவழியே இஸ்லாம் போதிப்பது; அந்த நண்பனே நம் இறைவனாகும்.

சதிபதிகளாய் வாழும் ஒரு குடும்பத்தில், சதி பதியின்பால் நடந்து கோடற்கும், பதி சதியின்பால் நடந்து கோடற்கும், இவ்விருவர்க்கும் உள்ள பரஸ்பர இணக்கத்திற்கும் ஓர் வரையறை உளது. அவ்வரையறை நம் சத்தியச் சன்மார்க்கத் திருமறையின் வாயிலாய் தெள்ளத் தெளிய எடுத்தியம்பப் பெற்றுள்ளது. அவ்வரையறைக்குள்ளாக மனைவி கொழுநன் பாலும் கொழுநன் மனைவி பாலும் அன்புபூண வேண்டி யிருக்கின்றதேயொழிய அவ் வரையறையை நாம் யாதுபற்றியும் மீறுதற்கருகரல்லர்; மீறின் நிச்சயமாய் இறைவன் திருமுன் பாவம் இழைத்தவர்களாய், அதற்குரிய துன்பங்களை அநுபவிப்பதும் திண்ணம். எனினும் மனைவி கொழுநனுக்கு ஒரு திட்டத்துடன் நடந்துகொண்டு, அதற்குரிய மீறிய அளவில் அவள் இறைவன் பக்தியில் ஈடுபட வேண்டியவளாகின்றாள். இஃதே போல் கொழுநனும் திருமறைச் சட்டத்திற் குட்பட்டு மனைவிக்குரிய அளவில் அன்பும் கடமையும் செய்ய வேண்டியவனாகின்றான். இவ்வரையறையைக் கடந்து மற்று அவன் அன்பும், இறைஞ்சுதலும் இறைவனுக்கே உரித்தாகின்றது என்பது குறிப்பிடத் தக்கதாகும். இவ்விருவரும் இறைவனின் அடிமைகளே. ஆயின் அவ்வடிமைத் தன்மையில் அவர்கள் ஆற்ற வேண்டிய சில ஏவல்களைப் போன்றதாகும் மனைவி மகன் வாழ்க்கை கடமை என்பதை ஒருவரும் மறப்பதற்கில்லை; இதனை நம் திருமறை முக்காலும் வலியுறுத்திச் செப்புகின்றது. ஈதன்றி, மனைவி மக்களை விடுத்துப் புறம்போந்து காடுதிரிந்து நாடுகள் அலைந்து துறவு மார்க்கம்பற்றி நிற்றலால், இறைவன் அருளை இனிது பெறலாம் என்பதில் ஆழ்ந்த அறிவோ, திருமறைச் சம்மதமோ இருப்பதாகத் தெரியவில்லை. இறைவனின் அடிமைகளாய் இருந்து இறைவன் திருக்கட்டளைகட் கிணங்க குடும்பம், வர்த்தகம், மற்றும் உள்ள விவகாரங்களில் சட்டத்திற் குட்பட்டு ஈடுபட்டு, இறைவனைப் பேணுதலே இக பரம் இரண்டிற்கும் இன்பம் ஊட்டும் ஈடற்ற மார்க்கமாம். எனவே, கடுந்துறவினாலும் பயனில்லை; ஆழ்ந்த உலக சுகத்தினாலும் பயனில்லை. இவ்விரண்டிற்கும் பொதுவில் உள்ள நடுப்பாதையில் நடந்து செல்வதே இறைவனை அணுகும் முறை என்றும், இதனைத்தான் நம் இறைவன் திருமறையில் அருள்புரிந்துள்ளான் என்றும், இதனைத்தான் நம் நாயகம் (ஸல்) அவர்கள் நம்மனைவர்க்கும் வழிகாட்டியாய் இருந்து கடைப்பிடித்தார்கள் என்றும் நம்மவர்கள் ஓர்ந்து கொள்ளல் வேண்டும்.

நிற்க; இவ் வாழ்ந்த நுண்ணிய கருத்தினை அறிய இயலாதவர்களாய் மேனாட்டினர், முஸ்லிம்கள் பெண் மோகங்கொண்டவர்கள் என்று தூற்றுகின்றனர். ஆயின்

முஸ்லிம்கள் மாதர்களை வெள்ளையர்களைப் போன்று மோகங் கொள்ளவில்லை என்பதை நாம் மேனாட்டார்கட்கு அறிவுறுத்தக் கடமைப் பெற்றுள்ளோம். துறவுபூண்டு செல்வதில் எட்டுணையும் தியாகச் சிந்தை இருப்பதாய்க் கூற முடியாது. அஞ்சி ஓடும் ஒருவனை வீரன் என்பது எத்தகையதாகும்! இஃதேபோல் முற்றிலும் மாதர் போகத்திலும் மற்றும் உள்ள எல்லா உலக விவகாரங்களிலும் ஆழ்ந்திருப்பவர்களையும் தியாகிகள் என்று கூறற்கியலாதாம். எனவே, தியாகம் என்பது உலக முன்னேற்றத்திற்கு இறைவன் சட்டதிட்டங்கட்குட்பட்டு சேவை செய்தலேயாகும். இதனை முற்றிலும் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்தார் இறைவனின் திருக்கருணைக் குரியவராவர் என்பது திண்ணம்.

சங்கடம் யாருக்கு.

ஜனாப் M. A. மலிக்சாஹிப் வரைவது.

(சென்றமாதத் தொடர்.)

சன்மார்க்கநெறி விலகி, சத்வழிதேரியா
சத்தமிடும், ஒருவனுக்கு
சங்கடம், சங்கடமே!

ஞானமுள்ள உலகமே? எண்ணிறந்த விசித்திர, விசித்திரமான, சித்திரப் படங்கள் பிரதிபிம்பப்படங்கள் முதலியன மிக மலிந்து பிரபலித்து பரந்து காணும், இக்காலை, நாம் அவைகளை நோக்கும்போது அவைகளும் தற்கால நவீன நாகரீக லோகத்தின் ஓர் பிரதான அங்கமாக ஏற்பட்டிருக்கின்றன வென்றே, நாம் கருதவேண்டிய திருக்கின்றது.

இதனால், இம்மண்ணுலகு நீங்கலாக தற்காலம் இதுபோல் இங்கே தனிப்பட்டு ஒரு காகிதலோகமும், உண்டாகித்தான் இருக்கிறதென்று சொல்ல, நாம் கொஞ்சமும் பின்னடைய வேண்டியதில்லை.

சித்திரஸ்ரூபங்கள் அல்லது பிரதிபிம்பப் படங்களைத் தாங்கி நிற்கும், வேடிக்கையான இக் காகித லோகமோ பிரமிக்கத்தக்க மிக்க விசாலமான, அப்லாதூனின் பிரதிபிம்ப லோகத்தை விட, மிகப் பெரிதென்று தான் கொள்ளல்வேண்டும்.

அப்லாதூன், தனது கட்புலனுக்கு அப்பாற்பட்டு நிற்கும், அவனுடைய பிரதிபிம்ப லோகத்தை, காட்சிபொருள் இயாவற்றினுடையவும் உறைவிடம் அல்லது இருப்பிடமென சித்தாந்தப் படுத்துகின்றான்.

ஆனால் நமது கண்களுக்கு முன்னே கூத்தாடுகின்ற இக்காகித லோகமோ, சர்வ சிருஷ்டி களினுடையவும், உள்ளும் புறமுமான யாவற்றையும் தாங்கி நிற்கும் ஓர் எல்லையற்ற விசாலமான பிரத்தியட்ச ஸ்தல மென்றே நாம் நினைக்க வேண்டிய திருக்கின்றது.

உயர்வு, தாழ்வு, லக்ஷணம், அவலக்ஷணம், புகழ், பரிகாசம், நாணம், நிருவாணம் முதலிய சமஸ்த நிலைகளையும் கண்கூட எடுத்துக்காட்ட ஹேதுவாய் உருவப் படங்களைத் தாங்கி நிற்கும், இக்காகிதலோகம், எக்காலத்தில் எப்படி உருவெடுத்தது? அது மனிதனுடைய ஒப்பற்ற உயர்வான ஞானத்தை எந்த ஸ்திதிக்கு உட்படுத்தினது? அதனால், அவப்போதைய சத்சமய சம்பிரதாயங்கள், எத்தகைய தீர்ப்பளித்தன? என்பனபற்றியும் நாம் தெரிந்துக் கொள்ள வேண்டிய தவசியமேயாகும்.

அழிந்து நிர்மூலமாய்ப் போகிற மனிதர் தம் கண்களுக்கெட்டா வெகுதூரத்திலும், அப்படியே மறைந்தும், உருக்குலைந்தும் போகின்ற சிருஷ்டிகளை சதா தம் திருஷ்டியில்வைத்துக்கொள்ள வேண்டுமென்று அவர்களுக்கு ஏற்பட்ட ஆர்வமேலீட்டின் காரணத்தால் நிகழ்ந்த பலனே சித்திரம் வரைதலுக்

கும் படம் பிடித்தலுக்கும், சந்தர்ப்பங் கிடைத்த ஆரம்பதசையாயிருந்திக்கிறதென் பதை எவரும் ஒப்புவர்.

உதாரணமாக உலகின்கண் மகா பெரிய வீரனும் மிக்க பராக்கிரம சாலியாயும், பெயர் பிரஸ்தாபம் பெற்று விளங்குகின்ற ஒருவன் இன்று ஜீவனோடிருப்பதையும், அப்படியே அவன் நாளை மரித்துப்போவதையும் மனிதர் உணர்ந்து அதிசயிக்கத்தக்க அற்புதப் பிறவியாகிய அந்த சூரன் தங்களை விட்டுப் பிரிந்து போகாமலும் தங்கள் கண்களை விட்டு மறைந்து போகாமலும் செய்துக் கொள்ள வேண்டிய உபாயம் என்ன? என்பதைக்கருதி அவனுடைய யதார்த்தஸ்ரூபம் தங்கள் பார்வைக்கு சதா ஏற்படத் தக்கதாயும் அவன் தங்கள் எதிரில் எப்பொழுதும் பிரசன்ன மாயிருக்கத்தக்கதாயும் அவனைப் போல் சித்திரம் வரைந்துக்கொள்ளவும் பிரதிபிம்பம் எடுத்துக் கொள்ளவும் சித்தங்கொள்ளவே தான் இந்த இயக்கம் தலை எடுக்கக் காரணமாயிற்று.

விவேகிகளே! இந்நோக்கந்தான் மேலும் இக்கிரியை தான் (Hero worship) "பிரபலஸ்தர் சேவகம்" "குரு பூஜை" முதலிய அஞ்ஞான வணக்கத்துக்கு அடிப்படையும் ஆதியுமாயிற்றென்பதைத் தெரிந்துக் கொள்வீர்களாக.

அறிவற்ற மனிதர்களுக்கு கடவுளாக ஏற்பட்டிருந்த தேவதைகள் தங்கள் முன்னே வரவும் அப்படியே அவைகளுக்குத் தாங்கள் பணிவிடை செய்யவும், அவைகளை தரிசித்து பலன் பெறவும், மேலும், அவைகள் ஸ்தூல உருவெடுத்து தங்கள் கிரகங்களில் வசித்து வரவும், அதனால் தங்கள் கிரகஸ்தர்கள் எத்தகை, ஆபத்தையும், தீங்கையும் விட்டு, தற்காப்படையவும், அப்படியே அவைகளுக்கு முன், தாங்கள் சாஷ்டாங்கத்தில் விழவும், மேலும் எப்பொழுதும், அவைகளை கடவுளே! ஈஸ்வரனே! என்று தியானித்து வரவும், அத்தகைய சொரூபங்களின் மூலம், தங்கள் இதயம் சாந்தியடையவும், கல், மண், பொன், வெள்ளி, முதலிய வஸ்துக்களில் தங்கள் நம்பிக்கையினுவுள்ள கோள்கையை அப்படியே, உருவகப்படுத்தி உருவச்சிலை செய்து வைத்துக்கொள்ள வேண்டிய இந்த வழி தவிர்த்து, இதற்கு வேறென்ன உபாயந்தான் செய்து கொள்வர்.

மிகப்பூர்வீகக் காலத்தில், உலகம் வழி கெட்டுப்போய், அது அபத்த அனுச்சாரத்துக்கும், விக்கிரக ஆராதனைக்கும், அஞ்ஞான இருளுக்கும், ஈடுபட்டுப் போனதற்கு, இத்தகைய, உணர்ச்சியினால், ஏற்பட்ட இச்செய்கைதான் முக்கிய காரணமாயிற்று.

அப்படியே, இந்தியா, எகிப்து, கலிதேனியா, சீன, கிரீஸ், ஆகிய தேசங்கள் இத்தகைய ஆபாசமான, அபத்த சேவகத்தின் காட்சியாய்த் துலங்கின. அன்றியும் இவ்விடங்களிலேயே, இக்கலை (சிற்பக்கலை) சம்பூர்ண வெற்றி பெற்று, சிறந்தோங்க ஏற்பட்டது.

இந்தியாவிலே, முதல் முதலாய், சித்திரம் வரைதலுக்குரிய, ஆரம்பயுகம், பௌத்தனுடைய காலமேயாகும்.

மேலும் இக்காலை, கல்லிலே செதுக்கப்பட்டு, வெளிவந்திருக்கும், ஞாபகபகச்சின்ன உருவச் சிலைகளெல்லால், அக்காலவித்தில் விளைந்த பலனென்று தான், சரித்திரம் கூறுகின்றது.

ஆனால் பௌத்த மதத்தோர், ஒரு சார்பில் தெய்வத்தைக் கூட ஏற்றுக்கொள்வதில்லை. என்றாலும், அவர்களை மற்றொரு சார்பில் கவனிக்கும் போது, அவர்கள் பௌத்தனுடைய சித்திரப்படங்களையும், உருவச்சிலைகளையும், இந்து தேசத்திலுள்ள மலைகளிலும், சிகரங்களிலும், குகைளிலும், மாளிகைகளிலும், சம்பூரணமாக நிரப்பி வைத்திருக்கிறார்கள். வெகு காலமாக தெய்வீகக் காட்சி, பௌத்தனுடைய சொரூபத்திலேயே, அவர்களுக்கு தென்பட்டுக் கொண்டிருக்கிறது.

இப்பொழுது மென்ன, இந்தியாவை நோக்குங்கள்! தேசிய, இராஜீய, இயக்கங்களில் ஈடுபட்டுக் கிடக்கின்றன. பல தலைவர்களுடைய முகப்படங்களும், முழுச்சித்திரருபப் படங்களும் சாமான்ய ஜனங்களை மாத்திரமல்ல. கற்றறிந்த பலரையுங்கூட என்ன கதிக்குள்ளாக்கி யிருக்கின்றன? நல்ல படித்துத் தேர்ந்து, "பாரட்லா" பட்டம்பெற்ற இராஜதந்திர நிபுணரான சுதந்தரவாதியாகிய "மோஹன்தாஸ் கரம்ஷந்த் காந்தி" ஜீவனோடு இருக்கையிலேயே, அவருடைய பிரதிபிம்பப்படமும், சித்திரப்படமும், இந்துக்

களுக்கு மத்தியில் ஆராதனைக்குரிய தேய்வீகப்படமாய்த் துலங்குகின்றது. படத்தின் மேல், புட்பஹாரங்களிட்டு, பஜனையோடுகூட ஊர்கோலம் நடத்தப்படுகிறது; அதற்கெதிரில் பலர் கைகூப்பி நிற்கின்றனர். பலர் முழந்தாளிட்டுக் கிடக்கின்றனர்.

பொதுமக்களுக்கு லௌகீக ஞானத்தைக் கொடுக்கவும், வைதீக ஞானத்தை ஊட்டவும். பிரதிக்ஞை கொண்டுள்ள, இந்த சிறந்த தேச பக்தர் ஜீவனோடிருந்து, இத்தகைய கிரிகைகளை தமது கண்ணுறப் பார்த்தும், செவியாறக் கேட்டுங்கூட இம் மூடக்கிரியைத் தடுக்க அவர்மனம் சம்மதிக்கவில்லைபோலும்,

"பகவத் கீதையை", தம் அகத்தில் வைத்திருக்கிற இவருடைய நாமம், "மஹாத்மா" என்ற கூக்குரலுக்கு உட்பட்டதுதான் காரணம், இந்துக்கள், இவரை கிருஷ்ண அவதாரமென நினைத்தனர். அமெரிக்க, "ஜோன்ஸை"ச் சேர்ந்த ஒருவகை, கிறிஸ்துவ கோஷ்டி, எதிர்பார்த்திருந்த "மேசியா" இவரே என்று சொல்லத் துணிந்தனர்.

இத்தகைய குளப்பத்தினுடே வட இந்திய முஸ்லிம் உலகம் மௌனம் சாதித்தது. ஆனால் எப்படியாவது தென் இந்திய, நமது இளம் வாலிபர்களை வழி நடத்தி, மேதாவிஸ்தானத்தை அடைந்துவிட வேணுமென்று, தமது பத்திரிகையிலும் விழா மலரிலும், தாம் ஆக்டிங் சப் மாஜிஸ்ட்ரேட் பதவியில் அமர்ந்தபோது, எடுத்த தமது பிரதிபிம்பப் படம் சிங்கப்பூர் சென்றபோது எடுத்த தமது புன்னகைப் புகைப் படம் கப்ர், கொடி வணக்கப் பிரசாரத்தின் போது நீண்ட அங்கி தரித்தெடுத்த தமது ஆலீம் சாப் படம் ஆகிய விதவித, மான படப் பிரேமைகொண்ட நமது "தாவூத்ஷா B. A" பட்டதாரியோ, அவர் ஒரு சிறிதும், மயங்காமலும், தயங்காமலும் தமது மாதாந்தர சஞ்சிகையில் "மஹாத்மா காந்தி" ஒரு உண்மையான முஸ்லிமே" என்று தமது ஞானத்தை சம்பாதிக்கிற இளங்காளைகளுக்கு, பஹீரங்கப் பறை சாற்றி "பத்வா" கொடுத்துவிட்டார்.

அவர் அர்த்தமற்று இப்படியாக பத்வா கொடுத்துவிடவில்லை; அவர் சாமான்யரா? ஒரு அபூர்வமான B. A. டிக்ரியல்லவா? "ரூஹுல் அக்ஸம்" என்ற அரபி மொழிக்கெதரில், "மஹாத்மா" என்ற வார்த்தையை முன் வைத்துப் பார்த்தார். ஆழ்ந்து யோசித்தார், படுத்தார், உருண்டார், புரண்டார். சூரியன் உதயமாவதை எதிர்பார்த்தார். விடிந்தது, உடனே இறகைக்கெயிலெடுத்தார். இரண்டு வார்த்தைக்கும், வித்தியாசம் அவ்வளவாய்க்காணாமல், ரூஹுல் அக்ஸம் என்று ஏன் இவரைச் சொல்லச்கூடாதென, சிந்தித்து உடனே "மஹாத்மா காந்தி ஒரு உண்மையான முஸ்லிமே" என்று பெரிய எழுத்தில் நன்றாய்ப்பதிய, ஊன்றி எழுதி விட்டார்.

இதனால் ஒரு உண்மை முஸ்லிமின், அகபுற லக்ஷணத்திற்கு, மிஸ்டர் M. K. காந்தியின், "நப்ஸ்" தான், முன் மாதிரி, ஸ்ரூபம் எனக் கணித்துத் தீர்ப்பளித்தார் போலும்.

வாசகர்களே! இப்படியாக நான் பிரஸ்தாபிப்பதை வெறும் சிலேடையாகக் கருதிவிடாதீர்கள். கூறிய கருத்துக்கு, தக்க ஆதாரமுள்ள தஸ்தாவேஜ்கள் என் பார்வையில் இருந்துக் கொண்டிருக்கின்றன.

எனவே இந்த சந்தர்ப்பத்தில், சத் புருஷனாகிய "M. K. காந்தி", நல்ல வேளையாய், இத்தகைய வெறுங் கூச்சலுக்கு நான் அருகனல்ல; இதோ! நான், "கீதையின்" குரல் ஒன்றுக்கே செவி கொடுக்கும் ஒருவகை ஹிந்து மதஸ்தன் தான் என்று ஆணையிட்டுக் கண்ணீர் வடித்தார்.

அவர் இத்தகைய வீண் கூச்சலுக்காக அனுதாபப்பட்டார் என்றாலும் அவருடைய உருவப்படச் சேவகத்தை வெறுக்க, கீதையின் தத்துவம், இடங் கொடாமலிருப்பது, தான் நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது.

சரித்திர ஞானிகளே! அக்காலத்தில், கௌதம புத்தன்", மதசீர் திருத்தக் காறன் என்று விளங்கினான். விக்கிரக ஆராதனையை வெறுத்தான். ஆனால், சித்திரம் வரைதல், சிலை செய்தல், ஆகிய வித்தையின் செல்வாக்கில் அவனுடைய உருவச் சிலைக்கும். சித்திர சுரூபப் படத்துக்கும் அளவற்றுப் போய், புத்த சேவகமே எங்கும் பிரபலித்துப் போயிற்று.

புத்தனைவிட "கரம் க்ஷந்த்காந்தி", தாழ்ந்தவரல்ல; இவருடைய ஜீவிய தசையிலேயே, இவருடைய ஸ்ரூபம் இந்தக் கதிக்கு, உட்பட்டிருக்கும் போது, இவருடைய அந்திக்காலத்துக்குப் பின் இவருடைய உருவச் சிலைக்கி

என்ன நடக்கு மென்று நாம் சொல்லத் தேவையில்லை.

எனவே முற்காலத்தில் சித்திர சுரூபங்களால் பிரபலித்த அஞ்ஞான நிகழ்சியின் பால் அக்காலத்திலுள்ள உண்மை மதங்களின் பரலோக கிரந்தங்கள் இயாவும் சித்திர ஸ்ரூபம் வரைதல் உருவச்சிலை செய்தல் சம்பந்தமாய் என்ன தான் தீர்ப்பளித்திருக்க கூடும்?

எனவே! உருவப்பட சம்பந்தமாய் குறிப்பிட்டு நாம் எடுத்துக் கொண்ட ஆராய்ச்சிக் கிரமத்தில் இங்கே முதலாவதாக (8) வது அம்ஸத்தை எடுத்துக் கொள்வோம். அதுவே முக்கியமானது.

"ஷரீஅத் தாவூத்நபீ" அவர்களுடைய நியாயப் பிரமாணச்சட்ட மானுலும் சரி, மேலும் இக்காலத்திலுள்ள, எந்த உண்மையான மதங்களானுலும்சரி, அவைகள் ஏதேனும், உருவச் சிலைகளையோ, சித்திரச் சொரூபங்களையோ செய்து வைத்துக்கொள்ள அனுமதித்திருக்கின்றனவா? என்பதைக் கவனிப்போம்.

மொத்தத்தில் அக்காலத்தைய பரிசுத்த வேதங்களாகிய பரலோகக் கிரந்தங்கள் இயாவும், சிலை செய்வதையும், சித்திரசொரூபம் வரைவதையும், முற்ருய்விலக்கி அத்தகைய செய்கைகள், "மல்வூன்" சபிக்கப்பட்ட மனிதனுடைய செய்கை என்றே: தீர்ப்பளித்திருக்கின்றன.

ஆதாரமாக கிரிஸ்தவர் கையாண்டுவருகிற தற்காலத்திய, "தௌரூத்" "ஸபூர்" என்ற "பழைய ஏற்பாட்டி" விருந்து கிடைக்கும் சில பிரமாணங்களை இதனடியில் தருகின்ருேம்.

"விக்கிரகங்களை நாட்டாமலும்" வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்களை உங்களுக்கு உண்டாக்காமலும் இருப்பீர்களாக நான் உங்கள் தேவனுகிய கர்த்தர்.—லேவி. 19—4;

(2) "நீங்கள், உங்களுக்கு விக்கிரகங்களையும், சொரூபங்களையும், உண்டாக்காமலும், உங்களுக்குச் சிலையை நிறுத்தாமலும் சித்திரந்தீர்ந்த கல்லை, நமஸ்கரிக்கும்பொருட்டு, உங்கள் தேசத்தில் வைக்காமலும் இருப்பீர்களாக, நான் உங்கள் தேவனுகிய கர்த்தர் —லேவி. 26—1;

(3) என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ் தண்ணீரிலும், உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பாக ஒரு சுரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்" நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும், வேண்டாம்.

உபாகமம். 5—7;

(4) "கர்த்தருக்கு அருவருப்பான காரியமாகிய, தொழிலாளிகளுடைய கைவேலையால் செய்யப்பட்டதும் வார்ப்பிக்கப்பட்டதுமான யாதொரு விக்கிரகத்தை உண்பேண்ணி ஒளிப்பிடத்திலே வைக்கிறவன், சபிக்கப்பட்டவன் என்பார்களாக" அதற்கு ஜனங்கள் எல்லாரும் பிரதியுத்தரமாக, "ஆமேன்" என்று சொல்லக்கடவர்.—உபாகமம். 27—15;

(5) சொரூபங்களை வணங்கி, விக்கிரகங்களைப்பற்றி, பெருமை பாராட்டுகிற யாவரும் வெட்கப்பட்டுப் போவார்களாக. தேவர்களே! நீங்கள் எல்லாரும் அவரைத் தொழுதுக்கொள்ளுங்கள். சங்கீதம். 97—7;

மேற்கண்ட மேற்கோட்கள் யாவையும் ஊன்றிக் கவனிக்கும்போது, "ஸாமிய" கோத்திரத்தாரின், மிகப் பூர்வ, மதங்களெல்லாம் சித்திரஸ் ரூபம் செய்தல், உருவச்சிலை செய்தல் முதலிய கிரியைகளை முற்ருய்க் கண்டித்து, விலக்கியிருக்கிறதாய்ப் புலப்படுகின்றது.

அப்படியே, அக்காலத்தில் கிளம்பிய, பரிசுத்த, தீர்க்கதரிசிகளெல்லாம், இச்செய்கை முற்றிலும் கூடாதென்றும், "ஹறாம்" என்றும் தீர்ப்புக் கூறியிருப்பதாய் மிகத்தெளிவாய்ப் புலப்படுகின்றது.

சிலர், மேற் கூறிய பிரமாணங்களிலிருந்து, "சேவிக்கும்", அல்லது, "பூஜிக்கும்", நோக்கத்தில், உருவச்சிலைகளையும், சித்திர சொரூபங்களையும் செய்யக்கூடாதென்று, கட்டுப்படுத்துவதென்றக் கருத்துக் கொள்ளலாம்.

ஆனல், மேற்கண்ட, பிரமாணங்களை, ஆழ்ந்துக் கவனித்து, நுணுக்க ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளும்போது, அவைகளில் "செய்தல்" "சேவித்தல்" என்ற, இரு வாக்குகளின் பால், எந்த வஸ்துவுக்கும் ஒப்பான, யாதொரு சொரூபத்தை, உண்டாக்க

ியிருப்பதிலிருந்து, வணக்கத்துக்கன்றி, றெதற்கானாலும் சரியே, சித்திர ரூபம் ய்தல், சிலை செய்தல், ஆகிய இக்கிரியை ற்றிலும், விலக்கப்பட்டிருக்கிறதென, எவ ் ஸ்பஷ்டமாய்த் தெரிந்துக் கொள்வர்.

ஏனென்றால், சித்திர சொரூபங்களைச் ய்தல், உருவச்சிலை உண்டுபண்ணல் ஆகி வை, ஏதோ, ஒரு நோக்கத்தைப் பொருத்த கித்தான் இருத்தல் வேண்டும்.

சிலையோ, உருவமோ, செய்வதின் நோக்கம் ணக்கத்துக்கன்றி அன்பையும், பிரிவாற்றா மையையும் உயர்வையுங் கொண்டதாய்க் ந்தப்படுமானால் அத்தகைய அன்பும், ஆற் மையும், உயர்வும் கடைசியாகப் பாமர னங்களை வணக்கத்துக்கே உட்படுத்திவரும் னுபவ நிகழ்ச்சி என்பது வெள்ளிடைமலை.

அப்படிக்கன்றி, மாபெரும் பாபக்கிரிகைக் ம், கொடுங்கோல் ஆட்சிக்கும் உதாரண ாக இருந்தோரைப்பற்றி, பின்னுள்ளோர் ச்சரிக்கையடைய தாழ்வையும் யிழிவையுங் ருதி, அத்தகையோர் சிலையோ உருவமோ, சய்யப்படுமானால் கட்சிப் பிரதி கக்ஷிகளுக் ள் பரஸ்பரம், மாச்சரியத்தையும் கலகத் தயும் விளைவித்து வீண்பழிக்கும் இரத்தம் ந்துதலுக்குமே இட மளித்துவிடும்.

இனி ஆடம்பரம், டாம்பீகம், கௌரவம், பௌருஷம் கருதி செய்யப்படுமானால் அவை, ானமற்ற வீண் அகந்தையும், அகங்காரத் தயுங்கொண்ட கீழ்மக்கள் செய்கை என காண்டாடப்படுமே யொழிய கற்றறிந்த மதாவிகளின் லக்ஷணமாகக் கருதப்பட ாட்டா; மேலும், அழகையோ ரூபலாவண் த்தையோ கருதி, அலங்கார ஜோடினைக் கன்று செய்யப்படுமானால் அத்தகைய, சித் ப் படங்களும் பிரதிபிம்பங்களும் இச் சக்குரிய பற்பல அருவருக்கத்தக்க ஆபா ான கிரியா ரூபங்களில் மாறி, மனி

எடுத்தல் ஆகிய கிரிகைகள் தீமைக்கே அ படை என விசேஷமாய்க் கருத இடமளி தால், அக்காலத்திலுள்ள பரிசுத்த தீ தரிசிகளெல்லாம் இச்செய்கை மனிதரு உயர்வான ஞானத்துக்கு அடுத்ததல்ல மொழிந்து அவைகளை அறவே செய்யக்கூ தென "ஹறா" மென்று தீர்ப்புக் கொடு ருப்பது ஆச்சரியமன்று.

இவையன்றி, சித்திரங்கள், அறி ஆதாரமான சாதனங்களாக ஏற்பட என்று பலர் ஆட்சேபித்து நிற்க அத்தகைய, ஆட்சேபனைகளுக்கும், பே சமாதானம், இவ்வியாச தொடர்பில் விஸ்தரிக்கப்படு மாகையால் வாசக அதனை பொறுமையுடன் எதிர்பார்த் பார்களாக.

மேலே, சித்திர சொரூபங்கள், உ சிலைகள், எதுவும் செய்யக் கூடா பதற்குரிய பற்பல ஆதாரங்களை, த தைய, "தௌறாத்" "ஸபூர்" என்று லப்படுகிற, "பழைய ஏற்பாட்டி" வி போதிய ருஜுவிட்டிருக்கின்றோம்.

ஆகையால், ஷரீஅத் மூசா நபீ "ஷ தாவூத் நபீ" இவர்களின் நியாயப் பிரம சட்டத்தின்படி, உருவச்சிலைகள், சி சொரூபங்கள் சித்திரப்பதுமைகள், சி படங்கள், முதலிய உருவப்படங்களை, அ செய்யக்கூடாதென்கிற பிரமாணங்கள் வுக்கு வந்திருக்கும் போது, "தாவூத் அவர்களின் "ஷரீஅத்தை" பின்பற்றி நட "சுலைமான் நபீ" அவர்கள், நமது 3, 4, 5 இலக்க அம்ஸங்களில் கண்ட வினாக்களி சொரூபங்களை ஏற்றுக் கொள்ளவோ, படியே அவைகளை தங்கள் மாளிகையி சிம்ஹாசனத்திலோ, வைத்து அல கவோ, அல்லது அவைகளைப் பா

மேலும், நபீகள் எல்லோரும் மகத்தான மாசற்ற‘ ஏக தெய்வக் கொள்கையின் உறுதியான நம்பிக்கையில், துருப்பிடிப்பதற்கு ஏதுவான எத்தகைய அற்ப நோக்கத்துக்கும், செய்கைக்கும் இடங்தரார்கள். நபீகள் எல்லோரும், திரிகால ஞான வரப்பிரசாதம் பெற்றவர்கள். இச்செய்கையினுல் வரும் தீமைகளை முன் கூட்டி ஞானதிருஷ்டியினல் அறிந்து எச்சரிக்கை செய்யும் அற்புத ஞானிகளாவர்.

மொத்தத்தில், எல்லா பரிசுத்த நபீகளின், பூர்வாங்கமான “உசூலும்” இவ்விஷயத்தில் பேதமன்றி, ஒன்று போல், இருந்திருக்கின்றதாகையால், “பிரபலஸ்தர் சேவகம்” “குருபூஜை” க்குசாதகமாய் ஏற்படும் சொரூப செய்கைக்கு, எவ்வகையிலும் அவர்கள் சம்மதி கொடுத்திருக்க நியாயமேயில்லை. மேலும், பரிசுத்த பூர்வ கிரந்தங்களில் எத்தகைய ஆதாரமுங் கிடையாது.

இதனல், சுலைமான் நபீ அவர்களுடைய வாழ்க்கையில், சொரூபம் செய்வதற்கோ, அவைகளைக் கையாடுவதற்கோ எத்தகைய வழியும் இருந்ததில்லை என்று செவ்வனே தெரிந்துக்கொண்டோம் கிறிஸ்தவர் தற்காலத்திய “இன்ஜீல்” என்று கையாண்டு வருவதும், உலகம் அதை கிறிஸ்துவின் மூன்றரை வருஷத்திய ஜீவிய சரிதையே என்று தெரிந்துக்கொண் டிருப்பதுமான “மதா, மார்கஸ், லூகா, யூஹனு” வாகிய இந்நால்வரின் நான்கு “சுவிசேஷநூலாகிய” புதிய ஏற்பாட்டில் உருவச்சிலைகள் சித்திர சொரூபங்கள் சம்பந்தமாய்க் கூறப் பட்டிருப்பதென்ன? என்பதைப்பற்றி ஆராயுங்கால் அதில் கூடும் அல்லது கூடாது என்பதுபற்றி எத்தகைய கற்பனையாவது பிரஸ்தாபிக்கப் படவில்லை. மேலும் அதில் கூறியிருக்க வேண்டிய நிமித்தமும் ஏற்படுவதற்கில்லை.

ஏனென்ருல், “இன்ஜீலானது” தௌராத்தின்” சகல விதி விலக்குகளையும் அப்படி அப்படியே, ஏற்றுக்கொண்டிருக்கிறது.

மேலும், அதில் கிறிஸ்து வானவர், “மோசே” யின் நியாயப்பிரமாணச் சட்டத்தை நிறைவேற்ற வந்தவரே யொழிய அதை அழிக்க வரவில்லை என்று சொல்லுகிறபடியால், மோசேயின் நியாயப் பிரமாணச் சட்டத்தை எத்தகைய மாற்றத்திற்கு மிடமின்றி அப்படியே நிலைப்படுத்துகின்றது.

ஆனல், “ரோமபுரி” யாரும், “எகிப்தி” யரும் கிறிஸ்து மதத்தை ஏற்றுக்கொண்ட பின்னர் அச்சமயம் கிறிஸ்து மார்க்க நியாயப் பிரமாணச் சட்டத்தை சிதைக்கவும், சிருஷ்டிக்கவும் தக்கதான சீர்திருத்த ஏற்பாடு நிகழ்ந்தகாலத்தில் ரோம், எகிப்திய ஜாதியாருக்குள் இயற்கனவே, இருந்துவந்த தங்கள் பூர்வீக “தேவதைகள்” “தேவிகளின்” உருவச்சிலை வணக்கம்; விக்கிரக வணக்கம்; ஆகிய இக் கொள்கையானது, மறுரூப மெடுத்து அவைகளுக்குப் பதிலாக, “கிறிஸ்து” “மரியாள்” “பரிசுத்த ஆவி” ஆகிய உருவச் சிலைகளை சமைத்து அவைகளைச் சேவித்து வந்தனர்.

அங்குள்ள கோயில்களும், மடாலயங்களும், பழைய உருவச்சிலைகளை ஒழித்து, “பிதா” “குமாரன்” “பரிசுத்த ஆவி” என்ற உருவச் சிலைகளுக்கு இடமாயின.

கடைசியாக, ரோமபுரியிலுள்ள சிற்பசாஸ்திரிகள் தங்கள் சிங்காரமான பலவித சித்திர சாமர்த்தியங்களை எல்லாம் மேற்கூறிய சித்திர சொரூபங்களிலும் உருவச் சிலைகளிலுமே காட்டி வந்தனர்.

மேலும் அவர்கள் அப்படிச் செய்து வருவதைத்தான், தங்கள் மதப்பிரசாரத்திற்கு ஏற்ற சிறந்த வழியாகவும் கருதி, இதனல் சிரேஷ்ட புண்ணிய முண்டு எனத் தீர்மானித்து அத்தகைய உருவச் சிலைகளை, தேசமெங்கும் அமோகமாக நிரப்பி வந்தார்கள்.

கிறிஸ்து, அற்புதப்புறவி அற்புத நாதர், அற்புத தேகி, என்ற எண்ணமே உருவெடுத்து அவரை சதா தங்கள் பார்வையில் வைத்துகொண்டிருக்க விரும்பி அவரைப் போல் சித்திரம் தீட்டியும், சிலை செய்தும் வைத்து முடிவாக அவைகளுக் கெதிரில் தெண்டனிட்டு நிற்கவும் நேர்ந்தது.

அன்றியும், கல்வியிலும், நாகரீகத்திலும், மதத்தின்உயர்விலும் ரோமாபுரியாருக்குமேற்பட்டவர்க ளென்றே,. எதிரிடையானவர்கள் என்றே போட்டி போட்ட, “ஈரான்” தேசவாசிகள் கூட தங்கள் நாட்டிலிருந்து, பரதேசங்களுக்கு அனுப்பிவரும் அமோகமான

"செயற்கை பொருள்" களுடனே தங்கள் "அரசர்களுடைய" சித்திர சொரூபங்களையும் சித்தரித்து அனுப்பி வந்தார்கள்.

இங்கிலேயில், அனுகரீக தேசமாகிய "அறபியா" விலுங்கூட உருவச்சிலை செய்வதும், சித்திர சொரூபம் வரைதலுமான இந்தக்கலை மிக்கப்பிரபலித்து, அப்படியே ஏராளமாய்ச் செய்து, அவைகளுக்கு முன்னே தெண்டனிடத்தக்கதான பிரேமை மிக்க, உன்னதசையடைந்திருந்தது.

"விக்கிரஹ" நிக்கிரக பக்தரான தெய்வத்தோளருடைய, பரிசுத்த "தேவாலயம்" 360 விக்கிரகங்களுக்கு இரும்பிடமாய்ச் சமைந்தது.

பரிசுத்த "கஃபா" வின், மாசற்ற புண்ணிய சுவர்களிலே, "இப்றுஹீம் நபீ," "இஸ்மாயீல் நபீ" "ஈஸா நபீ" "மறியம்" (அலை) ஆகியவர்களின் சொரூபங்கள் பலவர்ண மசி கொண்டு சித்தரித்து பதிக்கப்பட்டிருந்தன.

அப்படியே, ஹிஜ்ரீ சகாப்த (8) எட்டாவது வருடம் திரு மக்கா நகரை ஜெயித்தபோது சர்வலோக இரட்சகரான றசூல் நாதரவர்கள் பரிசுத்த தேவாலயத்தில் சேமித்து வைத்திருந்த விக்கிரகங்கள் யாவற்றையும் உடைத்தெறிந்து, சுவர்களிலே தீட்டப்பட்டிருந்த சித்திர சொரூபங்களை தண்ணீரிலே பொதும் வைத்து அழித்து சுத்தப் படுத்தினார்கள். அறபியாவுக்கு, வெளியே இந்தியா துருக்கிஸ்தான், சீன, ஏறக்குறைய முழு உலகமும் இந்த அந்தஸ்தையே பெற்றிருந்தன.

எனவே, சித்திர சொரூபம், உருவச்சிலை செய்தலாகிய இத்தகைய இயக்கங்களி னிமித்தம், லோகமுழுதுமே சிலைவணக்கச் சேவகத்தின் அந்தகார இருளே, நிலவிப்போயிருக்க, திடீரென, "இஸ்லாம்" என்ற ஞானசூரியன் அறபியாவில் உதித்துப் பிரகாசிக்கலாயிற்று.

சரித்திரலோகமே! சற்று ஆழ்ந்து யோசிப்பாயாக. உலகம், இத்தகைய கிரகாச்சாரப்பட சொரூபத்திலே, காணப்படும் தறுவாயில், பிரபஞ்சத்தின் எத்திசையி லிருந்தேனும், ஏகதெய்வக் கொள்கையின் ஞானத்தை போதிக்க, பிரசாரம் செய்ய வெளி கிளம்பிவரும் ஒரு சத்புருஷர், உருவச்சிலை செய்வதையும், சித்திரசொரூபம் வரைவதையும் பிரதிபிம்பப்படம் எடுப்பதையும் பற்றி, அவர் என்னதீர்ப்பு அளிப்பாரோ அந்த தீர்ப்பைத்தான். பரிசுத்த சன்மார்க்கமாகிய இஸ்லாமும் தீர்ப்புக்கூறி, சிலைவணக்கத்துக்கும் அபத்த சேவகத்துக்கும், ஆஸ்பதமாகும் சாதனங்கள் இயாவையும் இனி, எற்படாவண்ணம், வேருடன் அடியோடு பிடுங்கி எறிந்து விட்டது.

அறிஞர்களே!

அக்காலத்தில், சித்திர சொரூபப் படங்களின் மலிவுனல், உலகத்துக்கு விளைந்த பலனையும், இக்காலே சித்திர சொரூபப்படங்கள் பிரதிபிம்பப் படங்களின் பிரபலத்தால் விளைந்துவரும் பலனையும், பாரபட்சமன்றி, சற்று நிதான புத்தியுடன் உங்கள் ஆழ்ந்த கவனத்துக்குக் கொண்டுவாருங்கள்.

கேவலம், "தாவூதியபாகவி" திருக்குறுஆனையும், நபிதிருவாக்குக் கிரந்தங்களையும், சரித்திர நூல்களையும் நேரிய கண்பெற்று நேரே பார்க்காமல், மார்கண் பெற்று, கோணலாய் திருப்பிப்பார்த்ததினுலல்லவா, அக்காலத்துக்கு, உருவப்படம் சித்தரிக்கக்கூடாதென்று செய்தகட்டளை சரி என்றும் இக்காலத்துக்கு பொருத்தமில்லை என்றும் கூறி தனது கூற்றுக்கு திருகுறுஆன் வாக்கையும், நபீ திருவாக்கையும், அறிவற்ற முறையில் பொருள்கொடுத்து விளக்கி, வீண் கூச்சல் போட்டு, "சங்கடம் என்று புலம்பத் துணிந்தனர்.

உலகம் கண் திறந் திறந்திருக்கிறது. ஈய நாணயம் சலாவணியாகாது. தெய்வகட்டளை முன் சிரம்பணி. இன்னமும் விளக்குகின்றேன்

(தொடரும்)

"ஹிபாஜத்துல் இஸ்லாம்"

(முதல் வால்யூம்)

நமது 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' மாசிகையின் முதல் வால்யூம் பைண்டுசெய்து தயாராயிருக்கின்றது. சொற்பப் பிரதிகளே கைவசமுள்ளன வாதலால், சீக்கிரம் ஆர்டர் செய்து பெற்றுக்கொள்ள விரும்புகின்றோம்.

காலிகோ பைண்டு விலை ரூ. 3—8—0; தபால் செலவு வேறு.

விதி என்பது யாதோ?

விதி என்பதைப்பற்றி இஸ்லாம் எவ்வகையில் உணர்கின்றது என்பதை ஈண்டு எடுத்தியம்புதல் அவசியமாகின்றது. ஏனெனின் விதியையும் விதியின் பயனையும் பொதுவாக கீணாட்டு மக்கள் நம்புகின்றனர் என்று மேனாட்டார் கருதுகின்றனர். ஆயின், எல்லாம் விதியின்பயனே என்பது வேறு இறைவனால் நமக்கு கட்டளையிடப் பெற்ற அளவு என்பது வேறு (முன்னையதால்) எல்லாம் விதிபோல் முடியும் என்னும் தத்வத்தால் இறைவன் பெருமைக்கும், மக்களின் தன் முயற்சிக்கும், நற்செயல் துர்ச்செயல்களால் விளையும் பயன்கட்கும் ஒருவிதமான சிறப்பும் இல்லை யென்பது நன்கு புலனாகின்றது. விதிபோல் முடிந்தது. விதியிருந்தது நிதிவந்தது, விதி இருந்தது அரசனாபினன். விதியின் காரணத்தால் உயர்ந்தோன் தாழ்ந்தோனாயினன் என்று கூறுங்காலத்து இறைவன் திருவருள் கட்டளையின் அறிகுறியோ, மனித முயற்சியின் பலாபலனோ குறிக்கப்பட வில்லை என்பது காண்க. எனவே, விதி என்பதற்கு எல்லாச் சிறப்புக்களையும் நல்கி நல்லனவும் தீயனவும் விதியால்தான் மூண்டது என்னும் கருத்து மிகவும் அறியாமையுடையதா யிருப்பதோடு, இறைவனின் தத்துவத்தை வொருவாறு மறுப்பதாயு முள்ளது. இத் தத்துவத்தைத்தான் மேனாட்டார் ''விதி மதம்'' (Fata lism) என்று வழங்குவர். விதி என்பது ஒன்று உண்டு என்று ஒப்புக்கொள்ளும் மதத்தினரை மேனாட்டார் தாம் எவ்வகையில் எத்தன்மைபில் விதியின் தத்துவத்தை உணர்கின்றனரோ, அவ்வகையில் அத்தன்மையிற்றான் மதிக்கின்றனர். ஆயின் விதி என்பது ஓரளவுடையது என்றும் அஃது இறைவனால் இட்ட சட்டம் என்றும் இஸ்லாம் கருதுவதாகப் பிறர் அறிதலவசியமாம்.

எல்லாம்படைத்த அவன், பின்னர் அதற்கு
ஓர் அளவையும் கட்டளை செய்தான்''
—திருக்குர்ஆன்

இதின் வாயிலாய் படைப்பு ஒன்று இருந்தது என்றும், அப் படைப்பிற்கு ஓர் அளவு கற்பிக்கப் பெற்றது என்றும் தெற்றெனப் புலப்படுகின்றது. எவ்வாறு சிருஷ்டி, சிருஷ்டி கர்த்தாவாம் இறைவனை விளக்கும் சான்றாகின்றதோ, அவ்வாறாகவே திறமைக்கும் வளர்ச்சிக்கும் செழிப்பிற்கும் இறுக்கப் பெற்றுள்ள அளவு என்பதும், இறைவன் நம் முன்னேற்றத்தின் பொருட்டு நியமித்துள்ள அசைபடாச் சட்டத்திற்குச் சான்றாகின்றதோடு, அஃது இறைவனையும் மக்கட்கு விளக்கிக் காண்பித்தற்கும் ஓர் அறிகுறியாயும் உள்ளது. இறைவன், உலக சீவராசிகள் இந்த அளவிற்றான் வளர வேண்டும் என்று கருதியே இவ்வுலகைச் சிருட்டித்தான். இத்தகைய சட்டங்களைப் பின்பற்றி இச் சீவராசிகள் வளர்ச்சி பெற்றாற்றான் இத்தகைய முடிவுபெறும் என்னும் கருத்தோடு இவ்வுலகு படைக்கப் பெற்றதால், படைப்பிற்கு வளர்ச்சி அளவும் அவசிய மாகின்றது. குறிப்பிட்ட சட்டத்திற் கிணங்கி குறிப்பிட்ட முறையில் செழிப்படைவதே இறைவனால் இடப்பெற்ற அளவு; விதி; தக்தீர் விதி என்பதை முஸ்லிம்கள் இம்முறையிற்றான் பாராட்ட வேண்டுமே யன்றி, மேனாட்டினர் கருதுமாறு எல்லாம் விதிபோல் முடியும் என்னும் தத்துவத்தோடு பாராட்டுதல் சான்றுடைய தாகாது—ஏனெனில் இஃது தன் முயற்சியையே அழித்துவிடுகின்றது.

இஸ்லாம் மார்க்கம் உலகப் படைப்பிற்கே மதமாக இருத்தலின், உலக மதமாக இருத்தலின், இயற்கையில் உள்ள எந்தப் பகுதியினையும், நுண்ணிய அணுக்கள் முதல் பெரிய அண்டங்கள் இறுதியாக எதனையும் தன்னுள் ஒடுக்கி அமைத்துக் கொள்ளாமல் இருப்பதற்கில்லை. இயற்கைச் சட்டங்களையும் இறைவன் சட்டங்களோடு இணைத்து ஓதும் ஒப்பற்ற மதம் ஈதொன்றேயாகும். எல்லாப் பொருள்களும் தோற்றத்தால் மாறுபாடுடைய பல துறைகளில் செழிப்புற்று வளர்ச்சி யுறினும், இவைகட்கெல்லாம் வளர்ச்சி என்னும் பண்பும் முதிர்ச்சி என்னும்பண்பும் பொதுவாகவே

மாகவே வளர்ச்சி
றது. மனிதன் சில சட்டங்களை ஒட்டி
துகின்றான். மனிதன் வளர்ச்சி முறையை
கள் அநுசரிக்க இயலாது. மாக்கள்
ம் வளர்ச்சி பெறற்கு மனிதனினும் வேறு
_ (சிறிதெனினும்) சில சட்டங்கட்கு
ங்கியே நடந்து கொள்ளல் இன்றியமை
ாகின்றது. இஃதே போல் மனிதன்
முறையாலும், மாக்கள் மற்றொரு முறை
லும், மற்றும் இவ்வுலகில் உள்ள பல்வேறு
டப்புக்களும் பல்வேறு முறைகளாலும்
றவன் குறித்தபடி ஏற்ற மடைதல் வேண்
எனவே இவையிவை குறிப்பிட்ட இத்
றைகளாற்றான் வளர்ச்சி பெறுதல் வேண்
என்று கருதி கட்டளையிடப் பெற்ற
வு எஃதாமோ அஃதே இஸ்லாம் கூறும்
தீர் அல்லது விதி. இவ்வுலகில் எல்லாப்
டப்புக்களும் தோற்றத்தில் மாறுபட்ட
முறைகளை அநுசரித்து இறைவன் கட்ட
யை நிறைவேற்றுகின்றன வெனினும் ஆழ்
துருவிப் பார்க்குங் காலத்து, எல்லாமும்
கட்டளையை நிறைவேற்றுவதில் பரபரப்
டயனவாய்க் காண்டல் கூடும். எறும்பு
க்குரிய அங்கங்கள் உணவுகள் வசதிக
ாடு இறைவன் கட்டளையை மனித
ன்றும் மாறுபட்டு நிறைவேற்றுகின்றது.
ஃதேபோல் மனிதனும் இவ் வெறும்பி
ன்றும் மாறுபட்டு தனக்குரிய அங்
கள் உணவுகள், அறிவு முதலிய
திகள் இவைகளைக் கொண்டு முன்
ற்ற மடைகின்றான். 'இந்த அளவில்
சைபடாக் குறிப்பிட்ட சில சட்டங்கட்குக்
டுப்பட்டு நீ முயற்சி செய், உன் முயற்சிக்குத்
க பலனை அளிப்பவன் நானே' என்ற
டிற்றான் தக்தீர் நின்று விடுகின்றது. எல்
ம் விதிபோல் முடியும் என்னும் கருத்துக்
ாண்டு "நான் களவு செய்தேன்; அதுவும்
் விதியாம், சிறைப்பட்டேன்; சிறைப்பட
... மார்க்கக் கட்டளைகளை மீறி

வார்களாக. திருமறையில் இதுகாறும் கண
பிடிக்கப்பெற்ற விஞ்ஞான வானசாஸ்திர உ
மைகள் உள்ளவாறு இயம்பி இருத்தலே
இன்னார் இறுதிக் காலம் வரை மனிதர்க
சிற்றறிவிற் புலப்படக்கூடிய எல்லா உண்
களும் சுருக்கமாயும் நுட்பமாயும் விளட
யிருத்தலை உன்னுந்தோறும் நம் மறைய
மாசிலாச் சிறப்பு மட்டற்றுப் போதிக்கி
தன்றோ !

நிற்க, திருமறைத் திருமொழிகள் பகலி
கோடா வண்ணம் படைத்தனன் இறைவ
என்று இயம்பி நிற்கின்றன. இரவு ப
மீறுதல் கூடாது என்பது கட்டளை. இ
பகல் மாறுபடுமாயின் புல் பூண்டுகள் மு
மனிதராசி வரையில் உள்ள எல்லாச் சீவ
களும் அற்றுப்போம். எனவே, எல்லாச்
ராசிகளும் தாறுமாறாய் நடந்துகொள
ஒன்றை ஒன்று அழித்துவிடாமல் இ
னின் காத்தல் என்னும் தொழிலை நடா
தற்கு இறைவனால் முன்னரேயே விதி
பெற்ற கட்டளை எதுவோ, அதுவே த
என்று சொல்லவேண்டி யிருக்கின்றது.
முளையை அடித்து, அம் முளையினின்
ஒரு கயிற்றை இறுக்கி, அக்கயிற்றினால் ஒ
னைப் பிணித்திருப்பதாக நினைத்துக் ெ
வோம். கயிற்றின் அளவும் 50 கஜம் உ
தாகக் கருதிக்கொள்வோம். எனவே
கயிற்றால் பிணிக்கப்பெற்ற மனிதன் கயி
அளவாகிய 50 கஜத்திற்கு மேற்பட்ட த
தில் கடுகளவு தூரம் செல்லல் இயலாத
ஆயின் இவ்வைம்பது கஜ தூரத்திற்குட்
இவன் ஆடவும் ஓடவும் பாடவும் இரு
கூடும். இவ் வைம்பது கஜதூர மட்டில்
னுக்கு சுயேச்சை உள்ளது; தன்—(
சிக்கு இடம் உள்ளது; தன்னை வளர்
கொள்ளவும் தன்னை அழித்துக்கொள்
இடம் உள்ளது. இதனை மீறி இவனால் ஒ
செய்ய இயலாது. இக்கயிறுதான் த

ள்ளது. கயிற்ருல் பிணிக்கப்பட்ட மனிதனைப் போன்று விதியால் பிணிக்கப்பட்ட மனிதனும் இறைவன் பக்தியாலும் இறைவன் திருமறைப் போதனை அநுசரிப்பாலும் முன்னேற்றம் பெறல் கூடும். கயிற்றின் தூரத்திற் குட்பட்ட மனிதனைப் போன்றே தீய வழிகளில் உழன்று நரகத்திற்கு ஆளாதலும் கூடும். மற்ருெரு உதாரணம்: மனிதன் இறகு முளைக்கப் பெற்றுப் பறத்தல் இயலாது. தனக்குரிய அங்கங்களைக்கொண்டே தனக்கு வேண்டிய சுக சாதனங்களைத் தேடிக்கொள்ளல் வேண்டும். எனவே, இவனுக்கு அங்கங்களைப்பற்றிய வரையில் வரையறை உள்ளதே தவிர, உயரப் பறந்துபோவதில் வரையறை இல்லை—ஆகாய விமானத்தைத்தன் அறிவால் கண்டு பிடித்துப் பறத்தற்குத் தக்தீர் குறுக்கே நிற்கவில்லை. 'எனக்குப் பறவைகளைப் போல் இறகுகள் கிடையா; ஆதலின் பறந்து போவது இயலாது; கூடாது' என்கின்ருன். விதி என்பது இன்னது என்று அறியா மனிதன். 'உனக்கு சிறகுகள் இல்லை; ஆனுல் நீ உன் அறிவால் கருவிகளைக் கண்டுபிடித்துப் பற' என்று கூறுகின்றது விதி. ஒரு அளவில் வரம்பும், அவ்வரம்பிற்குள் எல்லாவிதமான சுயேச்சைகளும் கற்பிக்கப் பெற்றுள்ளன. இதுவே விதியின் நுட்பமான பொருள்.

மேலும் எல்லாம் விதிபோல் முடியும் என்று சும்மாயிருப்பதை அலசிப் பார்க்குங் காலத்து விதி என்பது மனிதனைச் சுயேச்சையே இல்லாமல் ஆக்கி விடுகின்றது என்றே கூறவேண்டும். விதிக்கே எல்லா வல்லமையும் இருப்பதாக மதிப்பின், மதி(அறிவு)க்கே அவசியமில்லாமற் போகின்றது. நல்லன தீயன இவையென்று மனிதன் தன் வாழ்க்கையில் பகுத்துணர்ந்து நல்லன கடைப்பிடித்துச் செல்லவேண்டும் என்பதே இறைவனின் திருநோக்கம். மனிதன் அறிவிற்குச் சுயேச்சையை அளித்து, இச்சுயேச்சையால் மனிதன் தன்னை சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் ஆளாக்கிக் கொள்கின்ருன். சத்தியமான சன்மார்க்கத்தைப்போதித்து இதனை ஏற்றுஒழுகுவீர்களாக என்று கூறியிருக்கின்ருன். ஆதலின், சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்துச் செல்லுதலும், சன்மார்க்கத்தினின்றும் பிறழ்ந்து துயரப்படுதலும் மனிதனின் சுய அறிவிற்கு ஒப்படைக்கப் பெற்றவைகளே யன்றி, இவை விதியால் தடைபடுத்தப் பெற்றவை யாகா. விதியின் வரையறையினையும் விதியின் உண்மைப் பொருளையும் நன்குணராத மனிதன் எக்காரியம் செய்யினும் அக்காரியம் விதிபோல் முடிந்தது எனக் கூறுகின்ருன். தான் செய்யும் தீய காரியங்களை மறைப்பதற்கு விதியை ஓர் ஆதாரமாகக்காட்டப்படுவதற்கு ஆண்டவனுல் தக்தீர் விதிக்கப்படவில்லை. எல்லாரும் வளம் பெற்றுய்யும் பாட்டை, அளவு. வரையறை எதுவோ அதனையே தக்தீராகவும்; அப்பாட்டையில், அளவில், வரையறையில் உயர்வுறுதலும் தாழ்தலும் சுயேச்சையாகவும் கற்பிக்கப்பெற்றுள்ளது. விதியின் வரையறைக்குள் இருந்து மனிதன் பூரணத்துவம் பெறுதலே இறைவனின் திருவருட் சம்மதம். எனவே, நாம் அறியவேண்டியது யாதெனின், விதி என்னும் ஒன்று உண்டு; அது இறைவனுல் எல்லாப் படைப்பிற்கும் முன்னேற்றத்தின் பொருட்டு கற்பிக்கப்பெற்ற ஓர் அளவே யாகும்; இந்த அளவை மனிதனே, மற்றெந்தச் சீவராசிகளோ, சூரிய சந்திர மண்டலங்களோ, மீறற் கியலாவாம். ஆயின் இவ்வளவிற் குட்பட்டு இறைவனுல் நமக்கு விதிக்கப் பெற்ற நற்பயன்களைச் சுய முயற்சியால் அடைதல் இயலுமாம் என்க. எனவே, அன்பர்கள் விதியின் பண்பையும் அதற்குரிய வரையறையும் ஓர்ந்து, தங்களால் ஆகவேண்டிய முயற்சிகளை விதி என்னும் பெட்டியில் பூட்டி வைத்து விடாமல், அவ்வழியை தம் ஈடேற்றத்திற்கே உபயோகித்துக் கொள்வார்களாக. சுருங்கக் கூறுமிடத்து விதி என்பது நம்மை அழிப்பதற்காக இறைவனுல் அருளப்படவில்லையென்றும், நம்மையும் அவனுல் படைக்கப் பெற்ற எல்லா வற்றையும் மேலேற்றவே அருளப்பெற்றது என்றும் உணர்வார்களாக. விதி என்னும் தத்துவம் மிகவும் நுண்ணியதாய் இருப்பதால் இதனை இன்னும் இதனினும் பன்மடங்கு விரித்து விளக்கல் கூடும். எனினும் மிகவும் நுட்பமான பாகு பாட்டையும், நுண்ணிய இலக்கணங்களையுமே ஈண்டு நாம் சுருங்க எடுத்துரைத்தனம்.

———

சுயேச்சை அளித்தது இஸ்லாமன்றோ?

இவ்வுலகின்கண் உள்ள எல்லாப் படைப்புக்களினும் மக்கட் பிறவி மேலாம் பிறவி என்பதற்குத் தலைமையான ஆதாரம், மக்கட் பிறவிக்கு இறைவன் இன்னருளால் சுயேச்சை என்னும் உயரியதோர் சிறப்பளித்திருக்கப் பெற்றமையே யாகும். இச் சுயேச்சை என்பது நமது சத்தியச் சன்மார்க்கத்திற்றான் அளிக்கப் பெற்றுளது என்பதைப் பின்னர் விவரிக்கும் முன்பாக சுயேச்சை என்பது என்ன, அதற்குரிய இலக்கணங்கள் யாவை என்பனவற்றைக் சுருக்கி விளக்குதல் கடனாகின்றது.

சுய + இச்சை என்னும் இரு சொற்களும் சுயேச்சை என்றாயின. தன் பிரியம் போல் வாழ்தல் என்பதே இதன் பொருள். புறத்தே உள்ள எத்தகைய கட்டுப்பாடுகளாலும் தளைக்கப் பெறாது வாழ்தற்குரிய நிலைமை எதுவோ அதற்கே சுயேச்சை என்னும் பொருள் பொருந்தும் என்க. பிற வேறு கட்டாயங்களால் கட்டுப் பெறாது வாழ்வது என்பதே இதன் லட்சியார்த்தம். ஆனால் மக்கட் பிறவி கட்டுப்படாது வாழ்தல் எங்ஙனம், ஆதலின் சுயேச்சை என்பது வெறும்பதம் ஆக வில்லையோ எனலும் கூடும். இதனை ஆராய்ச்சி செய்யப்புகின் மக்கட் பிறவி சுயேச்சையினை உடையதோர் சிறந்த பெரும் பிறவியே யாம் என்பதினிது விளங்கும்.

இப்பொழுதுள்ள சில சமுக, மத, அரசியற் கட்டுப்பாடுகள் ஏன் சுயேச்சைக்கு இசைந்தன வாய்க் கூறப் படுகின்றன வெனின், இவைகள் அனைத்தும் நம்மாலும், நம் இறைவனாலும் நம் நன்மைக்காகவே ஏற்பட்டனவை யாதலின் மத, சமுக, அரசியற் கட்டுப்பாடுகள் சயேச்சைக்கு முரண் கொண்டவையாகா. மதக் கட்டுப்பாடுகளைப் பற்றிப் பின்னர் ஆராயப் புகுமுன், சமுக அரசியற் கட்டுப்பாடுகளை எடுத்துக்கொண்டு பார்க்கு மிடத்து, சமுகக் கட்டுப்பாடு என்பது நம்போன்ற பத்துப்பெயர்கள் ஒருங்கே சேர்ந்து தம் சுக வாழ்விற்கும், தம் சந்ததிகளின் சுக வாழ்விற்கும் ஏற்றமுடைய சில சட்டதிட்டங்களை வரையறை செய்துகொண்டமையே யாகின்றது. நம்முடைய நல்வாழ்வு குறித்து நாமாகச் செய்துகொண்ட கட்டுப்பாடுகட்கும் நாமே கர்த்தா வாதலின் இதில் சுயேச்சையும் இருக்கின்றது என்று தெற்றெனத் தோற்றவில்லையா? சுயேச்சை இருந்ததனால்தான் நாம் சில கட்டுப்பாடுகளை நமக்குள் திட்டம் செய்துகொள்ளும் உரிமை உடையவர்களானோம். இஃதே போன்று அரசியல் முதலிய கட்டுப் பாடுகளும். ஆனால் மதக் கட்டுப்பாடு இத்தகைய பான்மையில் ஏற்படவில்லை. இறைவன் திருவருளால் அவனின் பக்தகோடிகள் உய்யுமாறு இறைவனால் ஏற்படுத்தப்பட்ட விதிகளே மதக் கட்டுப்பாடு. இதனையும் ஏற்றுக் கொண்டு நடத்தற்கும், மாறாக நடத்தற்கும் மனிதனுக்கு சுயேச்சை உண்டு; ஆயின் பலன் வேறுபடும் என்று கூறவும் வேண்டுமோ? நோயாளிக்கு மருந்துளது; உண்ணவோ உண்ணாது மறுக்கவோ நோயாளிக்குச் சுயேச்சை உளது. பலன் கூறாமல் விளங்கும்; அறிந்துகொள்க! எனவே, சுயேச்சை என்பது தனது அபீஷ்டம்போல் வாழ்தலேயாம். சுயேச்சை என்பது மனிதரை மேலேற்றவும், தாழ்த்தவும் வல்லதோர் பண்பாகும் சுயேச்சை என்னும் நதியைக் கொண்டு ஒருவன் தன் மனமான நன்செய் நிலங்கட்குத் தண்ணீர் பாய்ச்சிப் பலன் காணலுமாகும்; அந்நதிப் பிரவாகத்தில் மூழ்கி இறத்தலுமாகும்.

நிற்க; சுயேச்சை என்பது இஸ்லாத்திற்றான் உண்டாயிற்று என்பது நமது சித்தாந்தம்; இதுவே சரித்திர உண்மையுமாகும். ஆயின் அதற்குமுன் சுயேச்சை இல்லையோ எனின், நிச்சயமாக இல்லை என்றே கூறற்கு ஆணித் தரமான சான்றுகள் உள. என்னை? சுயேச்சை எக்காலத்தில் அழிபடுகின்றது வெனின், உயர்வு, தாழ்வு என்னும் வேற்றுமை எக்காலத்தில் கற்பிக்கப் பெற்றதோ, அக்காலத்திற்றான். இவ்வேற்றுமை எல்லா மதங்களிலும், எல்லா மக்களிடத்தும் ஆதிமுதல் இருந்து வருவதாக நம் ஆராய்ச்சிக்குப் புல

னுகின்றது. இஸ்லாம் மதம் ஒன்றுதான் வேற்றுமை என்னும் கொடிய நச்சுப் பூண்டை வேரறக் கெல்லி எறிந்துவிட்டது. சாதி குல ஆஸ்ரமம் பல தெய்வங்கள், பணக்காரன் ஏழை என்னும் பிரிவினைகள் இருப்பின் அவைகளால் சுயேச்சை குன்றிப் போகின்றது; இல்லாமலே போகின்றது எனினும் பொருந்தும் சாதி எனலும் கீழ் சாதி மேல் சாதியானுக்கு அடிமையாகின்றான்; குலமும் அப்படியே; ஆஸ்ரமும் அவ்வாறே; பல தெய்வ வணக்கமும் அங்ஙனமே; செல்வமும் இவைகளை ஒத்தே. எஜமான், ஊழியன், பணக்காரன், ஏழை, மன்னன், குடிஜனங்கள் என்னும் பாகுபாட்டை இஸ்லாம் தகர்த்தெறிந்து அனைவர்க்கும் சமத்துவம் என்னும் சுயேச்சைக் கொடியை உயர்த்தி அதன் தண்ணிய நிழலில் காத்த, காத்துவரும், காப்பதற்கென்று முரசறைந்து வரும் மதம் இஸ்லாம் மதம் ஒன்றேயாகும். சமத்துவம் என்பதை திருமறை மறுக்கக்கூடாத விதமாய்ப்போதிப்பதற்கேற்ப, திருமறையின் போதனைகளைத் தம் வாழ்க்கையில் நடத்திக்காண்பித்த நாயகமவர்களும் சமத்துவத்தின் சிறப்பை சமயம் வாய்த்தபோதெல்லாம் போதித்து வந்தார்கள். நாயகம் (ஸல்) அவர்களின் தோழர் ஒருவர் தன் ஊழியனை அடித்துக்கொண்டிருக்க எம்பெருமானார் கண்டுவிட்டார்கள். அதுகால் எம்பெருமானார் அது செயல் கண்டு மனமிளகியவர்களாய் "இவ் வூழியர் தங்கள் சகோதரரேயாவர்; இவரை இறைவன் தங்கள்பால் ஒப்புவித்திருக்கின்றான்; தாங்கள் உண்ணும் உணவையே இவருக்கும் அளிப்பீர்களாக; தாங்கள் தரிக்கும் உடையையே இவரும் உடுத்தக் கொடுப்பீர்களாக" என்று திருவாய் மலர்ந்தருளினார்கள். தாங்கள் உண்ணும் உணவையும் தாங்கள் உடுத்தும் உடையினையும் இவருக்கு அளிப்பீர்களாக என்ற போது, உண்பதிலும் உடுப்பதிலும்கூட ஒரே நிலையில் ஒப்பப்பாராட்டுவது என்பது சகோதரர்கட்கே உற்றதோர் செயலாதலால், இவரைச் சகோதரராய்ச் செயலிலும் பாராட்டுங்கள் என்று கட்டளையிட்டமை காண்க. இவ் வேலைக்காரர் தங்கள் சகோதரர் என்ற அளவில் நில்லாது, சகோதரத்வத்தை எவ்வாறு பாராட்டவேண்டும் என்பதையும் உணவு உடை முதலியவைகளில் சமமாகப் பாவித்தலால் என்று ஐயந்திரிபற விளக்கியிருக்கின்றார்கள். வாக்காலும் மனத்தாலும் சகோதரராகப் பாவித்ததோடு நின்றுவிடாமல், செயலாலும் ஊழியனைப் பாராட்டுங்கள் என்று இரண்டொரு வாக்கியங்களில் எத்துணை அழகாக நம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தெரிவிக்கின்றார்கள் பாருங்கள். ஈதன்றோ சமத்துவம்! சமத்துவ போதனை! 'எங்கள் மதமும் மதக்காரர்களும் சமத்துவம் போதிக்கவில்லையா' என்பர் சிலர். போதிப்பதாக இருப்பினும் பல ஜாதிகளையும், இன்னின்ன சாதியார்க்கு இன்னின்ன உணவு, இன்னின்ன உடை, இன்னின்ன உறைவிடம் என்று, இன்னின்னகோயில்கள், அக்கோயில்களில் இன்னின்ன தூரமட்டும் என்ற வரையறையைப் பார்க்குங்கால், பிற மதங்கள் சமத்துவம் என்னும் பதத்தை அறிந்திருப்பினும் மக்கட்கு உண்மை மனதோடு சமத்துவம் புகட்டவந்ததாய்க் காணப்படவில்லை என்பது திண்ணம். இஸ்லாம் மதம் ஒன்றுதான் 'உன் அடிமையை அடிமை என்று விளியாதே!' என்று சமத்துவ கர்ஜனை புரிகின்றது. நிற்க, சமத்துவம் என்பதை வெள்ளையர்கள் தாம் கண்டு பிடித்து விட்டதாகவும், வெள்ளை யரசாங்கங்களே சமத்துவ ஆட்சி முறையை அநுசரிக்கின்றன வென்பதாகவும் தங்கள் பத்திரிகைகள், நூல்கள் அரசியல் அறிக்கைகள் வாயிலாகப் பொய்யுரை சாற்றி வருகின்றனர். தற்காலத்து அரசாங்கங்களுள் செல்வத்திலும், சிறப்பிலும் திறமையிலும் மாட மாளிகைகளிலும் தலைமையாக விளங்கி வெள்ளையர் தம் நாகரிகத்திற்கு ஓர் சான்றாய் விளங்குவது அமெரிக்கா தேசமாகும். முதன் முதலில் பிரான்சு தேசத்தாரும் இரண்டாவதாக அமெரிக்கர்களுந் தாம் சுயேச்சைக் கொடியை நிலைநாட்டியதாக வெள்ளையர் சரித்திர நூல்கள் விளம்பரங்கள் புரிகின்றன. அமெரிக்காவை, வெள்ளையர் நாகரித்திற்கு ஓர் அளவு கோலாய் உள்ள அமெரிக்காவை எடுத்துக் கொண்டு ஆராயுங்கால், சமத்துவம் உள்ளதாகப் பாராட்டும் இந்நாட்டில் வெள்ளையர் கருப்பர் என்னும் நிறவேற்றுமை தாண்டவமாடுவதாகத் தெரிகின்றது. அற்பக் குற்றங்களைப் புரியினும் அமெரிக்காவில் உள்ள நீக்ரோ (Negro) வகுப்பினரை, அவர்கள் கருப்பு நிறமாய் இருத்தல் பற்றி அமெரிக்கா வெள்ளைக் குடிசனங்கள் சித்திர வதை செய்து விடுகின்றனர்.

நீக்ரோக்களைப் பொறுத்த மட்டில் நீதி மன்றங்கள் இல்லை; நீதி மன்றங்களில் சிறைத் தண்டனை விதிக்கப் பெற்றாலும் அந் நீக்ரோக்களை அமெரிக்க வெள்ளையர் சிறைக்கு அனுப்புதற்கு ஒவ்வாது தாமே சிறைகளைத் தகர்த்து எறிந்து சிறைப்பட்ட நீக்ரோக்களை கயிறு கொண்டு கட்டித் தெருவோடு இழுத்துச் சென்று கண்ணைப் பிடுங்கி கால்வேறு கை வேறாக ஆக்கி இழுத்துச் சின்ன பின்னமாக்கிப் பிறகு உயிரோடு அவர்களுடல்களில் பெட்ரோலை ஊற்றித் தீ வைத்துக் கொளுத்திக் கூத்தாடுகின்றார்கள். இதனை அமெரிக்கர்கள் லின்ச்சிங் (Lynching) என்று கூறுகின்றார்கள். எந்த வகுப்பார், எந்த நிறத்தார் தாமே சுயேச்சையை அளிப்பவர்கள் என்று ஆர்ப்பரிக்கின்றார்களோ அந்த நிறத்தாரிடத்துத்தான், அந்த வகுப்பாரிடத்துத்தான், வேற்றுமையும், கொடுமையும் குடிகொண்டு விளங்குவதாய்க் காணலாம். உண்மை இத் தன்மையினதாக, இஸ்லாம் மதத்தில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் பாகுபாடு இல்லை என்பதை விளக்கிக் காண்பிக்க நமது சரித்திரங்களில் நூற்றுக் கணக்கான ஆதாரங்கள் உள. ஒரு மஸ்ஜிதில் அரசனும் தெருக் கூட்டும் 'பிஸ்தி' ஒருவனும் ஒன்றாக நின்று இறைவனை வணங்கும் காட்சியை இந்துக்கள் கோயில்களிலேனும், கிறிஸ்துவச் சர்ச்சுகளிலேனும் காண்டற்கு இயலுமோ? இந்துக்கள் கோயில்களில் சாதிகட்கும், பணக்காரர்கட்கும் வணக்கஸ் தானங்கள் சாதிக்கும் செல்வத்திற்கும் ஏற்பக் கற்பிக்கப் பெற்றுள்ளன. பார்ப்பான் செல்லும் தூரம் வேளாளன் செல்லுதல் சிட்சிக்கத்தக்க குற்றமாகின்றது. இந்து அரசர்கட்கென்று இந்துக்கள் கோயில்களில் பிரத்தியேகமான ஸ்தானங்களும், மதிப்பும் அளிக்கப் பெற்றுள்ளன. இஃதேபோல் கிறிஸ்துவச் சர்ச்சுகளிலும் பிரத்தியேக ஸ்தானங்கள் அளிக்கப்பெற்றுள்ளதைக் காணலாம். திரிசிரபுரத்தில் இப்பொழுது வரகனேரியில் உள்ள ஒரு மாதா கோயிலில் உயர்ந்த வகுப்புக் கிறிஸ்துவர் கட்கென்று ஓரிடமும் தாழ்ந்தவகுப்புக் கிறிஸ்துவர்கட்கென்று வேறிடமும், பிரசாதம் வாங்கிக் கொள்ளும் உரிமையில் முந்தி வாங்குவது யார், பிந்தி வாங்குவது யார் என்னும் சட்டதிட்டமும் இருப்பதையும், இதனைக் கிறிஸ்துவப் பெரும் பாதிரிகள் ஆதரிப்பதையும் நாமறிகின்றோம். இதனால் நாம் இவர்களை இழித்துரை கூற முன்வரவில்லை யெனினும், இஸ்லாம்ஒன்றைத் தவிர வேறு எம் மதத்திலும் எச்சமுகத்திலும் சமத்துவம் இல்லை யென்பதற்கே சான்று பகர முன்வந்தனம். எனவே, சமத்துவம் என்பது இஸ்லாமிற்கே உரியதாக இருத்தலின், இஸ்லாம் ஒன்றே சமத்துவத்தை அளிப்பதாக இருத்தலின், சமத்துவத்தின் பலனை சுயேச்சையும் இஸ்லாத்தாற்றான் அளிக்கப்படுகின்றது என்பதைக் கூறவும் வேண்டுமோ?

காப்பியடித்த பா. தாவூத்ஷாவின் வழக்கு.

சென்னை ஹைக்கோர்ட்டு.

ஒரிஜினல் ஸூட் C. S. No. 317 of 1930.

சென்னை, தாருல் இஸ்லாம் ஆசிரியரான பா. தாவூத்ஷா என்பார், பிரபல புத்தக வியாபாரியான 'மெஸ்ஸர்ஸ்' லாங்க்மன்ஸ் க்ரீன் & Co கம்பெனியாரால், ஆங்கிலத்தில் அச்சடித்து விற்பனை செய்யப்பட்டு வரும் "முஹம்மது நபி", "அபூபக்கர் ஸித்தீக்" என்ற இரு நூற்களையும் அப்படியே தமிழில் காப்பியடித்து அதே பெயரைக்கொண்டு தம்மால் சுயமே இயற்றப்பட்டதாக 'முகவுரை வரைந்து விற்பனை செய்து வந்தார். அதை ஷை கம்பெனியார் கண்டுபிடித்து அதனால் தங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக சென்னை ஹைக்கோர்ட்டில் அவர்மீது தொடரப்பட்ட வழக்கின் விவரம் பின்வருமாறு:—

பிராது

C. S. No. 317-1930.

லாங்க்மன்ஸ் க்ரீன் அண்டு கம்பெனி லிமிடட்

—வாதி

பி-தாவூத்ஷா

—பிரதிவாதி

மேற்கூறிய வாதி கூறுவதாவது:—

(1) வாதி கம்பெனி இங்கிலாந்தில் இணைக்கப்பெற்று சென்னை மௌண்ட்ரோடில் புத்தக விற்பனையும், பிரசுரத் தொழிலும் புரிந்து வருகின்றது.

கம்பெனிக்குள்ள எல்லா அறிக்கைகளையும் நடவடிக்கைகளையும் சென்னை கொண்டி செட்டித் தெரு 7-ம் எண்ணில் உள்ள திரு கிங் அண்ட் பாட்ரிஜ் என்னும் அட்வகேட் வாயிலாய் தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

(2) பிரதிவாதி சென்னைத் தம்புச்செட்டித் தெரு 73-ம் எண்ணுள்ள விடுதியில் ஆசிரியராகவும், தாருல் இஸ்லாம் என்னும் வாராந்தப் பத்திரிகாசிரியராகவும் தொழில் செய்து வருகின்றார்.

(3) வாதி கம்பெனியார் திரு: ஜே. லீச் வில்ஸன், திரு. எஸ். அப்துல் காதிர் என்பவர்களால் இயற்றப் பெற்ற "இஸ்லாத்தின் கதைகள் முதல் வெளியீடு, இரண்டாம் வெளியீடு" என்னும் ஆங்கிலமொழி நூல்களை அச்சடித்துப் பிரசுரம் புரிபவர்கள் இவைகட்கு உரிமையும் பெற்றவர்கள். மேற்கூறிய நூல்கள் 1925-ல் பிரசுரிக்கப் பெற்றன. இவைகளை அத்தாட்சி A, A-1 என்று குறிக்கப் பெற்றுள்ளது.

(4) பிரதிவாதி "முஹம்மது நபி" "அபூபக்கர் சித்திக்" என்னும் இரண்டு தமிழ் நூல்கட்கும் ஆக்கியோராவர். வாதிகளால் ஆங்கிலத்தில் வெளியிடப் பெற்றுள்ள புத்தகங்களின் பிரசுரத்திற்குப் பிற்காலத்தில் பிரதிவாதியால் வெளியிடப்பெற்றவை இத்துடன் அத்தாட்சி B. B. 1 என்ற குறிப்பில் காண்க.

(5) வாதி அத்தாட்சி B என்பது அத்தாட்சி A என்பதின் நேரான மொழி பெயர்ப்பு என்றும், அத்தாட்சி B. 1 என்பது அத்தாட்சி A. 1 என்பதின் நேரான மொழிபெயர்ப்பு என்றும் தெரிவிக்கின்றனர்.

(6) இதனால் பிரதிவாதி அத்தாட்சி A, A—1 இவைகட்குறிய பிரத்தியேக உரிமையை மீறிவிட்டார். பிரதிவாதி அத்தாட்சி B, B—1 என்பவைகளில் எத்துணைப் பிரதிகளை அச்சிட்டு விலைக்கு விற்றிருக்கின்றார் என்று வாதியால் தெரிந்துகூற இயலவில்லை.

(7) அத்தாட்சி A, A—1 இவைகளின் விற்பனை மிகவும் குறைவு பெற்றதால், இப்புத்தகங்களை மொழிபெயர்த்து விற்குமாறு இப்பொழுது செய்துகொண்ட ஒப்பந்தத்தை வாதி கைவிட வேண்டியவர்களா யிருக்கின்றனர்.

(8) வாதி கம்பெனியார் 1930 பிப்ரவரி 23ந் தேதியன்று பிரதிவாதிக்கு வரைந்துள்ள கடிதத்தின் வாயிலாய், அத்தாட்சி B, B—1-ல் எத்தனைப் புத்தகங்கள் அச்சிடப் பெற்றுள்ளன வெனவும், அவைகட்குக் கணக்குக் காண்பித்தல் வேண்டும் எனவும், விற்றவை விற்பனை செய்யப்பெறுதவை எத்தனை எனவும் பிரதிவாதியைக் கேட்டிருந்ததோடு, விற்காத பிரதிகள் அனைத்தையும் தம்மிடம் ஒப்புவித்து விடுமாறும், இனி அவ்வாறு மொழிபெயர்த்து அச்சிட்டு விற்பதில்லை என்று உறுதி கொடுக்குமாறும் தெரிவித் திருந்தனர். பிரதிவாதி எழுதிப் பிரசுரித்து விற்பனை செய்த பிரதிகளின் கணக்கையும், தன் கையில் மிகுந்துள்ள பிரதிகளின் எண்ணிக்கையினையும் தெரிவித்து, இனி அவ்வாறு அச்சிட்டு விற்பதில்லை என்றும் உறுதியளித்திருந்தார். ஆனால் அவர் விற்பனையாகாப் புத்தகங்களையோ, அச்சுரிமையை அபகரித்தமை பற்றிக் கொடுக்க வேண்டிய நஷ்ட ஈடோ யாதொன்றும் இதுவரையில் வாதிக்குக் கொடுத்தவரல்லர்.

(9) விற்பனையாகாப் பிரதிகளை உடனே வாதிக்கு ஒப்புவித்துவிட வேண்டும் என்றும், நஷ்ட ஈடு அளிக்கவேண்டும் என்றும் வாதி பிரியாது செய்கின்றனர்.

(10) நஷ்ட ஈட்டுத் தொகை 1500 ரூபாய்களாக வாதி கம்பெனி மதிக்கின்றது.

(11) இதன் மூலமாய் நட்ட ஈட்டுத் தொகை 1500 ரூபாய்களாகவும், விற்பனையாகாப் பிரதிகளின் விலை 1500 ரூபாய்களாகவும் வாதி கம்பெனி மதிக்கின்றது.

(12) 1928 ஜூலைக்கும் 1929-ம் ஆண்டிற்கும் பின்னர் பிரதிவாதியால் பிரசுரிக்கப் பெற்ற தேதியில் இந்த வழக்கு கனந் தங்கிய இந்த நியாயஸ்தலத்தில் கொண்டுவரப் பெற்றுள்ளது. இவ்வழக்கின் காரணம் இக்கோர்ட்டின் அதிகார எல்லைக்குள்ளாய் சென்னையிலே ஏற்பட்டிருக்கின்றது.

(13) எனவே, வாதி கம்பெனியார் பிரதிவாதி தமக்கு

(A) நஷ்டஈடாக ரூ 1500-ம்,

(B) விற்பனையாகாப் புத்தகங்களைக் கணக்குடனும்,

(C) வழக்கின் செலவு தொகையும்.

(D) மற்றும் கோர்ட்டார் விதிக்கும் எத்தகைய ஈடும் அளிக்குமாறு உத்திர விடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பிரதிவாதி எழுத்து மூலமாய்க் கொடுத்த வாக்குமூலம்

வாதி:—லாங்க்மென்ஸ் க்ரீன் அண்ட் கம்பெனி
பிரதிவாதி:—பி. தாவுத்ஷா

(1) அறிக்கைகள், கோர்ட்டு நடவடிக்கைகளின் சம்பந்தமாகப் பிரதிவாதியின் விலாசம் சென்னை, லா சேம்பர்ஸ், 28-ம் எண்ணுள்ள விடுதியாகும்.

(2) வாதியின் பிரியாதில் உள்ள மூன்றும் பாராவில் கண்டவற்றில் எதுவும் ஒன்றும் பிரதிவாதிக்குத் தெரியாது; வாதி இதனை ருசுப்படுத்தியாக வேண்டும்.

(3) 1928-லும் 1929-லும் முதன் முதலாக முறையே தன்னால் தமிழில் வெளியிடப் பெற்ற நூல்களாம் "முஹம்மது நபி" அபூ பக்கர் சித்தீக்" என்பவைகட்குத் தானே ஆசிரியர் என்று ஒப்புக்கொள்கின்றார்.

(4) பிரதிவாதி, பிரசுரக்காரர் என்னும் தோரணையில் பெகு (பர்மா) முஹம்மது ஹுஸைன் என்பவரிடமிருந்து இதன் கையெழுத்துப் பிரதிகளை ரூ 200 கொடுத்து விலைக்கு வாங்கினர் இக்கை யெழுத்துப் பிரதி தன்னாலேயே செய்யப்பெற்றது என்றும், இதில் பிரதிவாதி தக்கவாறு திருத்தங்களைப் புரிந்து கொள்ளலாம் என்றும், இதன் உரிமை பிரதி வாதிக்கே ஒப்புவிக்கப் பெற்றுள்ளது என்றும் பெகு முஹம்மது ஹுஸைனால் கூறப்பெற்றது.

(5) மேற் கூறிய "முஹம்மது நபி", "அபூ பக்கர் சித்தீக்" என்னும் நூற்களை பிரதிவாதி பதிப்பிடுங்கால், வாதி கூறும் பிரதிகள் அத்தாட்சி A, A—2 இருப்பதாகவோ, அவைகளின் பதிப்புரிமையைப் பற்றியோ பிரதி வாதி யாதொன்றும் அறியார்.

(6) பிரியாதில் கண்ட 5-ம் பாராவில்உள்ளவற்றை பிரதிவாதி ஒப்புக்கொள்ள மறுக்கின்றார்.

(7) வாதியின் பிரதிகளும் பிரதிவாதியின் பிரதிகளும் வெவ்வேறு மொழிகளில் இருப்பதால், வாதி கூறுவதுபோல் பிரதிவாதியின் பிரதிகளால் வாதியின் புத்தக விற்பனைக் குறைவுபட்டதென்று கூற முடியாது என்றும் இதனால் நஷ்டத்திற்கு அவர்கள் இலக்காகார் என்றும் பிரதிவாதி தெரிவிக்கின்றார்.

எவ்வகையினும் விற்பனைக் குறைவின் பேரிலும், இத்தனைப் பிரதிகள் விற்றிருக்கக் கூடும் என்னும் உத்தேசத்தின் பேரிலும் வாதி நஷ்ட ஈடு கேட்பதற்கு அருகரல்லர்.

(8) பிரியாதில் உள்ள 8-ம் பாராவிற் கண்ட விஷயங்களைக் குறித்த மட்டும்—இவ்வழக்கின் காரணமான விஷயத்தைப் பற்றித் தெரிவிக்கப் பெற்றதும், பிரதிவாதி விலையாகாப் புத்தகங்களை வாதிக்கு ஒப்புவித்து விடுவதாகவும் அத்தாட்சி A, A-1. என்பவை போன்ற பிரதிகளைத் தான் இனி அச்சிட்டு விற்பனை புரிவதில்லை என்பதாகவும், வாதிக்கு நியாயமாகச் செலவுதொகை கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டமை உண்மையே. இதைத் தவிர, (8)ம் பாராவிற் கூறப்படும் மற்றவை உண்மையானவையாகா. இப்பொழுதும் கூடபிரதிவாதி விற்பனையாகப் பிரதிகளைமீண்டும் வாதிக்கு அளித்துவிடவும், ஒப்பந்தப்படி நடந்துகொள்ளவும்சித்தமாய் இருக்கின்றார்.

(9) எனவே விற்பனைத்தடை உத்திரவிற்கே அன்றி, வேறு எந்தவிதமான பரிகாரத்திற்கும் வாதி உரித்தானவர்கள் அல்லர் என்றும் அவ்வாறிருப்பினும் நட்ட ஈடு கேட்கப்படும் தொகை அதிகமானது என்றும் பிரதிவாதி தெரிவித்துக்கொள்ளுகின்றார்.

(10) இதில்மேற்கூறியவாறன்றி வாதியின் பிரியாதிற் கண்ட மற்ற விஷயங்களைத் தன்னால் ஒப்புக்கொள்ள முடியாதென்றும் இருப்பின் ருசுப்படுத்த வேண்டும் என்றும் பிரதிவாதி தெரிவித்துக்கொள்ளுகின்றார்.

பிரதிவாதி.

நியாயத் தீர்ப்பு

ஹானரபிள் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலர் முன்பாக

(5—11—1930)

வாதியால் பிரசுரிக்கப் பெற்றுள்ள இரு ஆங்கில நூற்களையும் பிரதிவாதி மொழி

பெயர்த்திருப்பதால் பதிப்புரிமை (Copy right) மீறப்பட் டுள்ளது என்பதை மறுக்க முடியாது. எனவே, (1) வாதிக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டியது அவசியமா; அல்லது தடையுத்திரவு மட்டும் பிறப்பித்தல் வேண்டும் என்பது அவசியமா என்பதும் (2) நஷ்ட ஈட்டிற்கு வாதி அருகராவரேல் அதன் தொகை என்ன என்பதுமேகேள்விகள்.

முதலாவதாக குறிப்பிட்டுள்ள விஷயத்தைப் பொருத்தமட்டில், பிரதிவாதி தான் பிரசுரித்த காலையில் தனக்கு முதல் நூற்கள் இருப்பதாகத் தெரியாது என்று ருசுப்படுத்துவதுடன், அத்தகைய முதல் நூற்கட்கு பதிப்புரிமை இருப்பதாகவும் அறிவதற்குத் தக்கவழி இல்லை என்று ருசுப்படுத்துவாராயின், இந்தியன் பதிப்புரிமை பிரிவு 8-ன் படி பிரதிவாதி நஷ்ட ஈடு கொடுக்கவேண்டியவரல்லர் என்பதைக் குறிப் பிடுகின்றார். எனவே இந்த சட்டமானது ருசுப்படுத்தும் பொறுப்பை பிரதிவாதிக்கேவிட்டுவிடுவதால், பிரதிவாதி இதற்கேற்ப ருசுப்படுத்த அறவே தவறிவிட்டார். ஒரு இரகசியமான மனிதனிடமிருந்து வாங்கப்பட்டதாக பிரதிவாதியால் கூறப்படும் கையெழுத்துப் பிரதி இக்கோர்ட்டில் இதுகாறும் தாக்கல் செய்யப்படவில்லை. அது எக்கதியாயிற்று என்பதும் பிரதிவாதிக்குத்தெரியாது. அப்படிஅவர் விலைக்கு வாங்கியிருப்பாராயின் சாதாரணமாகப் பிரசுரக்காரார்கள் வாங்கும் முறையை அவர் அநுசரிக்கவில்லைஎன்று தெரிகின்றது. பிரதிவாதி 1927 பிப்ரவரியில் குறிக்கப் பெற்றதாகக் கூறப்படும் ஒரு டைரிப் புத்தகத்தை ஆதாரம் காண்பிக்கின்றார். என் அபிப்பிராயத்தில் இப்படி பதிவு செய்திருப்பது மிக்க சந்தேகத்திற்கிடமுள்ளதாயிருப்பதாக நான் அபிப்பிராயப்படுகின்றேன். இவர் இதை எப்பொழுது வேண்டுமானாலும் எழுதியிருக்கக்கூடும். அநேகமாக இந்த வழக்கிற்காக வென்றே எழுதியிருக்கவும் கூடும். என் முன்னிலையில் உள்ள ஆதாரங்களைக்கொண்டு வாதி நஷ்டஈட்டிற்கு அருகராவர் என்று நான் முடிவு செய்ய வேண்டியவனாயிருக்கின்றேன்.

அடுத்தபடியாக நட்ட ஈட்டுத் தொகையை எதைக்கொண்டு மதிப்பிடுவது என்பதாகும். ஆதி நூல்களின் விற்பனை எவ்வளவு குறைந்திருக்கிறதோ அந்த மதிப்பின் பேரில் நஷ்ட ஈடு விதிக்கவேண்டுமென்று பிரதிவாதி கூறுகின்றார். சாதாரணமாக இது ஏற்கக் கூடியதுதான். இந்த வழக்கில் இதனை நான் ஏற்க இயலவில்லை. ஒரு நூல் மறு நூலின் மொழிபெயர்ப்பாய் உள்ளது—ஆனால் வேறு மொழிகளில் ஒரு நூல் உயர்தரப் பள்ளிக் கூடங்கட்கும், மற்றொரு நூல் கீழ்தரப் பள்ளிக் கூடங்கட்கும் பாடபுத்தகங்களாய் உள்ளன. முதல் நூல்களில் விற்பனை குறைந்திருக்கக் கூடும் என்பதில் ஐயமில்லை. புத்தகம் 2-ன் மொழிபெயர்ப்பு 1929 ஜூலையில் வெளியிடப் பெற்றிருப்பினும், 1928-ல் நெ. 1 புத்தகம் எவ்வளவு விற்பனைக் குறைந்ததோ அதே அளவிற்கு 2 நெ. புத்தகத்தின் விற்பனையும் குறைவுபட்டிருக்கின்றது. எனவே விற்பனைக் குறைவைக்கொண்டு நட்ட ஈடு மதிப்பதற்கிடமில்லாமற் போகின்றது. ஆனால் பிரதிவாதி இந்த மொழி பெயர்ப்புக்களால் எத்துணை லாபம் அடைந்திருக்கலாம் என்பதைக் கொண்டு நட்ட ஈட்டை மதிப்பிடக் கூடும். தான் இரண்டிலும் 5,500 பிரதிகளை விற்றிருப்பதாக பிரதிவாதி கணக்குக் காண்பித்துள்ளார். தங்கள் புத்தக விற்பனையில் தமக்கு ஒரு பிரதியில் ஒன்றரை யணா இலாபம் உள்ளது என்று வாதி கூறுகின்றார். இக்கணக்கை நான் ஏற்றுக்கொண்டு, இதன் பேரில் வாதிக்கு 515 ரூபாய் நஷ்ட ஈடு சேரவேண்டுமாய் விதிக்கின்றேன்.

மேலும் தம் நூற்களை மொழி பெயப்பதற்காக வேறு சிலர் 500 ரூபாய் தமக்கு அளிக்க முன் வந்ததாயும், பிரதிவாதி இவைகளை மொழி பெயர்த்து விட்டமையால் இந்த வியாபாரம் தவறிவிட்டதாயும் வாதி கூறுகின்றார். இதற்காகவும் நான் 500 ரூபாய் நஷ்ட ஈடு விதித்து மொத்தத்தில் வாதிக்கு 1015 ரூபாய்கள் சேரவேண்டுமென்றும், பிரதிவாதி வாதியின் சிலவுத் தொகையையும் சேர்த்துத் தரவேண்டுமென்றும் விதிக்கின்றேன்.

இனி இதுபோன்ற நூற்களை தான் அச்சடிக்கவும், பிரசுரிக்கவும், விற்பனை புரியவும் முன்வரவில்லை என்பதாகப் பிரதிவாதி வாக்குறுதி செய்து கொடுத்திருப்பதால் நான் விற்பனைத் தடை உத்திரவு பிறப்பிப்பதற்கு அவசியம் நேரவில்லை. விற்பனையாகாப் பிரதிகள் ஏற்கெனவே பிரதிவாதியால் வாதிக்குச் சேர்ப்பிக்கப்பட்டு விட்டன.

(ஒப்பம்) D. G. W. நியாயாதிபதி.
5—11—30.

ஜிஹாங்கீரும், ரூபாவதியும்

டில்லி பாதுஷாவின் பெருந்தன்மை

ஓர் உண்மை வறலாறு

நீண்டு அடர்ந்து நிழல் செறிந்து நிற்கும் பெரு மரங்களும், அம்மரங்களை மெல்லியலார் தம் அன்பின் கணவரைத் தழுவி நின்றமையே போல் வளைந்து ஓடிய பூங்கொடிகளும், இக் காட்சியைக் கண்டு களித்து ஒன்றுந் தோற்ருது சித்திரப் பொம்மைகள் போல் அசையா நிற்கின்ற சின்னஞ் சிறு குழவிகளை ஒத்த செடிகளும், புற் பூண்டுகளும், பளிங்கனைய நீரோடைகளும், அந்நீரோடையின் தீஞ்சுவைத் தண்ணீரிடை மலர்ந்த செந்தாமரை மலர்களும், மலர்களைச் சூழ்ந்து கவிந்து மொய்த்து இன்னிசை முரற்றும் யாழ்ப்பாணரே போன்ற வண்டினங்களும், வலிய விலங்கினங்களும், மெல்லிய பெரிய கண்களையும் தம் உடலிலே நட்சத்திரங்கள் பதித்தாற் போன்ற புள்ளிகளையும் உடைய மான்களும் அவற்றின் இனங்களும் நிறைந்த ஓர் கானகம். உச்சிப் போழ்து, பசிய மரங்களையும் மரங்களின் நிழலையும் கண்டு மனம் பொருளுய் தன் கிரணங்களால் இவ்வனத்தின் இருளை நீக்குவேன், தண்மையைச் சுடுவேன் என்று கங்கணங் கட்டியவனைப் போல் கதிரவன் தன் சுடுகிரணங்களைக் காய்ந்து கொண்டிருந்தான். கொடிய இவ் வெப்பத்தால் செடி கொடிகள் தங்கள் தலைகளைத் தொங்க விட்டன. காற்றும் ஆடாமலிருந்தமையால் மரங்களும் அசையாது நின்றுவிட்டன. மலர்கள் வாடின. விலங்கினங்கள் தத்தம் உறைவிடங்கள் சென்று உறங்கின. அழகிய சிறகினை யுடைய பட்சிகள் தங்கள் இன்னிசைக் கீதங்களைப் பாடாமல் தங்கள் கூடுகளில் உறைந்தன. கொடிய வெப்பம்.

அதுகாலை, அழகிய புன்முறுவல் பூத்த முகமும், கம்பீரத் தோற்றமும் பொருந்திய ஒருவர் இக் காட்டினிடையில் தம் உயர்தரப் புரவி மீது சென்று கொண்டிருந்தார். இவர் வேட்டையாடவே இக் கானகத்திற்குட் புகுந்திருக்கலாம் என்று யூகிப்பதற்கு, இவர் அதற்குரிய ஆடைகளை அணிந்து காணப்பட்டார். புரவியை ஒரு திசையில் குறிப்பிட்டுச் செலுத்தாமலும், முகத்தில் ஓர் ஏக்கமும் காணப்பெற்றமையால் இவர் திசைதப்பி விட்டார் என்றும் இவர் பசியின் கொடுமையாலோ, வெய்யிலின் மிகுதியால் நீரின் வேட்கையாலோ களைத்துப் போயினர் என்றும் கருதுதற்கு இடமிருந்தது. இவர் ஊர்ந்து சென்ற குதிரையும் நடை தடுமாறிக் கொண்டிருந்த தோடு வாயில் நுரை கக்கிக் கொண்டிருந்தது. என்னே! சூரியனின் கொடுமை!!

செல்லச் செல்ல தங்கள் புதர்களினின்றும் வெய்யிற் கொடுமைக் கஞ்சி ஒளித்திருந்த மிருகங்கள் குதிரையினும் மனிதரையும் கண்டு வெருண்டதைக் கண்டாரன்றி அருகாமையில் உள்ள ஊர்க்குச் செல்லும் வழியைக் கண்டாரல்லர். வர வர நீர் வேட்கையால் அவர் நெஞ்சுலர்ந்தது; நாவறண்டது; முகம் சோம்பிற்று; கண்களால் நீறெங்குளது, ஓடை எங்குளது, என்று அங்கு மிங்கும் பார்த்துக் கொண்டிருந்தார். உடனே திடுமென இவர் தேகம் நிமிர்ந்தது; முகம் மலர்ச்சி யுற்றது; தன்னையறியாமலே ஓர் மகிழ்ச்சி உண்டாயிற்று. தன் எஜமானர் மகிழ்ச்சிப் பெருக்கை உணர்ந்து விட்டது போல் அக்கடுநடைப் புரவியும் கனைகுரல் எழுப்பியது. நீர் வேட்கையால் களைப்புற்ற-அத் திசைதப்பிய வேட்டைக்காரர் ஓர் சிறு குடிசிலைக் கண்டு விட்டார் நாணற் புற்களாலும், மூங்கில் இலைகளாலும் வேயப்பெற்ற ஓர் பன்னகசாலை. இச்சாலை ஒரு பெரிய ஆலமரத் தடியில் அமைந்து நின்றது. நடுக்காட்டில், மனித சஞ்சார மற்ற இடத்தில் இக் குடிசில் ஏற்பட்ட காரணம் யாது? ஆ! குடிசிலின் வாயிலருகே அமர்ந்து காணப்படும் அழகே உருக்கொண்ட வாங்கு தோற்றும் அச் சுந்தரி யார்? புரவி மீதூர்ந்து சென்ற அம்மனிதர் அச்சிறு குடிசிலையும், குடிசிலின் வாயிலருகே வீற்றிருந்த பெண்மணியையும்

கண்டு கீழே குதித்து செல்ல அக் குடிசிலே அணுகிச் சென்றார். தன்னை ஓர் ஆடவர் அணுகுகின்றமையைக் கண்ட அம் மங்கை நல்லாள் சிறிது அச்சமும் சிறிது நாணமும் சிறிது மகிழ்வும் கொண்டு தன் மலரனைய இரு விழிகளையும் நிலத்தே தாழ்த்திய வண்ணமாய்.

'ஐயா! தாங்கள் யார்?' என்றாள்

'நான் ஒரு போர் வீரன்'

'தாங்கள் இக்காடுவந்தமையா துபற்றியோ?

'வேட்டை யாட வந்தனன்; வழித் தப்பினன்.'

'இச் சிறுமனை என்னபாக்கியம்செய்ததோ

'நீர் வேட்கையால் மிகுந்த ஒருவனுக்குக் களை தீர வேண்டும்'

உடனே அம்மங்கை 'ஐயா! நான் தவறிழைத்தேன் இச்சிறு குடிசிலே நாடிவந்த தங்கட்குமுதன்முதலின் இவ்வேழையால்இயன்ற உபசாரங்களைச் செய்யாது தங்கள் பாதங்கள் நோவ வரலாறு கேட்டுக்கொண் டிருக்கின்றேன். மன்னிக்கவும்' என்று கூறி உள்ளே ஓடோடிச் சென்று ஒரு தாமரை இலையில் ஒரு உரொட்டியும் ஒரு மட்பாண்டத்தில் தண்ணீரும் கொண்டு வந்து அவ் வீரர்முன் சமர்ப்பித்து சற்று ஒதுங்கி நின்றாள் வீரர் தன் களைப்பின் மிகுதியால் உணவையும் நீரையும் உட்கொள்ளலாயினர். பெண்மணியோ இது காறும் அவ் வாடவரின் முகத்தையே நோக்காமல் இருந்து தன் மன வேட்கையைத் தணித்துக் கொள்ளுமாறு அவரையும் அவர் தோற்றத்தையும் கண்டு சிந்தித்த வண்ணமாய் நின்று கொண்டிருந்தாள். 'இவர் தோற்றத்தில் மிகவும் கெம்பீர முடையவராய்த் தோன்றுகின்றார். ஆயினும் இவரது ஆடைகளால் இவரை ஓர் சாதாரணப் போர் வீரர் எனவே மதிக்க வேண்டி யிருக்கின்றது. சாதாரணப் போர் வீரருக்கு மரகத மோதிரம் ஏது? இவர் அணிந்துள்ள மோதிரத்தின் பச்சைக்கல்லால் இவ் வுலகையே விலைக்கு வாங்கலாம் போலிருக்கின்றதே! என்ன ஆச்சரியம்' என்று தனக்குள் சிறிது நேரம் சிந்தித்தவளாய், மீண்டும் குடிசிற்குள் ஓடிச் சென்று பழஞ் சுவடி ஒன்றைக் கொண்டு வந்து, அவ்வீரர் அருகில் அமர்ந்து,

'ஐயா! தங்கள் கையைக் காண்பிக்கவேண்டும்' என்றாள்.

'ஏன்? உனக்கு இரேகை சாஸ்திரம் தெரியுமோ?'

'தெரியும்; தயவு கூர்ந்து தங்கள் கரத்தைக் காண்பியுங்கள்'

சிறிதுநேரம் அக் கைகளில் உள்ள இரேகைகளையும் சக்கரங்களையும் ஊன்றி நோக்கி அவைகளைத் தன் சுவடியோடு ஒப்பிட்டுப் பார்த்துவிட்டு அவ்விளம் பெண் கல்லென நகைத்தாள். நகைத்து விட்டு அம்மா! அம்மா! என்று அக்குடிசிலில் இருந்த தன் தாயைஅழைத்தாள். மகள் தன்னைக் கூப்பிடுங்குரல் கேட்டு வயது முதிர்ந்த ஓர் மாது அவ்வீரர் முன் வந்து நின்று தன்மகளை நோக்கி அவ்வாடவர் யாரென வினவினள். இதற்கு அவ் வீரரே விடையளிக்கத் துணிந்து 'அம்மா! நான் ஓர் போர்வீரன், இக்காட்டிற்கு வேட்டையாட வந்தேன், வழி தப்பினேன், விடாயும் மிகுந்தது. தங்கள் குடிசிற்கண் தங்கள் அழகிய மகளால் நான் நன்கு உபசரிக்கப் பெற்றேன். நான் தங்கட்கு என்ன கைம்மாறு செய்வேன்? என்று கூறினர். அப்பெண் உடனே மீண்டும் கல்லெனக் சிரித்தாள் தன் அம்மையை நோக்கி 'அம்மா! அம்மா! நம்பாதே! இவர் நம்மை ஏமாற்றுகின்றார். இவர் போர் வீரருமல்ல, சீர் வீரருமல்ல, இவர் ஒரு அரசர், அப்பா நமக்குக் கொடுத்தாரே ஓர் ஓலைச் சுவடி. அதைப் பார்த்தேன், இவர் கையையும் பார்த்தேன், அம்மா! அப்பா சொன்னாரே அந்த அரசர் தானம்மா இவர், நம்மை ஏமாற்றுகின்றார்' என்றுமீண்டும் சிரித்தாள். வீரர் வியப்புற்றார். அழகிய உருவமும், அழகுக் கேற்ற அறிவு நுட்பமும் வாய்ந்த இந் நறுமலர், காட்டில் மலருங் காரணம் யாதோ என்று கருதி மீண்டும் அக் கன்னியை நோக்கி 'நான் யாரெனத் தெரியுமா? என வினவினர். 'தாங்கள் ஓர் சக்கிரவர்த்தி அல்லவென்று தங்களால் கூற முடியுமா? என்றாள் அப்பெண். உடனே பாதுஷா ஜிஹாங்கீர் (அப் பெண் உண்மையைக் கூறி விட்டமையால் நாமும் இனி மறைப்பதற்கில்லை) அப்பெண்ணின் தாயை நோக்கி, அவர்கள் அக் காட்டிடை வாழும் மர்மம் என்ன வென்று கேட்டார். அது கேட்டு அவ் வயது முதிர்ந்த மாது "சக்கிரவர்த்தியே! என் கொழுநற் பெயர் பண்டித ஞானவியாஸர். நாங்கள் பார்ப்பன குலத்

தார்., குடும்ப வாழ்க்கையில் வெறுப்புற்ற என் கணவர் ஓர் நாள் வனப்பிரஸ்த ஆஸ்ரமத்தை அநுசரிக்கத் துணிவு கொண்டு தான் காடுசெல்ல வேண்டும் என்று தெரிவித்தார். கணவன் அருகாமையில் இருப்பதே கற்பின் மிக்க பெண்களின் கடமையாதலால் யானும் அவருடனே புறப்படுவதாகக் கூறிப் பின் தொடர்ந்து, இக்காடு வந்து இக் குடிசிலே உறைவிடமாகக் கொண்டு கந்த மூலாதிகளை அருந்தி உயிர் வாழ்ந்து வந்தோம். இப் பெண்ணும் இக் குடிசிலிற்றான் பிறந்தாள். இவள் பெயர் ரூபாவதி யாகும். இங்ஙனமிருக்க ஓர் நாள் தனக்கு மரணம் நெருங்கி விட்டதென அறிந்து தன் மகளை அருகில் வரவழைத்து 'என் மரணத்திற்குப் பின்னர் நீ டில்லிமா மன்னரால் ஆதரிக்கப் பெற்று, மனதிற் குகந்த ஓர் கணவரைப் பெற்று இனிது வாழ்வாய்; அம் மஹா மன்னர் இச் சிறு குடிசிலில் உன் கையால் இடப்பெற்ற உணவருந்திச் செல்வார். அவரது அடையாளங்கள் இவையாம்' என்று மொழிந்து ஓர் ஓலைச் சுவடியையும் ரூபாவதியின்பால் ஒப்புவித்துவிட்டு மரணமானார். இதுவே எங்கள் வரலாறு. ஓலைச் சுவடியில் கண்ட அடையாளங்கட்குத் தாங்கள் இலட்சியமாய் இருத்தலால் என் மகள் தங்களின் உண்மை நிலையினை ஓர்ந்து கொண்டாள். மன்னிக்க வேண்டும்'' என அக் கிழவி மொழிந்தாள். அரசர் பெருமான் இவ் வரலாற்றைக் கேட்டு அவர்கள் நிலைமைக்கு மிகவும் துக்கித்தவராயும், அவர்கள் நிலைமைக்குத் தன்னால் பரிகாரம் செய்ய நேர்ந்தமைக்கு மகிழ்ந்தவராயும், புன்னகை அரும்பி 'அம்மா! தாங்கள் கூறியது கேட்டு நான் ஒருவாறு கலக்க முற்றனன். நானே பாதுஷா ஜிஹாங்கீர். இனி தங்களை என் தாய்போலும் ரூபாவதியை என் புதல்வி போலும் கருதுவன்' எனத் தேற்றினர்.

பின்னர், அம் மூதாட்டி தன் மகளைப் பார்த்து 'ரூபாவதி! உன் தந்தை அளித்த சடிதத்தை இவரிடம் ஒப்புவித்துவிடு' என்றார். எனவே ரூபாவதியால் பண்டித ஞான வியாஸர் வரைந்ததோர் ஓலைச் சுருள் சேர்ப்பிக்கப்பெற்றது. அதில் 'இந்தியச் சக்கிரவர்த்தியே! என்று ஜிஹாங்கீர் மன்னரை விளித்து, இனி இவ் விந்தியா முழுதும் அவர் குடைக்கீழ் ஏவல் செய்யும் என்றும், அவரது ஆட்சி ஓங்கிப் பரிமளிக்கும் என்றும், தனது மகள் ரூபாவதியை ஆதரிக்க வேண்டும் என்றும் வரையப் பெற்றிருந்தது. இதற்குள் மன்னரைத் தேடி போர் வீரர்களும் வந்துவிட்டனர்.

ஜிஹாங்கீர் மன்னரும் பண்டிதரின் சோதிடத் திறமையை நினைத்து வியந்து பாராட்டி, ரூபாவதியைத் தன் அந்தப் புரத்திற்கு அழைத்துச் சென்று, அந்தப் புரத்திலேயே தன் அருமைப் புதல்வியைப் போல் பாதுகாத்துப் பின்னர், விலையுயர்ந்த ஆடையாபரணங்களையும் லட்சக் கணக்கான பொன் வெள்ளி நாணயங்களையும் 'டாலி கோடாகி' என்னும் ஒரு ஊரையும் கொடையளித்து ரூபாவதியை ஓர் பிராமண வாலிபனுக்கு மணம் புரிந்தளித்தனர்.

இவ்வுண்மைச் சரிதையால், ஜிஹாங்கீர் மன்னரின் தாளாண்மையும், அவரது நல்லெண்ணமும், பெருந்தன்மையும் எத்துணை விகசிக்கின்றதென்பதை நண்பர்கள் கவனிப்பார்களாக. பிறமதத்துப் பெண் என்னும் எண்ணத்தால் அப் பெண்ணை ஆதரிக்கப் பின் வாங்கினரல்லர்; அல்லது அப்பெண்ணை வற்புறுத்தி மதமாற்றம் செய்து மணந்து கொண்டாருமல்லர். 'புதல்வியாய்க் கருதுவேன்' என்னும் உறுதிவாக்கை மறந்து போகாமல் புதல்வியினும் அருமையோடு பாராட்டிச் சீராட்டி ரூபாவதியின் இனத்தாராய ஓர் வாலிபர்க்கே அவர் மணம் புரிந்தளித்தமை, அம் மன்னவரின் மாசிலா மனப் பான்மையை விளக்குகின்ற தன்றோ?

புக் ஜவுளி டிப்போ.

இஃது இரங்கோன், தர்காப்பள்ளி பேஷ் இமாம் மௌல்வி சுல்த்தான் அஹ்மத் ஆலிம் சாஹிபால் ஏற்படுத்தப்பட்டது. இதில் தேவையான சாமான்கள் கிடைக்கும் வேண்டுவோர் தபால் பெட்டி 1242, 1-222 அங்கப்பன் தெரு மதராஸ் என்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

இஸ்லாமும் பர்தாவும்.

ஷம்ஷுல் உலமா, முப்தி, குலாம் ரசூல் சாஹிப் எழுதியது.

(சென்ற மாதத் தொடர்.)

(5) (A) வினா:—நாயகம் (ஸல்.) அவர்களின்காலத்தில் பெண்மணிகள் எவ்விதமாக பள்ளி வாசலுக்கு வந்து கொண்டிருந்தார்கள். (B) அவர்கள் வந்து போவதற்கு நாயகம் (ஸல்.) எத்தகைய ஏற்பாடு செய்துவைத்திருந்தார்கள்? (C) அதர்க்குப் பின்னால் அப் பெண்மணிகளை பள்ளிவாசலுக்கு வர வேண்டாமென்று விலக்கியதின் காரணம் யாது?

விடை:—(A) நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்தில் இராக்காலங்களில் பெண்மணிகள் தங்களைப் பார்ப்பவர்கள் அடையாளந் தெரிந்து கொள்ளக் கூடாத விதமாய் துப்பட்டி போர்த்திக்கொண்டு பள்ளி வாசலுக்குப்போய்க் கொண் டிருந்தார்கள். (B) தொழுகை முடிந்து பெண்மணிகள் முதலில் போய் விடுவதற்காக நாயகம் (ஸல்.) அவர்கள், கொஞ்சநேரம் தாமதித்துப் போகும்படி ஆண்பிள்ளைகளுக்குக் கட்டளை யிட்டிருந்தார்கள். ஒரு சமயம் இரு பாலாரும் கலந்து கொள்ளும்படி நேரிடின் பெண்டிர் ஓரங்களில் செல்லும்படி கட்டளை செய்திருந்தார்கள். இவ்வித ஒழுக்கங்களோடுதான் பெண்மணிகள் இராக்காலங்களில் தொழுகைக்காகப் பள்ளி வாசலுக்கு வந்து கொண்டிருந்தார்கள். இவ்விதம் வரும்பொழுது அம்மாதர்கள் யாராகிலும் வாசனை பூசிக் கொண்டு வந்தால் அவர்களை நாயகம் (ஸல்.) அவர்கள் கடுமையாகக் கண்டிப்பார்கள். (C) நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்திற்குப் பின், எப்பொழுது பெண், ஆண் இரு பாலார்க்கிடையில் கபடும் கெட்ட எண்ணங்களும் உண்டாய் விட்டனவோ அதுபொழுது ஹஸ்ரத் உமர் (ரலி.) முதலிய சஹாபாக்கள் அப்பெண்மணிகள் பள்ளி வாசலுக்கு வரக் கூடாதென்னும் கடுமையான கட்டளை விதித்து விட்டார்கள். இதற்கு மேற் கோட்களாவன:—

“நாயகம் (ஸல்) அவர்கள் சுப்ஹு தொழுகையை முடித்துக்கொண்டு எப்பொழுது திரும்புகின்றார்களோ அதற்குள் எல்லாப் பெண்மணிகளும் தங்கள் துப்பட்டிகளில் மறைந்துகொண்டு தங்களை யாரும் அறிந்து கொள்ளாத விதமாய் இருட்டிலேயே தங்கள் வீடுகளுக்குச் சென்று விடுவார்களென்று ஆயிஷா ஸித்தீகா (ரலி) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட் டிருக்கிறது (சஹீஹ்புகாரி)

“பார்ப்பவர்களுக்கு அங்கு செல்வது இன்னாரென்று அறிந்துகொள்ள முடியாத விதமாய் ஒரு ரூபம் போகிறாப்போல் செல்லுவார்கள். (ஐனிஷரஹ்புகாரி)

“உங்கள் பெண்கள் இராக் காலங்களில் பள்ளி வாசலுக்குச் செல்வதற்கு உத்திரவு கேட்டால் அவர்களுக்கு அனுமதி அளியுங்களெ”ன்று நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னதாக இப்னு உமர் (ரலி.) அவர்கள் ரிவாயத்துச் செய்கின்றார்கள் (சஹீஹ் புகாரி)

இந்த ஹதீதுகளும் இது விஷயமாய் வந்திருக்கும் ஏனைய ஹதீதுகளும் கிழவிகளைப் பொருத்தமட்டில் தான் என மாலிக் (ரஹ்.) அவர்கள் சொல்லுகிறார்கள்.

(ஐனி ஷரஹ்புகாரி)

“நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையினின்று சலாம் கொடுத்தவுடன் பெண்மணிகளெல்லாம் எழுந்து விடுவார்கள். தாங்கள் சற்று தாமதித்துத்தான் எழும்புவார்கள். அதைப் பார்த்துத் தான் சஹாபாக்கள். எழுந்திருப்பார்களென உம்முஸல்மா (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட் டிருக்கிறது (ஸஹீஹ்புகாரி)

ஆண்பிள்ளைகள் அவர்களை சந்திக்காமல் போய்விடவேண்டு மென்பதற்காகத் தான் நாயகம் (ஸல்.) அவர்கள் கொஞ்சநேரம் தா

மதித் திருந்தார்களெனத் தாம் அபிப்பி ராயப்பட்டதாக இப்னுஷிஹாப்(ரஹ்) அவர்கள் சொல்லுகின்றூர்கள் (ஐனி ஷரஹ்புகாரி)

அன்னிய மாதரைப் பார்ப்பதை விட்டும் பார்வையைத் தடுத்து வைக்க வேண்டுவது நம்மீது கடமை என இந்த ஹதீதுகளில் நின்றும் அறியக்கிடக்கிறது. தவிரவும் பித்னு எக் காரணங்களினு லுண்டாகின்றனவோ அக்காரணங்களை நீக்கி நடக்க வேண்டுமென்பதும், அப்பித்னு உண்டாகும் பாதையை அடைத்து விடுவதுகடமை என்பதும் நன்கு புலனுகின்றது (ஐனிஷரஹ்புகாரி)

"பெண்கள் நூதனமான, குயுக்தியான வார்த்தைகள் பேசுவதை நாயகம் (ஸல்.) அவர்கள்காண்பார் களாகில் நிக்ஷயமாக அவர்களைப் பள்ளிவாசலுக்கு வரவேண்டாமென்று தடுத்திருப்பார்கள். இவ்விதமாகத்தான் 'பனூ இஸ்ராயீல்'' கூட்டத்திலுள்ள பெண்களும் தடுக்கப்பட் டிருக்கிறூர்களென ஹஸ்ரத் ஆயிஷா ஸித்தீக்கா (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது (ஸஹீஹ்புகாரி) "பகிரங்கமாக பஸாதுகள் உண்டாய்க் கொண்டும் அநேகரை பித்னு சூழ்ந்து கொண்டுமிருக்கும் இக்காலத்தில் வாலிபப் பெண்களையும், கிழவிகளையும் பள்ளிவாசலுக்கு வருவதை விட்டும் கண்டிப்பாகத் தடுத்து விடுவது கடமையாகும் அவர்கள் வெளியில் புறப்படுவது ஹராமாகும்'' (ஐனிஷரஹ்புகாரி.)

"பெண்கள் வெளியில் கிளம்புவதனுல், ஹராமளவில் சேர்த்து வைப்பதற்குக் காரணமாயுள்ள பித்னுவின் பயம் ஏற்படுவதால் அதை தவிர்த்துக்கொள்வது அவர்களின் கடமையாகும். குறிப்பாக பஸாதுகளும் பித்னுக்களும் நிரம்பியுள்ள இக்காலத்திலோ வெனில், அப்பெண்கள் வெளியில் கிளம்புவது அவசியம் விலக்கானதாகும் (ஐனிஷஹ்புகாரி)

பெண்களைக் கொண்டே அல்லது அவர்களின் காரணமாகவோ எதுவரையில் பித்னு ஏற்படுமென்கிறபயம் உண்டாக வில்லையோ அது மட்டில் அவர்கள் பள்ளிவாசலுக்கு வர அனுமதி யளிக்கப்பட்டிருந்தார்கள். பஸாது செய்கிறவர்கள் மிகுதியாயும் பஸாதுகள் வெளியாய்க் கொண்டும் இருக்கும் படியான இக்காலத்திலோ வெனின், அவர்கள் நிச்சயமாகத் தடுக்கப்பட் டிருக்கிறூர்கள்''
—(ஐனிஷரஹ்புகாரி.

வாசனை பூசிக்கொண்ட ஒரு பெண்மணி ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி.) அவர்கள் சமீபத்தில் வந்தார்கள். அவர்களைப்பார்த்து ஹஸ்ரத் அவர்கள் 'பெண்மணியே! பள்ளிவாசலிலிருந்தா வருகின்றீர்க' ளென வினவ, பள்ளியிலிருந்து வருவதாக அப்பெண்மணி விடைபகர்ந்தார்கள். இதைக் கேட்டு வாசனையா அணிந்திருக்கின்றீர் களெனக் கேட்க, ஆம் என்று விடையளிக்கவே, "எந்தப் பெண்மணி வாசனைத் திரவியம் பூசிக்கொண்டு பள்ளிவாசலுக்கு வருகின்றூளோ அப்பெண்மணியின் தொழுகையை ஆண்டவன் ஒப்புக்கொள்கிறதில்லை. அப்பெண்மணி தன் இல்லத்திற்கேகி குளித்து அதைச் சுத்தப்படுத்தாத வரை'' என நாயகம் (ஸல்) அவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேனென்று ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி.) அவர்கள் திருவுளமானுர்கள். (தப்ஸீர் இப்னுகதீர்)

"ஒருமுறை பள்ளிவாசலுக்கு வெளியில் ஆண்களும் பெண்களும் கலந்து செல்வதை நாயகம் (ஸல்) அவர்கள் பார்த்து வீதிகளில் பரவலாகப் போகாமல் ஓரங்களில் செல்லுங்களென்று பெண்மணிக்குக் கட்டளையிடவே, ஒவ்வொரு பெண்ணும் சுவற்றில் தங்கள் புடவைகள் மாட்டிக்கொள்ளும் விதமாகச் சென்றூர்க'' ளென்று அபூதாவூத்ரிவாயத்துச்செய்கின்றூர்கள் (தப்ஸீர் இப்னுகதீர்)

(6) வினு.—பெண்கள் பள்ளிவாசலுக்குச் சென்று தொழுது வருவது வரிசையா? அல்லது வீட்டில் தொழுது கொள்வது ஏற்றமா?

விடை:—வீட்டில் தொழுது கொள்வது தான் வரிசை. இதற்கு மேற்கோட்களாவன:

"பெண்மணிகளின் பள்ளிவாசலிற் சிறந்தது அவர்களின் வீட்டின் மூலையாக யிருக்குமென்று நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக ஹஸ்ரத் உம்முஸல்மா (ரலி) அவர்களைத் தொட்டும் இமாம் அஹ்மது ரிவாயத்துச் செய்கின்றூர்கள் (தப்ஸீர் இப்னுகதீர்)

"அபூஹமீது சாயிதி (ரலி) அவர்கள் பெண்ஜாதி நாயகம் (ஸல்) அவர்களின் சன்னிதானத்திற்குச் சென்று ஆண்டவனின்

தூதரே? நான் தங்களுடன் தொழுது கொள்ளப் பிரியப் படுகின்றேன் எனக்கு அனுமதியளிக்க வேண்டுமென வினவியதற்கு, என்னுடு தொழுது கொள்வதற்கு உவக்கின்றாய் என்பது எனக்குத் தெரியும். ஆனல் வீட்டிற்குள்ளிருக்கும் அறைக்குள் தொழுதுகொள்வது வெளிக்கூடங்களில் தொழுது கொள்வதைப் பார்க்கினும் வரிசையானதாகவும், தெருக்கூடங்களில் தொழுவதைப் பார்க்கினும் உள்கூடங்களில் தொழுதுகொள்வது மேலானதாயிருக்கும் பொதுவாகப் பார்க்குமிடத்து பள்ளி வாசலைப் பார்க்கினும் வீட்டில் தொழுதுகொள்வது உத்தமமானதாகுமென அப்பெண்மணிக்கு கட்டளையிட்டதாக இமாம் முஹம்மத் ரிவாயத்துச் செய்கிறார்கள். இக்கட்டளைக்குப் பின் அப் பெண்மணி தாம் தேக வினியோகமாகும் வரை தன் வீட்டிற்குள் ஒரு பள்ளியை அமைத்து அதில் தொழுது வந்ததாகக் கூறப்படுகிறது.

“சில பெண்மணிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருச்சமுகத்திற்கேகி ஆண்டவனின் தூதரவர்களே! ஆண் பிள்ளைகளுக்கோவெனின் (பீசபீல்) யுத்தகளத்திற்குச் சென்று ஆண்டவனின் பாதையில் தியாகம் செய்து அதன் பலனைப் பெறும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. எத்தகைய காரியத்தைச் செய்தால் அதைப்போல் நாங்களும் புண்ணியமடைவோ மென வினவியதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள், எந்தப் பெண்மணி வெளியில் புறப்படாமல் தன் வீட்டிலிருந்தே தொழுதுகொள்வாளோ அப்பெண்மணி பீசபீலின் பதவியை அடைவாளென்று திருவுளமானதாக அனஸ் (ரலி) அவர்களைத் தொட்டும் பஸ்ஸாஸ் ரியாயத்துச் செய்கின்றார்கள் (தப்ஸீர் ரூஹுல் மஆனி).

(7) வினு.—பெண்மணிகள் வெளியிற் செல்லக்கூடாது, தன் சத்தத்தை பரபுருஷர்கள் கேட்கும்படி செய்யக்கூடாது, தன் தொழுகையைக் கூட வீட்டில் தான் தொழ வேண்டுமென்பதும் (முபஸ்ஸிரீன், முஹத்தீன்) குர் ஆன் ஹதீதுகளின் விருத்தியுரை ஆசிரியர்களால் திட்டம் செய்யப்பட்டுப் போயிற்று. இப்பொழுது புக்ஹாக்கள் அது விஷயமாய் யாது கூறுகின்றனர்?

விடை:—அவர்களும் இதைவிட அவசியமான முறையில் கோஷா முறையை அனுஷ்டிக்கும்படி கட்டளை யிட்டிருக்கின்றார்கள்.

அதற்கு மேற் கோட்களாவன:—இச்சையின் பயமற்று சந்தேகத்தின் எண்ணம் நீங்கியிருக்குங்கால், அவசியமாயின் பரஸ்திரீகளின் முகத்தையும் (பஞ்சா) கைகளையும் பார்ப்பது ஆகும் (துர்ருல்முக்தார்) “பெண்மணிகள் முக மூடியின்றி இருப்பதைக் கொண்டு அவர்களின் முகங்களை ஆண்கள் பார்ப்பதால் இச்சையின் பார்வை ஏற்பட்டு பித்னு, பஸாது உண்டாவதற்கு ஹேதுவு ஏற்படுவதால் அவர்கள் முகமூடியின்றி யிருப்பதைத் தடுக்க வேண்டும்” (ஜாமிஉர்ருமூஜ்)

பரமாதர்களின் நெற்றி உரோமங்களையும் சோட்டியையும் பார்ப்பதால் ஏற்படும் பித்னுக்கள் மறைந்தனவன்று” (ஜாமிஉர்ருமூஜ்).

“பரமாதரைப் பார்ப்பதைக்கொண்டு இச்சை ஏற்படுமென்ற நம்பிக்கை அல்லது எண்ணம் உதிக்குமாயின் அப் பெண்மணியைப் பார்ப்பது ஹறாமாகும் (கூடாது) “எவன் பெண்மணிகளின் பின்னல் நோட்டமிட்டு அம்மாதின் எலும்பின் கதுப்பைப் பார்த்தானே அவன் சுவர்க்கத்தின் வாடையைக்கூட முகரமாட்டா”னென நாயகம்(ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. “வாலிபப் பெண்கள் தங்கள் முகங்களைப் பரபுருஷர்கள் முன்பாக வெளியாக்கக் கூடாதெனக் கட்டளை பிறப்பிக்கப் பட்டிருப்பது, அது வெட்க ஸ்தலம் என்பதற்காகவல்ல. அதனுல் பித்னு உண்டாகுமென்பதை உத்தேசித்துத்தான் (துர்ருல்முக்தார்).

“பெண்மணிகளின் குரலோசை மறைவாக வைக்கக்கூடிய வஸ்துக்களி லொன்றாகும். இதை ஆதாரமாகக் கொண்டு பெண்கள் கண் குருடான ஒரு ஆண்பிள்ளையிடம் குர்ஆன் ஷரீபைக் கற்றுக் கொள்வதைப் பார்க்கினும் ஒரு பெண்பிள்ளையிடம் கற்றுக் கொள்வது மேலெனக் கூறப்பட் டிருக்கிறது.

எக் குற்றங்களுக்காகப் பெண்மணிகளை அடிப்பது மார்க்கத்தில் ஆகுமாகப் பட்டிருக்கின்றதோ அக் குற்றங்களில் கீழ்க்குறிப்பிடப் படும் விஷயங்களும் சேர்ந்ததாகும்:—(1) பரபுருடர் முன்னிலையில் தனது ரூபத்தைக் காண்பிக்கிறது (2) பிறரை யேசுவது (3) தன் சத்தத்தைப் பரபுருடர் கேட்கும்படிச் செய்வது.

பெண்கள் ஜமாஅத்துத் தொழுகைக்குப் போகலாமா வென வினவப்பட்டதற்கு, பித்னாவும் பஸாதும் மிகுந்தும், கியாமத்துநாள் அடுத்தும் உள்ள இக்காலத்தில் இரவு பகல் எந்நேரத்திலும் வாலிபப் பெண்களானாலும் சரியே கிழவியானாலும் சரியே யாவரும் ஜமா அத்துத் தொழுகைக்குப் போகக்கூடா தென்றே தீர்ப்பளிக்கப்பட்டிருக் கின்றது.

"பெண்மணிகள் தொழுகைக்குச் செல்வது முற்காலத்தில் ஆகுமாக்கப்பட் டிருந்தது. எப்பொழுது அவர்கள் வெளியில் புறப்படுவது பித்னா உண்டாவதற்குக் காரண மாயிற்றோ அதுமுதல் அவர்கள் தொழுகைக்கும் செல்லக் கூடாதென்று தடுக்கப்பட்டுப் போயிற்று"

பெண்கள் ஜமா அத்திற்குப் புறப்படுவதை முன்னிட்டு பித்னா ஏற்படுவதால் பெண்கள் வீட்டில் தான் தொழவேண்டும். ஜமா அத்திற்குச் செல்வது அவர்களின் கடமை யன்று என மார்க்கத் தீர்ப்பளிக்கப்பட் டிருக்கின்றது.

முடிவாகப் பெண்கள் வீட்டுக் கூடங்களில் தொழுவதைப் பார்க்கினும் அறைகளில் தொழுவது தான் மேலான காரிய மாகும்.

சிறப்புற்ற அவ்லியா அல்லாக்க ளாகிய சஹாபாக்களின் காலத்தில் பித்னாவின் பயமில்லாமலிருந்தும் பெண்கள் பள்ளிவாசலுக்கு வருவதினின்றும் தடுக்கப்பட் டிருந்ததோடு, ஜமா அத்தின் கடமையும் அவர்களை விட்டு நீக்கப்பட்டிருந்தது. வீட்டில் தொழுவதுதான் ஜமா அத்தோடு தொழுவதைப் பார்க்கினும் வரிசையான தாகயிருந்தது என்றால் பித்னாவும் பஸாதும் நிரம்பியுள்ள இக்காலத்தின் விஷயமாக என்ன அபிப்பிராயப் படுகின்றீர்கள்?" அவர்களைப் பள்ளிவாசலுக்குச் செல்லக் கூடாதென்று தடுப்பதற்குச் சரியான காலம் இது வன்றோ?

(தொடரும்)

மதிப்புரை

பராஹீனுல் குர் ஆனிய்யா, பீ. ரத்தி, மஸாயிலில் காதியானிய்யா.

(1) இப்பெயர் கொண்ட அரபுத்தமிழ் நூலொன்று நமது பார்வைக்குக் கிடைத்திருக்கிறது. இதில் வழிகெட்ட காதியானிகளின் தவறுன கொள்கைகட்கு தக்க மறுப்பும், நரகத்திற்கு முடிவு உண்டென்று அவர்கள் பிதற்றித் திரியும் கூற்றுக்களுக்கு குர் ஆன்ஷரீபின் அமிர்த மொழிகளைக் கொண்டு தக்க வாயாப்பும் கொடுக்கப் பெற்றுள்ளது. இஃது காஹிர் மாநகர் ஜனுப் ஹாஜி அஹ்மத் முஹையித்தீன் ஆலிம் சாஹிப் அவர்களால் இயற்றப் பெற்றது. இதன் கிரயம் அணு 8. வேண்டுவோர் ஹாஜிகுளம் அஹ்மத் முஹைபித்தீன் ஆலிம் சாஹிப் சதுக்கைத் தெருவு காயல் பட்டணம் என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பர்மிய போதுனி

(2) இப்பெயர் கொண்ட நூலின் இரண்டாம் பாகத்தின் பிரதி யொன்று வரப்பெற்றோம். இஃது ரெங்கூன் நவீனகதா வாசக சாலையாரால் இயற்றப் பெற்றதாகும் பிரதேசங்களிலிருந்து வியாபாரத்திற்கோ அன்றி உத்தியோகத்திற்கோ அங்கு சென்று பர்மிய பாஷை தெரியாமலிருப்பவர்கள் வெகு எளிதில் அப்பாஷையைக் கற்றுக் கொள்ளற்குத் துணையான நூலாகும். இதன் விலை அணு 4 வேண்டுவோர் நவீன கதாபுத்தகசாலை மங்கமாரி வீதி ரெங்கூன் என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்,

நூறுல் இஸ்லாம் சங்க சட்ட புஸ்தகம்.

(3) அதிராம் பட்டணத்தில் நிறுவப் பெற்றுள்ள மகுடத்தில் கண்ட சங்கத்தின் சட்ட திட்டங்களடங்கிய ரூல்ஸ் புஸ்தக மொன்று வரப்பெற்றோம் அதில் குறிப்பிடப் பட்டிருக்கும் சங்கத்தின் நோக்கங்களைக் கவனிக்கு மிடத்து, முஸ்லிம்களின் முன்னேற்றத்தைக் கோரி அமைந்துள்ள இவ்விதமான சங்கங்கள், ஒவ்வொரு ஊரிலும் அவசிய மிருக்க வேண்டு மென்றே கருதுகின்றோம். அதில் சங்கத்தின் அங்கத்தினர்கள், நிருவாக சபையார், டிரஸ்டி முதலியவர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறை வெகு தெளிவாகவும் அமைக்கப் பெற்றுள்ளது. இத்தன்மை போல் ஒவ்வொரு சங்கமும் அதன் சட்ட திட்டங்களை அமைத்துக் கொள்வது சாலச்சிறந்ததென்று அபிப்பிராயப்படுகின்றோம்.

ஷஃபான் மாதச்சிறப்பு

இம்மாதம் அநேக மேன்மைகளும் பாக்கியங்களும் நிறைந்ததாகும். செய்யிதுனா அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்கள் தாம் இயற்றிய அரிய கிரந்த மொன்றில் பின்வருமாறு கூறியுள்ளார்கள்:— "எவனொருவன் ஆண்டவனுடைய அளவிலாத் திருவருட் பாக்கியங்களைப் பெற்றுய்ய ஆவல் கொள்ளுகின்றானோ அன்னவன் இப்புனித மாதத்தில் தனது மனத்தூய்மைக்காகவும், அந்தரங்க உள்ளச் சீர்திருத்தத்துக்காகவும், ஆன்மார்த்தப் பரிசுத்தத்துக் காகவும் விசேஷகரமான வணக்க ஏற்பாடுகளை செய்து கொள்வானாக. இந்த மாதத்தில் பக்தர்கள் கேட்கும் பிரார்த்தனை இறைவனால் ஏற்றுக்கொள்ளப் படுதற்கும், பயன் தருவதற்கும் அநேக சந்தர்ப்பங்கள் அமைந்துள்ளன. பரிசுத்தம் மிக்க ஆண்டவன், தன்னிடம் வேண்டி இறைஞ்சி மன்றாடுபவர்க்கு அளவற்ற திருவருள் புரிவதோடு, தன்னுடைய விசேஷித்த கருணையைக் கொண்டும் அருளைக் கொண்டும் கண்ணியப் படுத்திவைக்கின்றான். மேலும் அத்தகைய நல்லடியார் கட்கு மேலான பதவியையும் அளவற்ற புண்ணியப் பலனையும் அளித்தருள் புரிகின்றான்." (அஸ்ராருல்மஆனி)

ஹஜ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் ரிவாயத்துச் செய்வதாக, முஅத்தா இமாம் மாலிக் அவர்கள் பின்வரும் ஹதீதை எடுத்தோதுகிறார்கள். அதாவது:—"நபிகள் திலகம் ஸர்வரே ஆலம் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதாவது—ஷஃபான் மாதம் எனக் குகந்த மாதமாகும். இத்திங்களானது இரு அரிய பாக்கியங்கள் திகழும் மாதங்களாகிய ரஜபு, ரமலான் இவ்விரண்டுக்கு மத்தியில் அமைந்துள்ள புனித மாதமாகும். இந்த மாதத்தில் அடியார்களுடைய அனுஷ்டானக் கிரியை யெல்லாம் வல்ல இறைவனுடைய திருச் சமுகத்தில் சமர்ப்பிக்கப் படுகின்றன. எனவே நல்ல அடியார்களுக்கு இம்மாதத்தின் ஆன்மார்த்த உயர்ப்பதவிகள் அளிக்கப் படுகின்றன."

மேலும் ஞானிகளின் இமாமாகிய ஹஜ்ரத் காஜாஹஸன் பஸ்ரீ (ரஹ்) அவர்கள் இந்த ஷஃபான் மாதமேன்மைகளைப் பற்றிப் பிரஸ்தாபிப்பதாவது:—"யான் ஷஃபான் மாதம் அநேக நற்பாக்கியங்களையும் சிறப்புக்களையும் பெற்ற தென்பதைத் தெரிந்து கொண்டுள்ளேன். இம் மாதத்தில், ஜீவிக்கும் மனிதர்க்கும், இறந்துபோன ஆன்மாக்களுக்கும் இறைவனால் பாப மன்னிப்பும், நன்மையும் அருளப் படுகின்றன. ஆகவே எவனொருவன் இந்த ஷஃபான் மாதம் 15-ந்தேதி யன்று தனது உலக விவகாரங்களையும் தொல்லைகளையும் விடுத்து மன அமைதியோடு" கபரிஸ்தான் (புதையின் தலத்துக்கு)ச் சென்று கப்ரினுள்ளாரின் ஆன்மாக்களுக்காக பிரார்த்தித்து ஆண்டவனிடம் பாப மன்னிப்புக் கோருவதுடன், தன்னுடைய பிற்கால கியாமத்தின் நற்கதிக்காகவும், ஈடேற்ற ஐயம் கிடைப்பதற்காகவும் உருக்கமாக பிராத்திப் பானாகில் நிச்சயமாக இப்படிப்பட்டவன் நற்பாக்கிய சாலியும் புண்ணிய சீலனுமாவான். மேலும் ஷஃபான்மாதம் 15-ந் தேதி கபரிஸ்தானுக்குச் சென்று இறந்தோர்களின் ஆன்ம விமோசனத்துக்காக வேண்டி பாபமன்னிப்புப் பிராத்தனைகளைப் புரிவது ஷரீ அத்தின்படி முஸ்தஹப்புமாகும்." (தத் கிரத்து ஸ்ஸாலிஹீன்.)

மேலும் இமாம் அபூயூஸுப் (ரஹ்.) அவர்கள்பின் வருமாறு உபதேசித்துள்ளார்கள். அதாவது:—"சிறப்புற்ற ஷஃபான் மாதத்தில் அனுஷ்டானக் கிரியைகளைச் சீர்த்திருத்திக் கொள்வதும், புண்ணியங்களும் பாக்கியங்களும் பெற்றுய்வதற்காக முயற்சிப்புரிவதும், சன்மார்க்கப்படி யொழுகும் உத்தமர்கள் கடமையாகும். எவனேனும் இப்புனிதமாதத்தில் மெய்ம் மறந்து தூங்கிக்கொண்டோ அஞ்ஞான மென்னும் மறதியினால் மெய்ஞ் ஞானத்தை மறந்து விட்டோ, புண்ணியமும் நன்மையும் பெற்றுய்ய முயற்சி செய்யாமல் சோம்பல் கொண்டோ வாளாயிருந்து விடுவானாயின், இப்படிப்பட்டவனின் துர்ப்பாக்கியம் பெரிதும் வருந்தற்குரிய விஷயமாகும். இன்னமும் எவரேனுமொரு நல்லவர் இந்த ஷஃபான் மாதம் 15-ந்தேதியன்று தன்

னுடைய ஸ்திதிக்கும், சக்திக்கும் ஏற்றவாறு ஆகாரம் சமைத்து ஏழைகளுக்கு வினியோகித்து விருந் தளிப்பாரானல் இத்தகையவருக்கு அளவற்ற புண்ணியமும் மேலானப் பதவியும் கிடைக்கும். மேலும் இந்தத்தேதியில் தான தர்மங்கள் செய்வது மிகவும் புண்ணியமானதாகும் இன்னமும் நோன்பு நோற்பது முஸ்தஹப் பானதாகும்.'' (அத்கார்)

'பராஅத்' இரவின் மகிமைகள்

நாயகம் ரசூல் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக ஹஜ்ரத் அலி (ரலி.) அவர்கள் ரிவாயத்துச் செய்வது யாதெனின், ஷஃபான் மாதத்தின் 15-ம் இரவை நிலை நாட்டுங்கள்; (நின்று தொழுங்கள்) நோன்பு வையுங்கள். ஏனெனின் இந்த இரவின் நடு நிசியில் முதல் வானத்தில் அல்லாஹ் (ஜல்.) உடைய ('தஜல்லி') பிரகாசம் வெளியாகின்றது. அப்பொழுது "பிழை பொறுக்கத்தேடு கிறவர்களுக்கு நான் பிழையைப் பொறுத்து விடுகின்றேன் (ரிஜ்க்) இரணத்தின் விஸ்தீரணத்தைக் கேட்கிறவர்களுக்குக் கொடுக்கின்றேன்; கஷ்ட சங்கடங்களில் சிக்கி உழல் கின்றவர்கள் அதை விட்டும் விடுதலை செய்யும்படி வேண்டு கிறவர்களை விடுதலை செய்கின்றேன்,'' என ஆண்டவன் கூறுகின்ருன். இவ்வாறு கிழக்கு வெளுக்கிறவரை கூப்பிடுகின்ருன் 'அபூமூஸா அஷ் அரீ' அவர்கள் ரிவாயத் செய்வதாவது, ரஸூல் நாயகம் (ஸல்.) அவர்கள் திருவுள மானர்கள் "திட்டமாக அல்லாஹு தஆலா ஷஃபான் மாதம் 15-ம் இரவில் முந்தின வானத்தில் தஜல்லி ஆகிருன். ஷிர்க்கு (இணை) வைக்கிறவர்களையும், கபடு, சூது, வஞ்சகம் வைப்பவர்களையும் தவிர்த்து மற்றெல்லா அடியார்களுடைய பாவங்களையும் பொறுத்து விடுகிருன்.''

ஒரு இரவு நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை வீட்டிலிருந்து காண வில்லை; பின்பு 'மதீனு முநவ்வரு' கபுர் ஸ்தானில் கண்டேன்; அவ்வமயம் பெருமானவர்கள் கூறியதாவது "ஆயிஷாவே! "அல்லாஹு தஆலாவும், அவனுடைய ரசூலும் உன்மீது அநீதம் செய்து விடுவார்களென்று பயந்து கொண்டாயோ?'' வென்று வினவினர்கள். அதற்கு நான், "ரசூல் நாயகமவர்களே! தாங்கள் வேறு மனைவியர்களில் ஒருவர் வீட்டிற்கு சென்றிருப்பீர்களென நினைத்தேன்'' எனக் கூறினேன். அதற்கவர்கள் "திட்டமாக அல்லாஹு தஆலா ஷஃபான் மாதத்திய 15-வது இரவாகிய இன்றைய இரவு முந்தின வானத்தில் தஜல்லி ஆகிருன். இன்றிரவு 'பனூ கல்பு' வகுப்பாரின் ஆடுகளின் உரோமங்களுடைய எண்ணிக்கையினும் அதிகமான அடியார்களுடைய பாவங்களை மன்னிக்கின்ருன் எனக் கூறினதாக ஆயிஷா' (ரலி) அவர்கள் ரிவாயத்துச் செய்கிருர்கள். நாயகம் ரசூல் (ஸல்) அவர்கள் இந்த (ஷஃபான் 15-வ) இரவு யாது? என்பதை அறிவாயா என என்னைக் கேட்டார்கள்; அதற்கு அல்லாவுடைய ரசூலே! இந்த இரவின் மகிமை யாது என நான் வினவினேன். அதற்கு நாயகமவர்கள் கூறியதாவது:—இவ்வருஷம் பிறக்கப்போகின்ற பிள்ளைகளுடைய கணக்கும் இறக்கப்போகிறவர்களுடைய கணக்கும் இதே இரவில் எழுதப்படுகிறது; இதே இரவில் ரிஜக்கும் பங்கிடப் படுகிறது. எனக்கூறியதாக ஆயிஷா (ரலி) ரிவாயத்து செய்கின்ருர்கள். மேலேகண்ட ஹதீதுகளின் கருத்தாவது ஷஹ்பான் 15 வது புண்ணிய இரவில் ஆண்டவனை வணங்குங்கள்; இஸ்திஃபார் (பாவ மன்னிப்பு) தேடுங்கள்; அன்று நோன்பு கொள்ளுங்கள். இந்த இரவு சூரியன் அஸ்தமனமானதிலிருந்து கிழக்கு வெளுக்கிறவரை அல்லாஹு தஆலாவுடைய 'தஜல்லி' முந்தின வானத்தின் மீது இறங்குகிறது இந்த இரவில் என்னிடத்தில் பிழை பொறுக்க கேட்பவர்களுக்கு பிழையைப் பொறுக்கின்றேன்; ரிஜக்கைத்தேடுகின்றவர்களுக்கு ரிஜக்கைக்கொடுக்கின்றேன். கஷ்ட சங்கடங்களை நீக்கும்படி வேண்டிக் கொள்பவர்களுக்கு சங்கடங்களை நீக்குகின்றேன் என்று ஆண்டவன் அழைக்கின்ருன். இத்தன்மைப் போலவே மற்ற அடியார்களையும் தங்கள் ஹாஜத்களைக் கேட்டுக்கொள்ளும்படி கூப்பிடுகிருன் என்பதே.

ஆண்டவன் கூவி அழைக்கும் அவ்விரவில் முஸ்லிம்கள் தங்களின் இருதயத்தை பொருமை, வஞ்சகம், சூது, முதலிய கெட்ட குணங்களைவிட்டும் தூய்மையாக்கி, கலப்பற்ற மனதோடு தங்களின் பாவங்களை உன்னி கண்ணீர் வடித்து அவனிடத்தில் பிழை பொறுக்கத் தேடவேண்டும்.

ரிஜக்கை விஸ்தீரணப் படுத்தும்படி அவன் சமூகத்தில் இறைஞ்சிய (பிரார்த்தனை) புரிய

வேண்டும். இதுபோலவே மற்றெல்லா ஹாஜத்களையும் அவனிடத்தில் கேட்டுக் கொள்ளவேண்டும். கொடையாளனுகிய அல்லாஹ்ஹ தஆலா அழைக்கும்பொழுது அவனிடத்தில் ஹாஜத்களைக் கேட்டுக்கொள்ளும் விதத்தில் கேட்டுக்கொள்ளாமல் தூக்கத்தில் இருந்துவிடுகிறவன் துரதிருஷ்ட சாலியே ஆவன் என்பதில் சந்தேகமுண்டோ?

உண்மை முஸ்லிம்கள் இந்தப் புனித இரவில் செய்யவேண்டிய காரியங்கள் மேலே கூறப்பட்டுள்ள நற்காரியங்களே யாகும். இவைகளைத் தவிர்த்து சில பாமரர்கள் அன்று அநேக பித்அத்தான காரியங்களை செய்யத் துணிவது வருந்தத் தக்கதே யாகும். உதாரணமாக ஒரு சிலவிடங்களில் இந்தப் புண்ணிய இரவில் வாண வேடிக்கை செய்வதை முக்கியமாகக் கருதி செய்து வருகிறுர்கள். இஃது பெரும் பாவமான பித்அத்தான காரியமாகும். இதுபோன்ற அநேக சடங்குகளையும் பித்அத்தான காரியங்களையும் செய்து வருகிறுர்கள். அவைகள் அனைத்தும் இடைக்காலத்தில் புகுத்தப்பட்ட கெட்ட காரியங்களேயாகும். வாண வேடிக்கையை இப் புண்ணிய இரவில் முஸ்லிம்கள் செய்யும் துர்வழக்கம் உண்டானதைப்பற்றி 'அல்லாமா ரஷீது' 'தவுபீக் கதீப் மிஸ்ரீ' அவர்கள் அர்ரஷாத் என்ற கித்தாபில் வெகுவாய் ஆராய்ச்சியோடு விஸ்திரப்படுத்தி கீழ்க்காணுமாறு எழுதியிருக்கிறுர்கள்.

பரா அத்தினுடைய புனித இரவில் வாணவேடிக்கை செய்துகொண்டாடும் துர்வழக்கம் ஹஜிரி 1146-ம் வருஷத்தில் ஆரம்பமானது. பொருளை நாசப்படுத்தும் இத்துர்வழக்கத்தை ஏற்படுத்தியவர்கள், நெருப்பை வணங்கும் காபிர்களாகிய சில விஷமிகளே யாவர். அன்னவர்கள் கபடமாக, சில தினங்களுக்கென்று இஸ்லாத்தைத் தழுவி முஸ்லிமானுர்கள். அப்பொழுது அவர்கள் நாங்கள் முஸ்லிம்களுடைய முதலுக்கும், உயிருக்கும் நஷ்டமுண்டாகக்கூடிய ஓர் சாங்கியத்தை ஏற்படுத்திவிடுவோம் என்று அவர்களின் வகுப்பாருக்கு சபதம் கூறி இஸ்லாத்தில் சேர்ந்தார்கள். அவர்களே ஷஃபான் மாதம் 15-வது புனித இரவில் வாணவேடிக்கை செய்து அச்சடங்கை வழக்கமாக்கினுர்கள், பின்னர் அவர்கள் இஸ்லாத்தைவிட்டு மாறி காபிர்களாய்விட்டார்கள். என்றுலும் மற்ற முஸ்லிம் பாமர ஜனங்கள் அத்துர் வழக்கத்தைக் கைகொண்டு நாளது வரை செய்துவருகிறுர்கள்.

உண்மை தெரிந்த பின்னரேனும் பித்அத்தான கெட்ட காரியங்களை விட்டொழிக்க வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமின் கடமையாகுமென்று நாம் சொல்லாமலேயே நன்கு விளங்கக் கிடக்கின்றது.

ரமலானின் சிறப்பு.

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதை ஆரம்பிப்போம்).

"ரமலான் மாதம் (எத்தகைய சிறப்புடையது என்பதை அறிவீர்களா?) இம்மாதத்தில் தான் மானிட (கோடியின்) நேர்வழிகாட்டியாகவும் (அந்) நேர்வழிக்கு அத்தாக்ஷியாகவும், (நன்மை இன்னது, தீமை இன்னது என்று) பிரித்தறிவிக்கும் படியானது மாகிய குர்ஆன் (ஷரீப் இறக்கி) அருளப்பெற்றது. ஆதலின், உங்களிலெவன் அம்மாதத்தை அடைகின்றுனே, அவன் அதில் நோன்பு நோற்க வேண்டும்" அல்குர்ஆன்.

மாதங்களில் தலைசிறந்த ரமலானின் மேன்மையைப்பற்றி நம் திருமறைமேற் கண்டவாறு நன்கு விளக்கிக் காட்டுகின்றது. இம் மாதமானது எல்லா மாதங்களைப் பார்க்கினும் சிறப்புதங்கியதாகும் இதில் அல்லாஹு ஸுப்ஹானஹு வதஆலா தனது சொந்தமான கிருபா கடாக்ஷங்களை மனித கோடிகளின்மீது இறக்கி வைக்கின்றுன். இருதயத் தூய்மையை விரும்பி துஆ (பிரார்த்தனைப்) புரிவோர்க்கு சம்பூரணமான கிருபாகடா

கூத்தை அருள்புரிகின்றான். இச்சங்கை பொருந்திய புனித மாதத்தின் வரிசையைப் பற்றியும், இதில் முஸ்லிம்கள் நற்காரியங்களைப் புரிந்து அளவற்ற உயர் பதவிகளைப் பெறவேண்டியவைகளைப்பற்றியும் நமது நபிகள் நாயகம் றசூல் (ஸல்.) அவர்கள் மிக மிகப் பாராட்டிக் கூறியிருக்கிறார்கள். முதலாவது இப் புனித மாதத்தின் பிறையைக் கண்டவுடன், எம்பெருமான் நாயகம் (ஸல்.) அவர்கள் "ஆண்டவனே, நோன்பையுடைய இம்மாதத்தின் (பறகத்) அருளை எங்களுக்கு தந்தருள்; எங்களின் கஷ்ட சங்கடங்களை இலேசாக்கியருள்," என கூறுவார்கள்.

'ஷஃபான்' மாதம் கடைசி 'ஜும்ஆ' வன்று நாயகம் றசூல் (ஸல்.) அவர்கள் ஒரு குத்பா" ஓதினார்கள். அதில்:—

"ஓ, ஜனங்களே! ஒருமா பெரும் மங்கள கரமான புனித மாதம் உங்கள்மீது வருகிறது; அது ஆண்டவனது அருள்பெற்ற மாதமாகும். அம் மாதத்தில் மேன்மை பொருந்திய ஓர் இரவை அல்லாஹ் (ஜல்.) ஏற்படுத்தியிருக்கின்றான். அவ்விரவில் ஆண்டவனை வணங்குவதானது ஆயிரம் மாதம் வணங்குவதைப் பார்க்கினும் அதிகப் பதவி யுடையதாயிருக்கும்; அம் மாதத்தில் நோன்பு நோற்பதை உங்கள் மீது ஆண்டவன் கடமையாக்கி யிருக்கின்றான். அம் மாதத்தின் இரவுகளில் வணங்குவதை நபிலாக ஆக்கியிருக்கின்றான். எவன் அம் மாதத்தில் நபிலான வணக்கம் புரிகின்றானோ அவனுக்கு மற்றமாதங்களின் பர்லானவணக்கங்களைப் புரிவதின் பதவி கிடைக்கும். எவன் அம்மாதத்தில் பர்லான வணக்கம் புரிகின்றானோ அவனுக்கு மற்ற மாதங்களின் 70 பர்லான அமல் செய்வதின் பதவி கிடைக்கும். இம்மாதம் உண்ணல் பருகல் இவைகளை விட்டு 'ஸப்று' செய்யக்கூடிய மாதமாகும். ஸப்ரின் பதவி சுவனபதியாகும்.

இன்னும் இம்மாதமானது அடியார்கள்மீது அனுதாபங்கொண்டு கலந்துறவாடும் மாதமாகும். இன்னம் இம்மாதமானது மூமினான அடியார்களுடைய (ரிஜ்கை) பலனை விஸ்தீரணப் படுத்தக்கூடிய மாதமாகும். எவன் இம்மாதத்தில் நோன்பாளிகளுக்கு உணவு அளிக்கின்றானோ அன்னவனின் பாவங்கள் பரிகரிக்கப்படுகின்றன. அவன் நரகத்தை விட்டும் மீட்சி பெற்று விடுகின்றான்." என நாயகம் றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எடுத்தோதினதாக 'ஸல்மான் பார்ஸி' (றலி.) அவர்கள் றிவாயத்து செய்திருக்கின்றார்கள்.

மேற்கண்ட நாயக வாக்கியங்களிலிருந்து நாம் உணர்ந்துகொள்ள வேண்டிய விஷயங்களாவன:—

அண்ட சராசரங்களைப் பார்க்கினும் ஆண்டவன் எவ்வாறு உயர்பதவி யுடையவனாயிருக்கின்றானோ அத்தன்மைப்போலவே மற்ற மாதங்களைப் பார்க்கினும் இம்மாதம் உயர் பதவி யுடையதாகும். அம்மாதத்தில் செய்யப்படும் முஸ்லிம்களுடைய நல் அமல் (கிரியை) களுக்கு மற்ற மாதங்களில் செய்யப்படும் நல்ல அமல்களைப் பார்க்கினும் அபரிமிதமான பதவிகளுண்டு. ஆனதுபற்றி அம்மாதத்தின் ஒவ்வொரு பகலையும் இரவையும் ஒவ்வொரு நேரத்தையும் ஒவ்வொரு நிமிடத்தையும் ஒவ்வொரு வினாடியையும் அல்லாஹு தஆலாவின் (இபாதத்) வணக்கத்திலேயே கழிக்கவேண்டும். பொய், புறம் பேசல், கோட் சொல்லல், மோசம், பொறாமை, முதலிய சகல பாபகாரியங்களையும் விட்டு தவிர்ந்துகொள்ளல்வேண்டும்.

ஆகவே புண்ணியமிக்க கண்ணியமான இந் நன்மாதத்தில் நாம் அனைவரும் இறைவனை வணங்கி அவனது நல் அருளையும் பாக்கியத்தையும் பெற எல்லாம் வல்ல ஆண்டவன் நம் யாவருக்கும் கிருபை பாலிப்பானாக!

அனுதாபம்.—காயல் பட்டணம் ஹாபிஸ் அ. ச. முஹம்மது அப்துல்காதிர் ஆலிம் முத்துவாப்பா அவர்கள் பக்கவாத நோயால் பீடிக்கப்பட்டு 17 தேதி புதன்கிழமை பகல் 12 மணிக்கு தாருல்பகா அளவில் சேர்ந்தார்கள் என்ற சமாசாரத்தைக் கேட்டு பெரிதும் விசனிக்கின்றோம். இவர்களின் மௌத்தானது பொதுவாக முஸ்லிம்களுக்கும், சிறப்பாக காஹிர் நகர்வாசிகளுக்கும் அளவற்ற மனவருத்தத்தைத் தருமென்றே கருதுகின்றோம். தமது அன்புக்குரிய அரிய சகோதரரை இழந்துவாடும் நம் சங்கத்தின் டிரஸ்டியும், அங்கத்தினருமான ஜனப் ஹாபிஸ் அ. ச. ஹாஜி முஹையித்தீன் சதக்கத்துல்லா ஆலிம் அவர்களுக்கும் மற்ற அவர்களின் பந்துமித்திரர்களுக்கும் சங்கத்தின் சார்பாக மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நோன்பின் மகிமை.

"உங்களுக்கு முன் இருந்தவர்களுக்கு (அதாவது முந்தின நபிமார்களின் (அலைஹிம்) வேதங்களைப் பின்பற்றியவர்களுக்கு நோன்பு) விதிக்கப் பெற்றமை போல் நீங்கள் (தீமையை) தவிர்த்துக் கோள்வதற்காக உங்களுக்கும் நோன்பு விதிக்கப்பெற்றுள்ளது" —அல் குர்ஆன்.

ஆண்டவன் நோன்பின் மகிமையைப்பற்றி சிறப்பு தங்கிய குர்ஆன் ஷரீபில் பலவிடங்களிலும் பாராட்டிக் கூறியிருக்கின்றான். நோன்பானது வணக்கங்களில் மஹா சிறந்த ஒரு வணக்கமாகும். அதன் உயர்விற்கு ஒரு எல்லையை வரையறுத்துக்கூற வியலர். ஏனெனின் ஒவ்வொரு நன்மைக்கும் அதன் கூலியை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மலாயிகத்துகள் மூலமாகக் கொடுக்கப்படுமென்றும், நோன்பானது தனக்குச் சொந்தமானதென்றும், அதற்கு கூலி தானே என்றும், தானே அதற்கு கூலி கொடுப்பேனென்றும், அடியான் எனக்காக வேண்டி உண்ணல் பருகல், காமநுகர்ச்சி முதலிய சரீர இச்சையை விட்டு விடுகின்றானென்றும் அல்லாஹ் (ஜல்) கூறுகிறதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கின்றது.

இன்னும் நோன்பாளிகளுக்கு இரண்டு சந்தோஷங்களிருக்கின்றன வென்றும், அவைகளில் ஒன்று நோன்புவிடுகிற நேரத்திலென்றும், மற்றொன்று ஆண்டவனை தரிசிக்கும் நேரத்திலென்றும் ஹதீது ஷரீபில் வந்திருக்கின்றது.

ஆண்டவன் தனது தரிசனையை நோன்பாளிகட்கு அருள்புரிவேனென்று வாக்குறுதி செய்திருப்பதைப் பார்க்கினும் நோன்பின் அளவற்ற பதவியை என்னவென்று தான் கூறல் சாலும்? நோன்பாளியுடைய வாயிலிருந்து வெளியாகும் வாடையானது ஆண்டவனிடத்தில் கஸ்தூரி, அம்பர் முதலிய வாசனைகளைப் பார்க்கினும் மேலானதென ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

ஒவ்வொரு வஸ்துவிற்கும் தலைவாயில் இருக்கிறது. வணக்கங்களுக்குத் தலைவாயில் நோன்பாயிருக்குமென நாயகம் (ஸல்) அவர்கள் அருளியிருக்கிறார்கள்.

என்னுடைய அடியான் எனக்காக அருந்தல், பொருந்தல் முதலிய ஆசா பாசங்களை விட்டு வாடுகின்றான்! பார்த்தீர்களா!! என்று நோன்பாளிகள் விஷயத்தில் ஆண்டவன் வானலோகத்திலுள்ள மலாயிகத்துக்களிடம் பெருமை பாராட்டிக் கூறுகிறதாக ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

நோன்பும் குர்ஆன்ஷரீபும் அடியானுக்கு நாளை கியாமத்தில் ஆண்டவனிடத்தில் ஷபாஅத்துச் செய்யும். "ஆண்டவனே! நான் இவனைப் பகல் காலங்களில் உண்ணல், பருகல் முதலிய சகல சரீர இச்சையைத் தடுத்துக்கொள்ளும்படி செய்திருக்கிறேன்; ஆகையால் எனக்காக இவனுடைய பாவங்களை மன்னித்தருள்" என்று நோன்பு கூறும். "ஆண்டவனே! நான் இவனை இரவு தூங்காமல் தடுத்து வைத்திருந்தேன்; அதன்படியே அவன் நடந்துகொண்டான்; ஆகையால் எனக்காக அவனுடைய பாவத்தை மன்னித்தருள்" என குர்ஆன் ஷரீபு கூறும் என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது.

நோன்பிற்கு அளவற்ற பதவியிருப்பதோடு மனிதர்களின் சரீர சுகத்திற்கும் ஆத்மார்த்த தூய்மைக்கும், உலக ஆசாபாசங்களையும் துர் எண்ணங்களையும், நான் என்ற கர்வத்தையும் அடக்கி சன்மார்க்கத்தையும் நல்லொழுக்கத்தையும் கடைபிடித்தொழுகுவதற்கும் நோன்பானது மிக ஏற்ற சாதனமாகும்.

வருஷத்தில் ஒருமுறை ஒரு மாதம் நோன்பிருந்து இரைப்பையை (காலி) வெறுமையாக வைத்திருப்பதனால், அந்த இரைப்பைக்கு மிக்க பிரயோசனமுண்டாகிறது. இவ்விதமாக ஒரு சிறிது ஒய்வு ஏற்பட்டிருக்குமாயின் நீண்ட காலம் வரை அதன் பலமும் உறுதியும் உண்டாகக் கூடும். ஒவ்வொரு முறையும் ஒய்வு கொடுத்துவருவதால் அதற்குப்பின் தன் வேலையை நல்லவிதமாகச் செய்கின்றது. தவிர வருடத்திற்கொரு முறை ஒரு மாதம் பசித்து தாகித்

திருந்து சற்று கஷ்டம் எடுத்துக்கொள்வதனுல் நாம் தேசீய ராஜிய விஷயத்தி லகப்பட்டு இரண்டொரு வேளை சாப்பிடாம லிருப்போமாயின், அக்கஷ்டம் நமக்கு அறவே தெரியாமலாய் விடும். மனிதர்கள் பசி, தாகம் முதலியவைகளை அடக்கச் சக்தி யற்றிருப்பதனுல் தான் பசிதாகம் மேலிட்ட நேரத்தில் தன் கையிலில்லாவிட்டாலும் பிறரின் சொத்தை யபகரித்துத் தின்னும்படி ஏற்படுகிறது. நோன்பாளி, பட்டினியிருக்க நேரிடுவதால் அவன் சரீரத்தினுள்ள சக்தி குறைந்து அகந்தை கர்வம் மமதை முதலிய இழி குணங்கள் அவனை விட்டு நீங்குவதுடன் காமம், இச்சை, ஆகியவைகளும் அடங்கியிருக்கின்றன. உலகில் நடக்கும் பஞ்சமா பாதகங்கட்குப் பெரும்பாலும் அத்தகைய இழி குணங்களே மூலக் காரணங்களாகும். நோன்பு நோற்பதால் அத்தகைய பாபகாரியங்கள் மனிதனை விட்டு ஒழிவதற்கு ஹேதுவாயிருக்கின்றது.

தவிர, நோன்பு நோற்பதால் பசியின் கொடுமையை ஒருவாறு உணர்ந்து கொள்ள நேரிடுகின்றது. இதனுல் வறுமைக்காளாகிப் பசித்துத்துடிக்கும் ஏழைகளின் துயரை உணரவும், அவ்வேழைகள் பால் இரக்கங் கொள்ளவும், அவர்களின் பசிப் பிணியைப்போக்கவும் நமக்கு விருப்பம் உதிக்கும். நோன்பு நோற்பதால் சரீரம் மெலிந்து பலக் குறைவு ஏற்படுவதாக வெளிப்பார்வைக்குத் தோன்றினும் ஆழ்ந்து பார்க்கின் நோன்பு எவ்விதத்தினும் நன்மையையே பயக்குகின்றதா யிருக்கின்றது. எதிர்காலத்திலும் நமது காரியங்களை நன்கு ஆற்றுவதற்கான சுறு சுறுப்பையும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் உண்டாக்குகின்றது. ஆதலால் சீரும் சிறப்பும், பொருந்திய ரமலான் மாதத்தில் இகபரம் இவ்விரண்டினும் சாதனத்தை யளிக்கக்கூடிய நோன்பை நோற்று அதனுல் உண்டாகும் எல்லா நற்பயன் களையும் பெற்றுத் திகழ நாயன் நம் அனைவருக்கும் அருள் பாலிப்பானுக.

நோன்பின் விபரம்.

அதிகாலையிலிருந்து சூரியன் அஸ்தமிக்கும் வரையில் பருகுவது, உண்ணுவது, ஜிமாஉ (சேர்க்கை) செய்வதை விட்டும் நீங்கி நோன்பு கொள்வதாக உறுதி கொண்டிருப்பதற்குத் தான் 'நோன்பு' எனப்படும். நோன்பு பர்லு, வாஜிபு, நபில், மக்ரூஹ் தஹ்ரீம், மக்ரூஹ் தன்ஜீஹ் என 5-வகைப்படும்.

1-வது பர்லான நோன்பு இருவகைப்படும் ஒரு வகை ரமலான் மாதத்திய நோன்பு; இதை 'ரமலான்' மாதத்திலேயே நிறைவேற்றவேண்டும். இரண்டாவது வகை, ரமலான் மாதத்தில் தவறிவிட்ட 'களா' வான நோன்பு. இதை இன்னகாலத்தில் தான் நிறைவேற்ற வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

2-வது வாஜிபான நோன்பும் இருவகைப்படும். குறிப்பிட்ட ஒரு மாதத்திலோ அன்றி ஒரு தினத்திலோ நோன்பு நோற்பதாக வேண்டுதல் செய்வது ஒருவகை. தேதி மாதம் யாதொன்றையும் குறிப்பிடாமல் நோன்பு நோற்பதாக வேண்டுதல் செய்வது மற்றொரு வகை. முந்தின வகையை அந்தந்தக் காலத்திலே தான் நிறை வேற்ற வேண்டும். பின்னையதை ரமலான் அல்லாத எக்காலத்திலும் நிறைவேற்றலாம்.

3-வது நபிலான நோன்பும் இருவகைப்படும்; முஹர்ரம் மாதத்தின் ஆஷூரா நோன்பு போன்ற ஸுன்னத்தான நோன்பு ஒருவகை. மாதந்தோறும் 'ஐயாமுல்பீல்' தினங்களாகிய 13, 14, 15 தேதிகளில் நோற்கப்படும் முஸ்தஹப்பான நோன்பு மற்றொரு வகை.

4-வது இரண்டு 'ஈத்' பெரு நாள்கள், 'அய்யா முத்தஷ்ரீக்' தினங்களான 'துல் ஹஜ்ஜு' மாதத்தில் 11, 12, 13 ஆகிய 3 - தினங்களில் நோற்கப்படும் நோன்பு 'மக்ரூஹ் தஹ்ரீ'மாகும்.

5-வது முஹர்ரம் மாதத்தின் 10-ந்தேதியில் மாத்திரம் தனியாக நோற்கப்படும் நோன்பு 'மக்ரூஹ் தன்ஜீஹ்' ஆகும்.

ரமலான் பிரை காண்பதின் விபரம்.

('ஹனபீ' மத்ஹப பின் பிரகாரம்)

ரமலான் மாதத்தின் பிரை கண்ட தினத்தன்று அல்லது ஷஃபான் மாதத்தின் 30-ந் தேதி கழிந்த பிறகு நோன்பு நோற்பது கடமையாகும். ஷஃபான் 30-ந்தேதி கழிந்து விடின் பிரை பார்க்க வேண்டிய அவசியமில்லை. வானத்தில் மேகம் முதலியன இல்லாமல் தெளிவாயிருந்து 29-ந்தேதி சூரியன் அஸ்தமித்த பின் வானத்தில் பிரை நன்ருய்த் தெரிந்தால் அன்று இரவு ரமலான் மாதத்தின் முதல் தேதி ஆரம்பித்துவிட்டதாகக் கருதப்படும். அவ் 29-ந் தேதி வானத்தில் மேகம் மூடிக் கொண்டிருக்குமாயின் பெரும்பாவஞ் செய்யாத ஆணோ, பெண்ணோ பிரை பார்த்ததாகச் சொன்ஞல் அதை ஒப்புக் கொள்ளல் வேண்டும். மேகம் முதலியன இல்லாது வானம் தெளிவாக யிருக்குமாயின் ஒரு பெருங்கூட்டம் பிரையைக் கண்டதாக அறிவிக்கவேண்டும். அஃதன்றி வானம் தெளிவாயிருக்கும் நாட்களில் 2, 3 பேர்கள் பிரையைப் பார்த்ததாகவும் மற்றவர்கள் பார்க்கவில்லை என்று கூறிஞல் அவர்களின் சொல்லைக் கேட்கக்கூடாது. ரமலான் மாதத்தின் பிரையை ஒரு ஆணோ பெண்ணோ 29-ந்தேதி பார்த்த ஆதாரத்தைக் கொண்டு ரமலான் மாதம் 30-ம் நாள் நோன்பு வைத்தபின் வானம் தெளிவாக யிருந்து பிறையைக் காணு விட்டால் நோன்பை விட்டு விடாமல் 31-வது நாளிலும் நோன்பை நோற்க வேண்டும். ஆனல் ரமலான் மாதத்தின் பிரையை 2 பேர் பார்த்ததாக கூறி யிருந்தால் 30-நாள் வானம் தெளிவாயிருந்து பிரை தெரியாமலிருந்தாலும் நோன்பை விட்டு விடலாம்.

ஷஃபான் மாதம் 29-ந் தேதி வானத்தில் மேகமிருந்து பிரை காணு விட்டால் 30-ந் தேதி சந்தேக தின மென்று சொல்லப்படும். இந்த தினத்தில் நோன்பு நோற்பது மக்ரூஹ், தந்தி, தபால், முதலிய சமாசாரங்களில் சந்தேகத்திற் கிடமிருப்பதால் அவவைகள் நம்பத்தகுந்தவை யல்ல ஆனல் பிரை கண்டதாக தந்தி வந்து, தான் பிரையைக் காணு விட்டாலும் நபிலின் நிய்யத்தை கொண்டு நோன்பு நோற்பது ஆகும்.

('ஷாபிஈ' மத்ஹப் பிரகாரம்)

மார்க்கத்திற்கு விரோத மின்றி ஞாயமாக நடக்கும் முஸ்லிம் ஷஃபான் மாதம் 29-ந் தேதி மாலை (30-ந் தேதி இரவு) பிரை பார்த்தாலும் அல்லது 30-ந் தேதி பூர்த்தியாகி விட்டாலும் ரமலான் மாதத்தின் நோன்பு வாஜிபாகும்.

நோன்பின் நிய்யத்து

(ஹனபீ மத்ஹப் பிரகாரம்)

நான் நோன்பு வைப்பேனென மனதில் நினைத்துக் கொள்வதற்கு நோன்பின் நிய்யத்து என்று பெயர். இவ்வாறு நிய்யத்துச் செய்வது 'பர்லு.' அதை வாயால் சொல்வது 'ஸுன்னத்து.' ஆகையால் நோன்பு வைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் விடியற்காலையில் '(ஸஹர் நேரத்தில்) ஒருவன் சாப்பிடுவானுயின் அதுவே நிய்யத்தாகி விடும். நாளை நான் நோன்பு வைப்பேன் இன்ஷா அல்லாஹ் என்று சொல்வானுயின் அதுவும் நோன்பின் நிய்யத்தாகும் சூரிய அஸ்தமன முதல் அது உச்சியில் வரும்வரை (ஷரஈ நடுப்பகல் வரை) நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்துக் கொள்ளலாம். ஆதலால் 'ஷரஈ' நடுப்பகலிலிருந்து சூரிய அஸ்த மனத்திற்குள் நிய்யத்துச் செய்தால் கூடா. ரமலான் மாதத்தில் வேறெந்த நோன்பிற்கும் நிய்யத்துச்செய்தல் ஆகா. அவ்வாறு நிய்யத்துச் செய்து நோன்பு நோற்ருலும் அவன் நிய்யத்துச்செய்த நோன்பு நிறைவேருது அந்தரமலான் மாதத்திய பர்லான நோன்பாக நிறைவேறிவிடும். ஆனல் பிரயாணியின்மீது ரமலான் மாதத்திய நோன்பு கடமையல்ல வானதால் அவன் பிரயாணியா யிருக்குங் காலத்தில் வேறு எந்த நோன்பையும் குறித்து நிய்யத்துச் செய்தாலும் அது நிறைவேறிவிடும். ஆனல் பிரயாணி ரமலான் மாதத்தில் அம் மாதத்திய பர்லான நோன்பையே நிய்யத்துச் செய்வது உத்தம மாகுமாம்.

நோன்பு நோற்கக் கடமைப்பட்டவர்கள்.

புத்தி சுவாதீனம் உள்ள பருவமடைந்த ஆண் பெண் ஆகிய இரு பாலாரும் நோன்பு நோற்கக் கடமைப்பட்டவ ராவர். மாதவிடாய், பேற்றுத் துடக்கு ('ஹைலு'

'நிபாஸ்') ஆகிய அசர்ந்தப்பங் கொண்ட பெண்கள் அக்காலத்தில் நோன்பு நோற்பது கூடாது. ஆனால் அக்காலத்தில் விடப்பட்டுள்ள நோன்புகளை ரமலான் அல்லாத காலத்தில் நோற்கவேண்டும். நோன்பு நோற்க சக்தியற்ற வயோதிகர், பிரயாணி (முஸாபிர்) வியாதியஸ்தர், பாலர், பைத்தியக்காரர் ஆகியவர்கள் நோன்பு நோற்பது கடமையல்ல. ஆனால் மீளா வியாதியஸ்தரும் நோன்பு நோற்கச் சக்தியற்ற வயோதிகரும் ரமலான் மாதத்தில் ஒவ்வொரு நாளிலும் முத்து (பரிகார தருமம்) கொடுப்பது வாஜிபு, வியாதியஸ்தரும், பிரயாணியும், நோன்பு நோற்பது கடமையில்லையாயினும் அவர்கள் நோன்பு நோற்றால் நிறைவேறிவிடும்.

'ஸஹர்' செய்வது.

நடு இரவிற்குப் பின் கிழக்கு வெளுப்பதற்குள் நோன்பு நோற்கும் எண்ணத்துடன் உணவருந்துவதற்கு 'ஸஹர் செய்தல்' என்று பெயர். கிழக்கு வெளுப்பதற்கு முன்னதாகவே ஒருவன் நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்துவிட்டாலும் அதற்கு பின் கிழக்கு வெளுக்கும் வரை உண்ணவும் பருகவும் செய்யலாம். நோன்பிற்கு முரண்பட்ட மற்றெல்லாக் காரியங்களைக் கூடச் செய்யலாம். கிழக்குவெளுத்து விட்டால் மேற்கூறியவைகளில் எதுவும் செய்யலாகாது. "நீங்கள் ஸஹர்செய்யுங்கள்; அதனால் 'பறக்கத்' திருக்கின்றது" என நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள்கூறியிருக்கிறார்கள். கடைசி நேரத்தில் 'ஸஹர்' செய்வது 'முஸ்தஹப்பு' ஆனால் கிழக்கு வெளுத்துவிடுமோ வென்ற ஐயம் உண்டாகும் வரை ஸஹர் செய்வதைப் பிற்படுத்துவது 'மக்ரூஹ்'. ஆதலால் அவ்வாறு சந்தேகம் ஏற்பட்டபின் உண்டி கொள்ளாமலிருப்பது நலம். கிழக்கு வெளுத்தபின் சாப்பிட்டதாக பின்பு தெரிந்தால் நோன்பு கூடாது. அதைத் திரும்ப நோற்பது வாஜிபு. இராக் காலங்களில் மனிதர்களின் அரவங் கேட்கும் போது சேவல்களும் கூவுவது வழக்கமாயிருப்பதால் அதை யனுசரித்து ஸஹர் செய்வது கூடாது ஸஹர் செய்வதற்கேற்ற நேரத்தை அறிவிப்பதற்காக சில விடங்களில் 'நகரா' அடிப்பது போன்ற அறிக்கைகள் செய்யப்படுகின்றன. அவை சரியான நேரத்தில் ஒழுங்காகச் செய்யப்படுவதாயின் அதை யனுசரித்து ஸஹர் செய்யலாம்.

நோன்பு திறப்பது.

சூரியன் அஸ்தமித்த பின் நோன்பை விடும் எண்ணத்துடன் ஏதாகிலும் ஒரு வஸ்துவைப் புசிப்பதற்கு நோன்பு திறப்ப தெனப் பெயர். சூரியாஸ்தமனத்திற்குப் பின் ஒரு வஸ்துவைப் புசிக்காவிட்டாலும் நோன்பு பூரணமாகிவிடும். ஆதலின், நோன்பைவிடும் எண்ணத்துடன் ஏதாவது ஒரு வஸ்துவைப் புசிப்பது ஸுன்னத்து. "சீக்கிரம் நோன்பைத் திறப்பவன் எனக்கதிகப் பிரியமானவன்" என நபிகள் நாயகம் (ஸல்) கூறியிருப்பதால் சூரியாஸ்தமன மானவுடன் தீவிரமாக நோன்பு திறக்க வேண்டும். நோன்பு திறக்கும்போது "யாஅல்லாஹ் நான் உனக்காகவே நோன்பு இருந்தேன்; உன்னையே விசுவசித்தேன்; (ஈமான் கொண்டேன்) உன்னையே நம்பினேன்; (தவக்கல் வைத்தேன்) நீ கொடுத்த இரணத்தை (ரிஜ்க்கை)க் கொண்டே நோன்பு திறக்கின்றேன்; நாளைக்கு என்மீது கடமையா யிருக்கும் ரமலான்மாத நோன்பை நோற்க நாடுகிறேன்; ஆதலால், யாஅல்லாஹ், நான் முன் செய்த பாவங்களையும் இனி செய்யக்கூடிய பாவங்களையும் மன்னித் தருள்வாயாக" என துஆக் கேட்பது 'ஸுன்னத்து. இவ்வாறு பிரார்த்தனை புரிவதைக் கொண்டு மறுநாள் நோற்கும் நோன்பிற்கும் நிய்யத்து ஏற்பட்டு விடுவதால் மறுநாள் நோன்பு நோற்பதற்கென பிரத்தியேகமாக நிய்யத்துச் செய்ய வேண்டிய அவசியம் கிடையா. ஆதலால் பிரத்தியேகமாக நிய்யத்துச் செய்யாவிட்டாலும் மறுநாள் நோன்பு நிறைவேறிவிடும்.

நோன்பாளி நோன்பு திறக்கும்போது, கேட்கும் துஆ கபூல் ஆகுமென்று சிறப்புற்ற ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறபடியால் தனக்கவசியமானவைகளை அல்லாஹுதஆலாவிடம் கேட்டுக் கொள்ளலாம். நோன்பு திறக்கும்போது வயிறு நிரம்ப சாப்பிடாமலிருப்பது நலம். அவ்வாறு சாப்பிடுவதால் நோன்பினால் ஏற்படும் பலன் கிட்டாது போவதுடன் வியாதி வருவதற்குங் காரணமாகும். நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் 3 பேரீத்தம் பழங்களைக் கொண்டு நோன்பு

திறப்பார்கள். தண்ணீரை மாத்திரம் அருந்தியும் நோன்பு திறக்கலாம். சூரியாஸ்தமனமானது நிச்சயமாக தெரியு முன்பு நோன்பு திறத்தல் கூடா. அவ்வாறு நிச்சயமாகத் தெரியாமல் சந்தேகமாக யிருக்கும் நேரத்தில் நோன்பு திறந்தால் அதைக் 'கலாச்' செய்ய வேண்டும். வானத்தில் மப்பு, மந்தாரம் காரணமாக சூரியாஸ்தமனமான நேரம் துலங்காவிட்டால் தாமதித்து நோன்பு திறக்கவேண்டும். சூரியாஸ்தமனமாகிவிட்டதென்று திட்டமாய்த் தெரிந்து விட்டால் ஆகாயத்தில் மேகமுள்ள எக்காலத்திலுங் கூட தாமதஞ்செய்யாது நோன்பு திறக்கலாம். சந்தேகமான நேரத்தில் நோன்பு திறந்தபின் சூரியாஸ்தமனமாவதற்குமுன் நோன்பு திறந்ததாகத் தெரியவந்தால் நோன்பைக் கலாச் செய்வதுடன், குற்றத்திற்குப் பரிகாரம் (கப்பாரா) கொடுப்பதும் வாஜிபு.

(ஷாபிஈ மத்ஹப் பிரகாரம்)

ரமலான் மாதத்தின் நோன்பு நோற்பதாக தினந்தோறும் நிய்யத்துச் செய்யவேண்டும். பொழுது அஸ்தமித்ததிலிருந்து கிழக்கு வெளுப்பதற்குள் நிய்யத்துச் செய்வதும், பர்லான நோன்பு, கலாவான நோன்பு என்று விவரமாகக் குறிப்பிடுவதும், கிழக்கு வெளுத்ததிலிருந்து சூரியன் அஸ்தமிக்கும் வரையில் நோன்பை முறிக்கக் கூடியவைகளைச் செய்யாமலிருப்பதும் நிய்யத்தின் 'ஷர்த்'களாகும். ரமலான் மாதம் முழுதும் நோன்பு நோற்பதாக அம்மாதத்தின் முதலிரவிலேயே நிய்யத்துச் செய்தால் அன்றையத் தினத்தின் நோன்பு மாத்திரமே அந்நிய்யத்தினல் நிறைவேறும். ஆதலால் ஒவ்வொரு நாளிலும் தனித்தனியே நிய்யத்துச் செய்தல் வேண்டும். எனினும் மாத ஆரம்பத்திலேயே அம்மாத முழுதும் நோம்பு நோற்பதாக நிய்யத்துச் செய்வது 'ஸுன்னத்து'. ஏனெனின், நோன்பாளி ஒரு இரவில் தற்செயலாக நிய்யத்துச் செய்வதை மறந்து விட்டால் அம்மாத ஆரம்பத்தில் செய்த நிய்யத்தின் காரணமாக மாலிக் மத்ஹபின்படி அந்நோன்பு நிறைவேறிவிடும். கிழக்கு வெளுப்பதற்குள் நிய்யத்துச் செய்ய மறந்து விட்டாலும், அதற்குப் பின் ஷரஈ நடுப்பகல் வரை நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்து கொள்ளலாம். இதனல் ஹனபிமத்ஹபின்படி அன்றைய நோன்பு அவனுக்கு நிறைவேறிவிடும். ஆனுல் அவன் ஹனபீ, அல்லது மாலிக்கீ மத்ஹபைப் பின்பற்றி நோன்பு நோற்கிறேன் என நிய்யத்துச் செய்வது அவசியமாகும்.

"என்மீது கடமையானரமலான் மாதத்தின் நோன்பை அல்லாஹுா தஆலாவிற்காக நாளை நோற்கின்றேன்" என நிய்யத்துச் செய்யவேண்டும் பிறகு "அல்லாஹுா லாஇலாஹ இல்லல்லாஹுா வல்ஹைறுயுல் கையூம் அலாகுல்லி நப்ஸின் பீமாகஸபத்' என்று 7 முறை ஓதுவது ஸுன்னத்து. இவ்வாறு செய்வது பூரணமான நிய்யத்தாகும்.

நோன்பை முறிக்கும் விஷயங்கள்

(ஹனபீ மத்ஹப் பிரகாரம்)

நோன்பை விடுவதற்காகுமான காரணங்களான வியாதி, பிரயாணம், முதலியவற்றினை உத்தேசித்து ஆகார மருந்தினுலும் உணவாக உபயோகிக்கக்கூடாத கல், மண், கடிதம், வெள்ளி, பித்தளை, தங்கம், பொன் போன்ற வஸ்துக்களை உட்கொண்டாலும், வாய்கொப்பளிக்கும்போதும் நாசிக்கு நீர் செலுத்தும் போதும் தவறுதலாக தண்ணீர் உள்ளே போய்விட்டாலும், மற்றவர்களின் கட்டாயத்தின்பேரில் பயந்துகொண்டு நோன்பை முறித்தாலும், மூக்கு, வயிறு, தலை போன்ற அவயவங்களில் புரை வைத்திருக்கும் புண்களிலே மருந்து எண்ணெய் முதலியன ஊற்ற அவைகள் மூளை அல்லது வயிற்றினுள்ளே சென்றுலும், கிழக்கு வெளுத்தது தெரியாமல் இன்னும் நேரமிருக்கிறதென எண்ணிக்கொண்டு கிழக்கு வெளுத்த பின் சாப்பிட்டாலும், சூரியாஸ்த மனத்திற்கு முன் சூரியன் அஸ்தமித்து விட்டது என்று எண்ணிக்கொண்டு தவறுதலாக நோன்பைத் திறந்து விட்டாலும், வெற்றிலைப் புகையிலை போன்ற பொருட்களைத் தின்றுலும், மூக்குப்பொடி போட்டாலும், காதினுள் எண்ணெய்யை வார்த்துக் கொண்டாலும், தூக்கத்திலிருக்கும்போது ஏதேனும் ஒரு வஸ்துவைத் தின்றுவிட்டாலும், தான் நோன்பு இருக்கிற ஞாபகம் இல்லாமல் (ஜிமாஉ) காம நுகர்ச்சி கொண்டாலும், பற்களுக்கிடையிலுள்ள பருமனுள்ள வஸ்துக்களை விழுங்கினுலும், பற்களுக்கு மத்தியிலுள்ள கடலைப் பருமனுக்கும் சிறியதான வஸ்துக்களை யெடுத்து மறுபடியும் விழுங்கினுலும் நோன்பு முறிந்துவிடும். ஆனுல் கப்பாரா வாஜிபு இல்லை.

நோன்பாளி ஞாபகமின்றி சாப்பிடுவதால் நோன்பு முறியாது. ஆனல் அவ்விதஞ் செய்து நோன்பு முறிந்துவிட்டது என நினைத்து பின்பு சாப்பிட்டாலும், பானம் அருந்தினுலும் நோன்பு முறிந்துவிடும். அதைக் களாச் செய்யவேண்டும். ஆனல் கப்பாரா வாஜிபு இல்லை.

நித்திரையில் இந்திரிய ஸ்கலிதமானலும், தாடி மீசைகளுக்கு எண்ணெய் தடவினலும், (மிஸ்வாக்கு) பல்குச்சியினல் பல் துலக்கினுலும், நோன்பு முறியாது. ஆனல் அதனல் நோன்பு முறிந்துவிட்டதென நினைத்துக் கொண்டு பின்பு சாப்பிட்டாலும், வேறு வஸ்துக்களைப் புசித்தாலும் பருகினலும் நோன்பு முறிந்துபோவதுடன் கப்பாரா கொடுப்பது வாஜிபு. ஏதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டு நோன்பு முறிந்து போகுமாயின் அந்த மாதத்தின் கண்ணியத்தை யுத்தேசித்து சாப்பிடாமலும் பருகாமலும் இருப்பது வாஜிபு.

ரமலான் மாதத்தில் நோன்பாளி பிறரின் நிர்ப்பந்த மின்றி தனது மனப் பூர்வமாக நோன்பை முறித்தாலும், தான் நோன்பாளி யென்பது ஞாபகமிருக்க காம நுகர்ச்சி கொண்டாலும் நோன்பு முறிந்து போவதுடன் கப்பாராக் கொடுப்பதும் வாஜிபாகும். அரிசிமா, கொள்ளு, உளுந்து, முதலியவைகளை வேகவைக்காமல் பச்சையாகத் தின்ருலும் நோன்பு முறிந்துவிடும். ஆனல் கப்பாராக் கொடுப்பது வாஜிபல்ல. எள்ளை வேகவைக்காமல் தின்னும் வழக்கமிருப்பதால் ஓர் எள்ளை வேண்டுமென்று அப்படியே விழுங்கின், நோன்பு முறிந்துபோவதுடன் கப்பாரா கொடுப்பதும் வாஜிபு. ஆனல் ஒரெள்ளை நன்ருய் மென்று விடுவதால் அது பற்களின் இடையே நின்று விடுவதற்கு இடமிருப்பது பற்றி ஓர் எள்ளை மெல்லுவதால் நோன்பு முறியாது ஆனல் அவ்வாறு மென்ற எள்ளின் சுவை தொண்டைக்குட் சென்றுவிட்டதாகத் தெரிந்தால்நோன்புமுறிந்துவிடும். அவ்வாறு மெல்லும்போது கொஞ்சமாக மாத்திரம் உட்சென்று விடுவதால் நோன்பு முறிந்துவிடும். ஆனல் கப்பாரா வாஜிபன்று. நோன்பை களாச் செய்வது வாஜிபாகும்.

(ஷாபிஈ மத்ஹப் பிரகாரம்)

கிழக்கு வெளுத்ததிலிருந்து பொழுது அஸ்தமிப்பதற்குள் காம நுகர்ச்சி கொள்ளுதல், தனக்கு விவாகம் செய்து கொள்வதற்கு மார்க்கச் சட்டப்படி அனுமதிக்கப்பட்ட (ஹலாலான) பெண்களை திரையில்லாமல் தொட்டு அதனல் இந்திரியம் வெளியாதல், வேண்டு மென்றே வலுவில் வாந்தி செய்தல், ஒலுச்செய்யும் பொழுது அதிகமாக வாய் கொப்பளித்து அதனல் தண்ணீருட் செல்லுதல், ஸ்நானம் செய்கையில் தண்ணீருக்குள் மூழ்கி அதனல் துவாரத்திற்குள் தண்ணீர் செல்லுதல், 'காரல்' முதலியன தொண்டையை விட்டு நீங்கி வந்தபின் அவற்றினை மறுபடியும் விழுங்குதல், வாயிலிருக்கிற இரத்தம் முதலியவைகளைத் துப்பி வாயைச் சுத்தம் செய்வதற்கு முன் உமிழ் நீரை விழுங்குதல், சரீரத்தின் உட்புறம் வரை துவாரங்கள் வழியே கண்ணுக்குப் புலப்படக் கூடிய பொருட்கள் உட்செல்லுதல் ஆகிய இவைகளால் நோன்பு முறிந்து போகும். புதிதாக இஸ்லாம் மார்க்கத்தைச் சேர்ந்தவன் அல்லது நோன்பு சம்பந்தமான விதி விலக்குகளை அறியாதவன் மேற்கண்ட காரியங்களை தவருகச் செய்து விட்டால் மன்னிக்கப்படும்.

நோன்பை முறிக்காதவைகள்

(ஹனபீ மத்ஹபுப் பிரகாரம்)

பொய்யுரைத்தல், புறங்கூறல், முதலியன நோன்பை முறிக்கா. ஆனல் பொய்யுரை பகர்தல், புறங்கூறல் முதலிய கெட்ட துர்வழக்கங்களை நீக்காவிடில், நோன்பின் முக்கிய நோக்கமாகிய அகசுத்தி சித்தி பெருது. ஆதலின் மேற்கூறிய செயல்களால் நோன்பு முறியாவிட்டாலும் நோன்பின் பயன் இல்லாமல் போம் என மார்க்கச் சட்ட அறிஞர்களான பிக்ஹுடைய உல்மாக்கள் கூறியிருக்கின்றனர். நோன்புமுறிக்கக்கூடிய காரியங்களாய சாப்பிடுதல், குடித்தல், காமநுகர்ச்சி கொள்ளுதல் போன்ற காரியங்களை நோன்பாளி என்ற ஞாபக மில்லாமல் செய்து விடுதல், எண்ணெய் தேய்த்துக் கொள்ளல், ஸ்நானஞ் செய்தல் ஆகிய இவற்ருல் நோன்பு முறியாது. காதுக்குள் தண்ணீர்போய் விட்டாலும் வாய் நிரம்ப இல்லாமல் கொஞ்சமாக வந்த வாந்தியை நோன்பாளி என ஞாபகமிருக்க விழுங்கி விட்டாலும், ஈ, தூசு, முதலிய அற்ப வஸ்துக்கள் தவறி வாய்க்குட் சென்று விட்டாலும், மருந்துகளை இடிக்கும்போது உண்டாகும் காரங்கள், தானியங்களை அரைக்கும்போது

உண்டாகும் தூசுகள் முதலியன வாய்க்குட் சென்றாலும், பற்களுக்கிடையிலிருந்து உதிரம் வெளிப்பட்டாலும், பெண்களை இச்சையுடன் பார்ப்பதால் (தொடுவதால் அல்ல) இந்திரியம் வெளிப்பட்டாலும், மத தர்மப்படி நீராடக் கடமைப்பட்டவன் பகல் முழுதும் ஸ்நானஞ் செய்யா திருந்தாலும், வாசனைத் திரவியங்களை முகர்வதாலும் ஈரத்துணியை வயிற்றில் சுற்றிக் கொள்வதாலும் நோன்பு முறியாது. நோன்பை முறிக்க வேணு மென் றெண்ணி அதனை முறிக்கக் கூடிய காரியங்களை செய்யாமல் அவ்வாறு எண்ணுவதால் மாத்திரம் நோன்பு முறிந்து விடாது. காதுக்குள் தண்ணீரை வேணுமென்றே வார்த்துக்கொண்டாலும் நோன்பு முறிந்து விடுமென சில உலமாக்கள் கூறியிருக்கின்றார்கள். ஆனால் காதின் வழியாக எண்ணெய் மூளைக்குச் செல்வதால் காதுக்குள் எண்ணெ ஊற்றுவதும் நோன்பை முறித்துவிடும்.

(ஷாபிஈ மத்ஹப் பிரகாரம்)

தான் விவாகஞ் செய்து கொள்ள மதம் அனுமதிக்கும் (ஹலாலான) பெண்களைத் திரையுடன் தொடுவதாலும், அவர்களை திரையுடன் முத்தமிடுவதாலும் காம இச்சையை உண்டாக்கக்கூடியவைகளை கூர்ந்து பார்ப்பதாலும், அவைகளைப்பற்றி சிந்திப்பதாலும் சொப்பன ஸ்கலிதத்தாலும், தான் விவாகஞ் செய்து கொள்ள மதம் அனுமதிக்காத (மஹ்றமான) பெண்களை திரையில்லாமல் தொடுவதாலும் தன்னால் அடக்கமுடியாத வாந்தி யெடுப்பதாலும் காற்று காரம் முதலியவை உட் சென்றாலும் அசுத்தமாயிருக்கிற தன் வாயை துப்பரவு செய்வதற்கு முன் தற்செயலாக உமிழ்நீரை விழுங்கி விட்டாலும், ஈ போன்றவைகள் தொண்டைக்குட் சென்றாலும், வாய் கொப்பளிக்கும் போது தண்ணீர் தவறுதலாக உள்ளே சென்றுவிட்டாலும், பர்லு, ஸுன்னத்து, ஆகிய அவசியங்களுக்காக, நீராடும் நோக்கத்துடன் பாத்திரத்திலிருந்து தண்ணீர் எடுத்து ஊற்றிக்கொள்ளும்போது தண்ணீர் துவாரத்தின் வழியாக உட்சென்று விட்டாலும் சற்று நேரம் அறிவு மயங்கி பின்பு தெளிவு ஏற்பட்டாலும், சுத்தமான தன் உமிழ்நீரை விழுங்குவதாலும் பிறரது நிர்ப்பந்தத்திற்கு அஞ்சியோ ஞாபகமில்லாமலோ நோன்பு முறிந்து போகுமோ வென அறியாமலோ நோம்பை முறிக்கக் கூடியவைகளைச் செய்தாலும் நோன்பு முறியாது.

நோன்பு நிறைவேறுதற்கான அம்ஸங்கள்.

பகல் முழுதும் புத்தி சுவாதீனமுள்ளவனாகவும், முஸ்லிமாகவு மிருக்கவேண்டும். பெண் பிள்ளைகட்கு மேற்கூறிய இருகாரியங்களுடன் மாதவிடாய், பிரசவத்தின் தொடக்கு (ஹைலு, நிபாஸ்.) ஆகிய இவை யில்லாதிருப்பது அவசியம். ஒருவன் பகல் முழுதும் நித்திரை செய்தாலும் மதச்சட்டப்படி ஸ்நானஞ் செய்ய கடமைப்பட்டவன் (ஜுனுபாளி) பகல் முழுதும் குளிக்காமலிருந்தாலும் நோன்பு முறியாது ஆனால் குற்றவாளியாவான்.

நோன்பின் ஸுன்னத்துகள்.

நடு இரவிற்குப் பின் ஸஹர் செய்தல்; ஸஹர் செய்வதை கடைசிநேரம் வரை பிற்படுத்தல்; சூரியாஸ்தனமானவுடன் தாமதமின்றி நோன்பு திறத்தல்; பேரீச்சம்பழம் அல்லது பால் அல்லது தண்ணீரைக்கொண்டு நோன்பு திறத்தல்; நோன்பு திறந்தவுடன் "அல்லாஹும்ம லக ஸும்து வபிக ஆமன்து வ அலைக தவக்கல்து வ அலா ரிஜ்கிக அப்தர்த்து ப தகப்பல் மின்னீ" என்று பிரார்த்தித்தல். பஜ்ருக்கு முன்னதாகவே ஜுனுபாளியாகிவிட்டால் பஜ்ருக்கு முன்பே குளித்தல்; கெட்ட வார்த்தைகளைக் கேட்காமலும், கெட்ட பார்வைகளைப் பார்க்காமலும், வாசனை திரவியங்களை முகராமலும் காம இச்சை கொள்ளாமலும், நோன்பு திறந்த பின் ஹலாலல்லாத (மதச் சம்மத மற்ற) முறையில் தேடிய பொருளிலிருந்து தயாரான உணவை உட்கொள்ளாதிருத்தலும் ஸுன்னத்து.

அதிகமான ஸதகா (தருமம்) கொடுத்தல்; தன் குடும்பத்திற்கு தாராளமாய் செலவு செய்தல்; நோன்பு நோற்றவர்களை தன்னுடன் சேர்த்து நோன்பு திறத்தல்; துப்பரவான இடங்களில் குர்ஆன் ஷரீபை அடிக்கடி ஓதுதல்; திக்ரு, ஸலவாத்து முதலியவைகளை ஓதுதல்; இஃதிகாபு இருத்தல்; வணக்கங்களை அதிகப்படுத்தல் ஆகிய இவைகளும் நோன்பின் ஸுன்னத்துகளாம். காமஇச்சையுடன் முத்தமிடுதல் ஹராமாகும்; கண்ணில் ஸுர்மா இடுவதால் நோன்பு முறியாவிட்டாலும் ஸுர்மா இடாமலிருப்பது உத்தமம். பொய் கூறல்; புறம் பேசல்; கோட் சொல்

லல்; பரிகசித்தல்; திட்டுதல்; நிந்தனை செய்தல்; வீண் பாடல்களைப் பாடல் முதலியன செய்யாமலிருப்பது வாஜிபு.

நோன்பின் மக்ரூஹ்கள்.

நோன்பின் மக்ரூஹான காரியங்களை நோன்பு நோற்பவன் செய்வதால் அவனின் நோன்பு முறிந்து போகாதெனினும் அதன் நன்மை குறைந்து போகும். ஆதலால் நம் நோக்கம் நிறைவேறும் பொருட்டு இயன்ற வரையிலும் மக்ரூஹான காரியங்களைச் செய்யாமலிருப்பது அவசியமாகும். அடி திரும்பிய பின் பற்குச்சியால் பல் தீட்டுதல் அதாவது மிஸ்வாக்குச் செய்தல், அவசியமின்றி வஸ்துக்களை மெல்லுதல்; உருசி பார்த்தல் மலங்கழித்துவிட்டு துப்பரவு செய்வதிலும் நாசிக்கு நீர் செலுத்தி துப்பரவு செய்வதிலும் அளவுக்கதிகமாய்தண்ணீரை உபயோகித்தல், வாயில் தண்ணீரை வைத்துக் கொண்டிருத்தல், உமிழ் நீரை ஒன்று சேர்த்து விழுங்கல் காம இச்சை தன்னை மீறிவிடுமென்ற சந்தேகமுள்ளவர்கள் பெண்களை முத்தமிடல்; குளிக்கும்போது தண்ணீருக்குள்ளிருந்து காற்று விடல் ஆகிய இவை மக்ரூ ஹாகும்.

கப்பாரா கொடுக்கும் விபரம்.

ஒரு அடிமையை விடுதலை செய்யவேண்டும். அதற்கியலாவிட்டால் தொடர்ச்சியாக 60 நாள் நோன்பு நோற்றல் வேண்டும், 59 நாள் தொடர்ச்சியாக நோன்புநோற்று 60 வதுநாள் நோன்பு நோற்கத் தவறிவிட்டால், முன்னைய 59 நாட்களிலேஅம்மனிதன்நோற்ற நோன்புகள் கணக்கில் சேர்க்கப்பட மாட்டா ஆதலால் மறுபடியும் 60 நாட்கள் தொடர்ச்சியாகவே நோன்பு நோற்கவேண்டும் இனி 60 நாட்களுக்குள் 2 'ஈத்' பெருநாட்கள், அய்யாமுத்தஷ்ரீக் என்னும் துல் ஹஜ்ஜு மாதத்தின் 11, 12, 13. ஆகிய தேதிகள் வராமல் பார்த்து அந்தத்தினங்களில் நோன்பு நோற்கவேண்டும். ஆனால் பெண்களுக்கு மாத்திரம் மாதவிடாய் நாட்கள் மன்னிக்கப்பட்டுள. ஆகையால் ஷெ மாதவிடாய் காலத்திற்கு முன்வைத்த நோன்பு களைக் கணக்குவைத்து 60 நோன்புகள் நோற்க வேண்டும். இவ்வாறு நோன்பு நோற்க இயலாவிடின் 60 ஏழைகட்கு 2, நேரமும் நடுத்தரமான போஜனம் வயிரார அளிக்கவேண்டும். அல்லது பித்ரு ஸதகாவின் அளவாக 60 மிஸ்கீன்களுக்கு ஸதகா கொடுக்க வேண்டும். இதைச் செய்யவும் சக்தியில்லையாயின் "அல்லாஹு தஆலாவிடத்தில் மன்னிப்புக் கேட்கவேண்டும். இவ்விதம் பரிகாரத்தை மேல்குறித்த விவரப்படி செய்யவேண்டும். அடிமையைவாங்கி விடுதலைசெய்ய சக்தியுள்ளவர்கள், நோன்பு நோற்கவோ, அல்லது ஏழைகளுக்கு அன்ன மளிக்கவோ கூடா. நோன்பை முறித்தவன் புத்தி சுவாதீனமுள்ளவனாகவும் பருவமடைந்த வனாகவும் இருந்தால்தான் நோன்பை முறித்ததற்கு மேற்கண்டவாறு கப்பாரா (பரிகாரம்) செய்யவேண்டும். சிறுபிள்ளைகள், பைத்தியக்காரர்கள் ஆகிய இவர்கள் கப்பாரா கொடுக்க வேண்டியதில்லை. ரமலான் மாதத்தின் அதாவான (களாவல்லாத) நோன்பிற்கு இரவிலும் 'ஷரஈ' நடுப்பகல் வருவதற்குள்ளும் நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்யலா மாதலால் இரவில் நிய்யத்துச் செய்து முறித்தவர்களுக்குத் தான் மேற்கண்டவாறு கப்பாரா வாஜிபாகும். பகலில் நிய்யத்துச் செய்தவர்களுக்கு கப்பாரா வாஜிபாகாது.

இவ்வாறு கப்பாரா வாஜி பாவதற்கு மற்றொரு ஷர்த்தும் உண்டு அஃதாவது நோன்பை முறித்த அன்றையத்தினமே நோன்பை முறிக்கத் தகுந்த காரணங்களைதுவும் ஏற்படாமலிருத்தல்வேண்டும். ஆதலின் நோன்பை முறித்த அன்றையத்தினம் நோன்பு வைக்க இயலாத விதமாக வியாதி வந்து விட்டாலும், நோன்புமுறித்த அன்றையத்தினமே பெண்களுக்கு ஹைளு, நிபாஸ் வந்து விட்டாலும் கப்பாரா கொடுப்பது வாஜிபாகும். ஒருவன் ஞாபக மில்லாமல் அல்லது பிறரின் கட்டாயத்தினால் பசி, தாகம் அதிகமாகி அதனால் தனக்கு ஆபத்து வந்து விடுமோவென்ற பயத்தினால் நோன்பை முறித்தால் அதற்காக கப்பாரா கொடுப்பது வாஜிபில்லை. கப்பாராக் கொடுக்கும் விதமாக ஒரே வருஷத்தில் இருமுறை நோன்பு முறித்து 2 க்கும் சேர்த்து கடைசியில் ஒரே தடவையில் ஒரே கப்பாரா கொடுக்கலாம். ஆனால் ஒருதரம் கப்பாரா கொடுத்தபின் மறுமுறையும் அதே வருஷத்தில் கப்பாராக் கொடுக்க வேண்டிய விதமாக நோன்பை முறித்தால் இந்த 2-ஆம் முறைக்காக இன்னொருமுறை கப்பாராக் கொடுக்க வேண்டும் முதலில் கொடுத்தது போதா. 2 வருஷத்

தில் வருஷம் 1-க்கு ஒவ்வொரு நோன்பாக கப்பாராக் கொடுக்கும் விதமாக நோன்பை முறித்திருந்தால் இவ்விரண்டிற்கும் தனித் தனியே கப்பாராக் கொடுக்கவேண்டும்.

நோன்புநோற்பது கடமையாகாத சந்தர்ப்பங்கள்.

நோன்பு நோற்றல் வியாதி அதிகரித்து விடும் என்றபயம் நோயாளிக்கிருந்தாலும், பாம்புதீண்டி விட்டாலும், குழந்தைக்குப் பால் வற்றிவிடுமென்ற பயம் பால்கொடுக்கும் பெண்ணுக்கிருந்தாலும், கெற்பத்தின் காரணத்தாலும் நோன்பு நோற்கா திருக்கலாம். இவைகளில் எதையேனும் காரணத்தைக் கொண்டு நோன்புநோற்கா திருந்தாலும் நோற்ற நோன்பை முறித்தாலும் அந் நோன்பை கலாச் செய்யவேண்டும்: மேற் குறிப்பிட்ட காரணங்களிருக்கும்போதே அவ னிறந்துவிட்டால் அவன் குற்றவாளியாகான் ஆனல் அக்காரணங்கள் நீங்கியபின் அந்த நோன்புகளை கலாச் செய்யாமலிருந்தால் விட்டுப்போன அந் நோன்புகளுக்குப் பதி லாக பித்யா, கொடுக்கும்படி அவன் மரண படையும்போது வஸிய்யத் செய்வது வாஜிபு.

(ஷாபிஈ மத்ஹப் படி)

கடினமான பசி, அடக்க முடியாத தாகம், தயம்மம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டி ருக்கிற வியாதி இவைகளில் ஏதேனு மொன்றை முன்னிட்டு நோன்பை விடலாம். பிரயாணியும் (48மைலுக்கு குறையாத தூரத் திலுள்ள ஊருக்குச் செல்பவன்) நோன்பை விடலாம். ஆனல் அவன் நல்ல காரியத்தைச் செய்வதற்காகப் போகவேண்டும். திருட்டு முதலிய காரியங்களைச் செய்கிறவன் நோன்பை முறிக்கக்கூடாது.

'பித்யாக்' கொடுத்தல்

நோன்பு நோற்க இயலா வயோதிகர் ஆணுனும் சரி, பெண்ணுனும் சரி ரம்லா னின் நோன்பிற்காக பித்யாக் கொடுப்பது வாஜிபு. ஒவ்வொரு நோன்பிற்கும் பித்றுசத காவின் அளவு தானியம், அல்லது அதன் கிர யம் ஏழைகட்கு கொடுப்பதற்கு பித்யா வென்று பெயர். பல நோன்புகளுக்குள்ள பித்யாவை ஒரு மிஸ்கீனிடம் கொடுக்கலாம். ஒரு நோன்பின் பித்யாவை பல மிஸ்கீன்க ளிடம் கொடுக்கக்கூடாது. இவ்வாறு பித் யாக் கொடுத்தபின் நோன்பு வைக்கச்சக்தி பெற்றுவிட்டால் அந்த நோன்புகளை கலாச் செய்வது வாஜிபு.

(ஷாபிஈ, மத்ஹப் பிரகாரம்)

நடுத்தரமான மனிதன் 2 கைகளையுங் கொண்டு தானியங்களை ஒரு முறை ஒவ் வொரு நாளும் அள்ளிக் கொடுப்பதற்கு பித்யா வென்று பெயர். ஒரு நாளுக்காகக் கொடுக்கப்படும் பித்யாவிற்கு முத்து என்று பெயர். ஒரு முத்தை ஒருவனுக்குத்தான் கொடுக்கலாம். 2, 3. பேர்களுக்கு கொடுக் கக்கூடாது. ஆனல் பல முத்துக்களை பலருக் கும் கொடுக்கலாம்.

'தராவீஹ்' தொழுகை

ரமலான் மாதத்தில் 'இஷாத்' தொழு கைக்குப் பின் 'தராவீஹ்' தொழுவது சகல முஸ்லிம்கள் மீதும் 'ஸுன்னத்து முஅக் கதா' வாகும். இதை இமாம் ஜமா அத்தா கத் தொழல் 'ஸுன்னத்துகிபாயா' வாகும். ஆதலின் ஒரு மஸ்ஜிதில் சிலர் கூடி இமாம் ஜமா அத்தாகத் தொழுதுவிட்டால் இதரர் கள் ஜமா அத்தாகத் தொழா விட்டாலும் குற்றமாகாது. ஆனல் ஜமா அத்தாக ஒரு வரும் தொழாமலிருந்து விட்டால் யாவரும் ஸுன்னத்தை விட்ட குற்றத்திற்காளாவார் கள். இத்தொழுகையை ஜமா அத்தாகத் தொழ மாதர்கள் மஸ்ஜிதுக்கு வரக்கூடாது. அவர்கள் தங்கள் மனைகளிலேயே இத்தொழு கையை நிறைவேற்ற வேண்டும்.

இத்தராவீஹ் தொழுகை 20 'ரகஅத்' களாகும். அவைகளை இரண்டிரண்டு 'ரகஅத்' களாக 10 முறை தக்பீர் கட்டி தொழவேண் டும். ஒரு தக்பீர் கட்டி இடையில் 'ஸலாம்' கொடுக்காமல் 20 'ரகஅத்' களையும் தொழு தால் 'தராவீஹ்' நிறைவேறிவிடும். ஆயி னும் அவ்வாறு தொழுவது 'மக்ரூஹ்'

ஒவ்வொரு 4 'ரகஅத்' துக்குப் பின்னும் அந்நான்கு ரகஅத்துத் தொழுகையின் நேரம் தாமதித்திருப்பது 'முஸ்தப்பு'. இஷாத் தொழுகைக்கு முன் தராவீஹ் தொழுவது கூடாது. முறைப்படி முதலில் இஷாவையும், பின்னல் தராவீஹையும், ஒருவன் தொழுது பின்பு அவன் தொழும் இஷாத் தொழுகை யானது நிறைவேறவில்லை என அதே இரவில் தெரிந்தால் இஷாவையும் தராவீஹையும் திரும்பவும் அவன் தொழல் வேண்டும்.

கிழக்கு வெளுத்தபின் இஷாத் தொழுகை நிறைவேறவில்லையென தெரிந்தால் இஷாவை மாத்திரம் மறுபடியும் தொழவேண்டும். தராவீஹ் தொழுகையை மறுபடியும் தொழ வேண்டிய அவசியம் இல்லை. அவ்வாறு தொழுவது 'மக்ரூஹ்'.

தராவீஹ் தொழுகையில் ஒருமுறை குர்ஆன் முழுவதையும் ஓதி, 'கத்தம்' மூடிப்பது ஸுன்னத்து. ஆதலால் தான் வழக்கமாக தொழும் மஸ்ஜிதில் குர்ஆன் கத்தம் ஓதி தொழாவிடில் கத்தம் முடிக்கும் வேறு மஸ்ஜிதுக்குச் சென்று தொழலாம்.

ஜமாஅத் நடந்து கொண்டிருக்கும் பொழுது ஒருவர் தொழவந்து நடந்து கொண்டிருக்கும் தொழுகை இஷாவின் பர்லான தொழுகையா அல்லது ஸுன்னத்வான தராவீஹா என்று திட்டமாகத் தெரியாவிட்டால் "இப்பொழுது நடைபெறும் தொழுகை பர்லு தொழுகையா யிருந்தால், இந்த இமாமுடன் சேர்ந்து பர்லு தொழுகையை தொழுகின்றேன்;" "தராவீஹ் தொழுகையாயின் இந்த இமாமுடன் சேர்ந்து தராவீஹைத் தொழுகின்றேன்" என்று நிய்யத்துசெய்து தக்பீர்கட்டி அந்த ஜமாஅத்துடன் தானும் துயர்ந்து தொழலாம் ஆனல் அத்தொழுகை பர்லான தொழுகையென்று பின்பு தெரியவந்தால் பர்லு நிறைவேறிவிடும். தராவீஹ் தொழுகையென்று வெளியானல் பர்லான இஷாவை 2-வது முறை தொழுகவேண்டும் ஆனல் இஷாவின் பர்லுக்கு முன் தராவீஹ் தொழக்கூடாதென்பதை உத்தேசித்து "இது இஷாவின் பர்லான தொழுயைாக இருந்தால் இமாமைப் பின்பற்றுகின்றேன்," இன்றேல் இமாமைப் பின்பற்ற வில்லை என்று தாமதித்து வந்தவர் நிய்யத்துச் செய்து இந்த இமாமைப் பின்பற்றித் தொழல் கூடா.

ஒரு மஸ்ஜிதில் தராவீஹ் தொழவைத்த இமாம் அதே இரவில் வேறொரு மஸ்ஜிதில் தராவீஹ் தொழவைப்பது கூடாது. ஆனல் ஒரே இமாம் ஒரு மஸ்ஜிதில் 8 ரகஅத்தும் வேறொரு மஸ்ஜிதில் 12 ரகஅத்துமாக தொழுகையை நடத்தி வைக்கலாம். ஒரு மஸ்ஜிதில் இமாமுடன் தராவீஹ் தொழுது விட்டு அதே இரவில் வேறொரு மஸ்ஜிதில் இமாம் ஜமாஅத்துடன் தராவீஹ் தொழுவது குற்றமன்று. ஆனல் வித்று தொழுகையை 2வது மஸ்ஜிதிலும் தொழுக் கூடா. தராவீஹின் சில ரகஅத்துகளில் சேரமுடியாமல் பிந்தியவர் அவைகளைத் தனியாகத் தொழுதால் வித்றுடைய ஜமாஅத்தனக்கு கிடைக்காதென்றுத் தோன்றின் இமாம் ஜமாஅத்துடன் வித்ருத் தொழுகையை நிறைவேற்றி விட்டு பாக்கி யிருக்கும் தராவீஹ் தொழுகையைப் பின்னல் தொழலாம். ரமலான் மாதத்தில் மாத்திரம் வித்று தொழுகையை ஜமாஅத்தாகத் தொழலாம், ஆனல் பர்லையும் தராவீஹையும் இமாம் ஜமாஅத்தில்லாமல் தனிமையாக தொழுதவன் வித்று தொழுகையை மட்டும் ஜமாஅத்தாக தொழக் கூடாது.

'இஃதிகாபு' இருப்பது.

இமாம், முஅத்தின் ஆகியவர்கள் நியமிக்கப்பட்டுள்ள மஸ்ஜிதில் ஆண்களும் வீட்டில் தங்கள் தொழுகைக்கென்றே பிரத்தியேகமாக ஒதுக்கி வைக்கப் பெற்றிருக்கும் மஸ்ஜிதுகளில் பெண்களும் இஃதிகாபு இருப்பதாக நிய்யத்துச் செய்துகொண்டு தரிபடுவதற்கு இஃதிகாபு என்று பெயர். ரமலான் மாதத்தின் கடைசிப்பத்தில் குறைந்தது ஒரு நாளாவது இஃதிகாபு இருப்பது ஸுன்னத்து முஅக்கதாகிபாயவாகும். ஆதலால் ஒரு ஊரில் ஒருவன் இஃதிகாபு இருந்துவிட்டால் மற்றறர்கள் மீதுள்ள கடமை நீங்கிவிடும். அவ்வூர் மக்களில் ஒருவர்கூட இஃதிகாபு இராவிட்டால் அவ்வூரிலுள்ள யாவரும் அக்குற்றத்திற் காளாவர். இவ்வாறு இஃதிகாபு இருப்பவர்கள் மலஜலங் கழித்தல் குளித்தல் ஒலுச் செய்தல் போன்ற அத்தியாவசியமான காரியங்களுக்காக மாத்திரம் மஸ்ஜிதை விட்டு வெளியில் வரலாம். ஆனல் மேற்கூறிய காரியங்கள்செய்துமுடிந்தவுடன் தாமதஞ் செய்யாது மஸ்ஜிதுக்கு வந்துவிடவேண்டும். மஸ்ஜிதுக்கு வெளியில் அனவசியமாய் தாமதித்தாலும் மேலே கூறப்பெற்றவை போன்ற இன்றியமையாத காரணங்க ளல்லாதவைகளுக்காக வெளியில் சென்றாலும் இஃதிகாபு முறிந்துவிடும். ஆதலால் அதைக் கலாச் செய்வது வாஜிபு. இஃதிகாபிருப்பவர்கள் மஸ்ஜிதிலேயே ஆகாரம் அருந்தவும் தாகசாந்தி செய்யவும் சயனிக்கவும் தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் அவசியமான சாமான்களை விலை பேசி வாங்கவும் விற்கவும் செய்யலாம். ஆனல் அவ்வாறு விலைக்கு வாங்கும் சரக்கையோ விற்பனைசெய்

யும் சாமானையோ மஸ்ஜிதுக்கு கொண்டுவர லாகாது. அவ்வாறு செய்தல் மக்ரூஹ் தஹ்ரீமியாகும்.

இஃதிகாபு இருக்கும் மஸ்ஜிதில் ஜும்ஆத் தொழுகை நிறைவேற்றப்படுகிறதில்லையாயின் அத்தொழுகைக்காக ஜும்ஆ மஸ்ஜிதுக்குப் போகவும் தனக்கு உணவு கொண்டுவர ஆளில்லாவிட்டால் அதற்காக வீட்டிற்குப் போய் சாப்பிடவும் செய்யலாம். ஆனால் உணவருந்தியவுடன் தாமதியாது மஸ்ஜிதுக்கு வந்துவிடவேண்டும். இரவிலோ அல்லது பகலிலோ புணர்ச்சி செய்யினும் பெண்களை முத்தமிடினும் அவர்களைத் தீண்ட இந்திரியம் ஸ்கலிதமாயினும் இஃதிகாபு முறிந்து போகும். இவ்விதமான காரியங்களை மறந்து செய்யினும் இஃதிகாபு முறிந்துபோம். பகலில் காமநுகர்ச்சி முதலிய காரியங்களைச் செய்தால் இஃதிகாபுடன் நோன்பும் முறிந்துவிடும். இஃதிகாபு இருப்பவன் நன்மையான காரியங்களைப் பேசிக்கொண்டும் குர் ஆன் ஹதீது இவைகளை ஓதிக்கொண்டும் இருக்க வேண்டும். ஆனால் பேசாதிருப்பது நன்மையென நினைத்து ஒருவருடனும் பேசாமல் மௌனஞ் சாதிப்பது மக்ரூஹ். கணவரது உத்தரவின்றி பெண்கள் இஃதிகாபு இருப்பதுகூடாது. இஃதிகாபு இருக்கும் பெண்கள் ஹைளு, நிபாஸ் ஆகியவைகள் இல்லாதிருப்பது ஷர்த்து. இஃதிகாபிருக்கும் பெண்கள் தங்கள் வீட்டில் தொழுகைக்காக பிரத்தியேகமாயிருக்கும் வீட்டின் மஸ்ஜிதைத் தவிர வீட்டிற்குள் வேறு எந்த விடங்களுக்கும் முற்கூறப்பட்ட அவசியமான காரியங்களுக்கல்லாது செல்லக்கூடாது.

ஆசிரியர் குறிப்புகள்.

மௌலானா முஹம்மது அலி:—நமது இந்தியத் தேசியத் தலைவரும், முஸ்லிம் சமுகத்திற்கெனத் தம் வாணாட்களையே சமர்ப்பித்தவருமாய மௌலானா முஹம்மது அலி அவர்கள் நமக்கென, நமது உரிமைகட்கென, நம்மவர் மனப்பான்மையை அரிய திறமையோடு மேனாட்டார்க்கு எடுத்துரைக்கும் நமது பிரதிநிதியென லண்டன் மாநகரம் சென்று அங்கு நம் சமுகத்திற்கும், நமக்கும் உயரியதோர் பதவியைத் தேடிவைத்தார்கள் என்பது இனிதறிந்ததோர் செய்தியேயாம். மௌலானா அவர்கள் சில காலமாக நோய்வாய்ப்பட்டு தேகம் நலிவுற்றிருக்கின்றார்கள்; கண்களில் கொடிய நோய் உண்டாய் ஒருவாறு குணமடைந்தது. இருதயத்திலும் இவர்கட்கு நோய் இருப்பதைப் பாராட்டாது, இந்நிலைமையில் கடுமையான கடல் பிரயாணத்தினால் உடல் வீழ்தலும் கூடும் என்று நினைத்து உயிர்விடற்கும் அஞ்சாது, லண்டன் சென்றார்கள். சென்று ஆங்கு, மௌலானா அவர்கள் இந்திய தேசத்தின் ஓர் தலைவராக இல்லாமல், வகுப்புவாத மும்முரம் உடையவராகவே தேசியத்திற்குக் குழி தோண்டித் தம்மை மகிழ்விப்பர் என்று கருதி எதிர்பார்த்திருந்த ஆதிக்கவெறியும் சுயநலப் போக்கும் கொண்ட குறுகிய நோக்குடைய கட்சியைச் சார்ந்த ஆங்கில வெள்ளையர்களைத் திடுக்கிடும்படிச் செய்தார்கள். மௌலானா அவர்கள் ஒரு தேசிய வீரராகத் தம் கூற்றுக்களைக் கூற முன்னெழாதவராய், வெள்ளையர்கட்கு உதவியாக வகுப்பு வாதம் பேசுவார் என்று நாவூறிப் போயிருந்த வெள்ளையர் மௌலானாவின் உடலில் ஓடும் இரத்தம் இத்தன்மைத்து எனக் கண்டு கொண்டு முகம் வியர்த்தனர். இந்தியாவில் இந்துக்களும் முஸ்லிம்களும் தமக்குள் தங்கதங்கள் உரிமைகட்காக எத்துணைக் கடுமையாகவிவாதம் புரிந்துகொண்ட போழ்தினும், பிறர் நகைக்கத் தமக்குள் பிளவுபட மாட்டார்கள்; இந்து-முஸ்லிம் விவாதம் அவசியமானதாய் இருக்கின்றதே யன்றி, பிறர் புகுந்து அரசியல் குறுக்குச் சட்டம் பூட்டுதற்கு இடங்கொடுப்பதாய் இல்லை என்னும் உண்மையை வெள்ளையர் ஓர்ந்தனர்; இந்தியர்களுள்ளும், மௌலானாவைச் சர்க்கார் தாஸர் எனத் தூற்றியவர்கட்கும் இதன் வாயிலாய் நல்லறிவு பிறந்தது. நிற்க; மௌலானா அவர்கள் பொதுவாக இந்தியத்

தேசிய விடுதலைக்குத் தலைமை யணியில் நின்று பாடுபடுவதோடு, முஸ்லிம் சமூகத்திற்கு அவரினும் யாரே இத்துணை வலிமையோடு எதிர்நின்று வாதாடவல்லவர்? வடமேற்கு எல்லைப்புற மாகாணங்கட்கு ஏனைய மாகாணங்கட்குள்ள எல்லாச் சீர்திருத்த முறைகளும் வழங்கப்பெற வேண்டும் என்பது இந்திய முஸ்லிம்களின் ஒன்று சேர்ந்த அபிப்பிராயம். வட மேற்க் கெல்லைப்புற மாகாணத்தை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அரசியல் நுட்பங்களை ஆதாரமாகக் கொண்ட சில இராணுவ வேலைகட்காக உபயோகித்துக்கொண்டு வருகின்றனர். இம்மாகாணம் எல்லைப் புறத்தில் இருப்பதால், இதில் சீர்திருத்தம் வழங்கின் நேர்மையான சட்ட விவாதங்கட்கும் தாம் ஆளாக நேர்தலும் கூடும் என்று இராணுவ மனப்பான்மையினை உடைய பிரிட்டிஷ் அதிகாரிகள் அஞ்சியே வடமேற் கெல்லைப்புற மாகாணத்திற்குச் சீர்திருத்தம் வழங்க முன் பின் யோசனை செய்து வருகின்றனர்—மறுப்பதற்கு ஆதாரம் அகப்படாமல் அல்லற் படுகின்றனர். ஆயின், இவ் வெல்லைப்புற வாசிகள் பெரும்பாலும் முஸ்லிம்களாய் இருப்பதால் நம் சகோதரர்களை நீக்கி நாம் சீர்திருத்தங்களோ, குடியேற்ற நாட்டுப் பதவியோ அடைந்து யாது பயன் என்பதே நமது கருத்து. மேலும் மாகாண அமைப்பில் முஸ்லிம்களைப் பெரும் பான்மையான குடி ஜனங்களாகக் கொண்ட மாகாணங்களாய வங்காளம், பாஞ்சாலம் இவைகளோடு எல்லைப்புற மாகாணமும் சேர்ந்துவிடின், முஸ்லிம்கட்கு பிற்கால அரசாட்சி முறையில் தக்க பிடிப்பும் உண்டாகும், எனவே, எல்லைப்புறச் சீர்திருத்தம் அவசியம் என்பதும் நமது அசைபடா நோக்கம். இதற்கும், மற்றும் உள்ள முஸ்லிம்களின் உரிமைகள் எல்லாவற்றிற்கும், தேசீய நலனுக்கும் உழைக்கும் உண்மைத் தொண்டராய, தலைவராய, நமது மௌலானா மீண்டும் நோய்வாய்ப் பட்டமை கேட்டு நெஞ்சழிந்தோம். இவர்கள் இந் நோயினின்றும் விடுதலை பெற்று, இந்தியாவுக்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் லண்டன்மா நகரத்தில் வெற்றிக்கொடி நாட்டித் தம் தாய்நாட்டை பூரண உடல்நலனோடு வந்தடைதற்கு இறைவனைப் பெரிதும் இறைஞ்சுகின்றோம்; நமது சமூகத்தினர் அனைவரையும் இஃதே போல் துஆச் செய்துகொள்ளுமாறு (பிரார்த்தனை புரிந்துகொள்ளுமாறு) கேட்டுக்கொள்ளுகின்றோம்.

லண்டன் மகாநாடு:—லண்டனில் கூடி நடைபெறும் வட்ட மேசை மகாநாடு, இந்திய ஆட்சிமுறைக்குரிய திட்டங்களை அமைப்பதற்காகத் தனித்தனியாச் சில கமிட்டிகளை நியமித்துள்ளது. இக் கமிட்டிகள் குறிப்பிட்ட பல விஷயங்களை ஆராய்ந்து அவற்றை அறிக்கையிடவும், அதன் பேரில் ஒரு ஆட்சிமுறையை மகா நாட்டினர் ஒன்றுகூடி அமைத்து, அதனை பாராளுமன்றங்களில் நிறைவேற்றிப் பின்னர் இந்தியாவில் வழங்க விடுவர். நிலைமை இத்தன்மைத்தாக, எல்லாக் கட்சியினராலும், எல்லாத் தேச மக்களாலும் சில குறும்பு மன வெள்ளையர்களைத் தவிர, இந்துக்கட்கும் முஸ்லிம்கட்கும் இத்தருணத்தில் ஒற்றுமை ஏற்படும் என எதிர்பார்த்துவரப்படுகின்றது. முஸ்லிம்கள், இதுகாறும் சமரசப் போக்கிற்கு முன்னிட்டே நிற்கின்றனர் எனினும் இந்துமகா சபைக்காரர்கள் சிலரின் அமிதவாதத்தால், எதிர்பார்த்த சமரசம் ஏற்பட இயலமாற் போயிற்று. இவ்விருதரத்தார்க்கும் பொதுவான முறையில் நின்று பிரதம மந்திரி திரு: மாக்டானல்டு உடன்பாடு செய்து வைப்பதாகத் தெரிவித்து அதற்கென உழைத்து வருவதாயும் கூறப்படுகின்றது. பிரதம மந்திரியின் முடிவு முஸ்லிம்கட்கு ஏற்றனவாய் இருந்தாற்றான் அவைகளை ஒப்புக் கொள்ள முடியும் என்று நம் பிரதிநிதிகள் கூறிவிட்டனர். எனவே, இந்து மகா சபையார் தம் பிடிவாதத்தைச் சிறிது தளர்ச்சி செய்துகொண்டு, எல்லாச் சமூகத்தினரும் உரிமைகளோடு வாழ்தற்குரிய திட்டங்கட்கு ஒப்புக்கொள்வார்களாயின் சமரசம் ஏற்படக்கூடும். இல்லையேல், உரிமைகளை குடியேற்ற நாட்டுப் பதவியைக் குறித்தோ, வேறு எந்தக் காரணங்களைக் கொண்டோ நம் பிரதி நிதிகள் கைநெகிழ விடக் கூடாது என்று நாம் எச்சரிக்கை செய்கின்றோம். ஒரு காலத்தில், ஒரு நெருக்கடியான சமயத்தில் விட்டுக் கொடுக்கப்பெற்ற உரிமைகள், அதே நிலைமையில் என்றும் நிலையாய் விடுமாதலால், எக்காரணம் பற்றியும் நம்மவர்கள் லண்டனில் நம் சமூக நலனுக்கு எட்டுணையும் பங்கம் விளைக்கக் கூடாது என்பதே எமது கருத்து.

மஃரிபத்துல் ஔகாத்

நோன்பு வைக்கும் நேரம், நோன்பு திறக்கும் நேரம், சூரிய உதயம் முதலிவைகளை பின்பக்கத்தில் குறிப்பிட்டிருக்கின்றேம். இதிற்கண்ட நேரங்கள் சென்னை நகருக்கு உரியவை. சென்னைக்கு நேர்மேற்கில் உள்ளவர்கள் 69½ மைலுக்கு 4 நிமிஷம் கூட்டியும், நேர் கிழக்கில் உள்ளவர்கள் 69½ மைலுக்கு 4 நிமிஷம் வீதம் குறைத்தும், கணக்கிட்டுக்கொள்ளவேண்டும். சென்னை நகரின் நேரத்தையேதான், ஒவ்வொரு ஊரிலுமுள்ள தபால் தந்தி ஆபீஸ்களிலும், ரெயில்வே ஸ்டேஷன்களிலுமுள்ள கடியாரங்கள் குறிப்பிடுவதால், அந்த நேரப்படியே கணக்கிட்டுக்கொள்க.

பின்பக்கத்தில் குறிக்கப்பட்ட கணக்குப்படியுள்ள நேரங்களில், அஸ்தமனத்தை 5 நிமிஷம் பிந்தியும், சுபுஹூவையும், சூரியோதயத்தையும் 5 நிமிஷம் முந்தியும், பேணுதலுக்காக அனுஷ்டிக்கவும்.

சென்னைக்கு நேர்கிழக்கிலும் மேற்கிலும் உள்ள ஊர்களுக்குத்தான் நேரத்தில் இந்த வித்தியாசம் ஏற்படும். நேர் தெற்கிலோ வடக்கிலோ உள்ள ஊர்கள் எவ்வளவு தூரத்திலிருப்பினும், எவ்வித வித்தியாசமும் கிடையாது. ஆனால் சென்னைக்குத் தென்மேற்கு, வடமேற்கு, தென்கிழக்கு, வடகிழக்கு ஆகிய திசைகளிலுள்ள ஊர்வாசிகள் மேற்கூறிய முறைப்படி கணக்கிடக் கூடாது. சென்னைக்கும் இத்திசைகளிலுள்ள ஊர்களுக்குமுள்ள மொத்த தூரம் எவ்வளவோ, அந்த வீதாசாரப்படி நேரம் வித்தியாசப்படாது. நேர் வடக்கிலும் தெற்கிலுமுள்ள ஊர்களுக்கு நேரம் வித்தியாசப்படாதென்று கூறியிருக்கிறேமல்லவா? அதன்படியே சென்னையிலிருந்து நேர்தெற்காகவும் வடக்காகவும் ஒரு கோடு கிழித்தால் அக்கோட்டிலிருந்து அந்தந்த ஊர்கள் எவ்வளவு தூரம் நேர்கிழக்கிலும் மேற்கிலும் இருக்கின்றனவோ, அதற்கேற்ற வாறே நேரம், முந்தியும் பிந்தியும் இருக்கும். உதாரணமாக, திருநெல்வேலி நகரம் சென்னையிலிருந்து 450 மைல் தூரம் தென்மேற்கிலிருக்கிறது. ஆனால் அது, சென்னையிலிருந்து நேர்கோடு இழுத்தால் அதற்கு 180 மைல்தூரம் தான் மேற்கே ஒதுங்கியிருக்கும். அவ்வாறே, இலங்கையிலுள்ள திருக்கோணமலை என்னும் ஊர் சென்னைக்குத் தென்கிழக்கில் 450 மைல் தூரத்திலிருந்தாலும், சரிநேராக 178 மைல் தூரம்தான் தென்கிழக்கே ஒதுக்கி இருக்கும்.

தமிழ்நாட்டிலுள்ள சில முக்கியமான ஊர்கள் இந்தக் கணக்குப்படி ஒதுங்கி நிற்கும் தூரத்தையும், அவ்வூரார் சென்னை நேரத்துடன் கூட்டிக் கொள்ள வேண்டிய நிமிஷங்களையும் பின்பக்கத்தில் குறிப்பிடுகிறேம். அதில் குறிப்பிடப்படாத ஊரார் தங்கள் ஊர் அதில் குறிப்பிடப்பட்ட இன்ன ஊருக்கு சமீபத்தில் இருக்கிறது என்றும், அந்த ஊரிலிருந்து எவ்வளவுதூரம் கிழக்கு அல்லது மேற்கில் ஒதுங்கியிருக்கிறதென்றும் கவனித்து அதற்கேற்ற வாறே தங்கள் ஊரின் நேரத்தை நிர்ணயித்துக்கொள்ளவேண்டும்.

மஃரிபத்துல் ஔக்காத் (நேரங்களின் விபரம்)

ரமலான் மீ	1௳ 6	7௳ 14	15௳ 21	22௳ 29	30.
நேரங்கள்	ம. நி.	ம. நி.	ம. நி.	ம. நி.	ம. நி.
ஸுப்ஹு ஸாதிக் (மெய் வெள்ளை)	5—21	5—22	5—20	5—18	5—18
சூரியோதயம்	6—40	6—40	6—38	6—36	6—34
ஸவால்	12—22	12—24	12—24	12—24	12—23
சூரியாஸ்தமனம்	6—3	6—7	6—10	6—12	6—12

முக்கிய பட்டணங்கள்

ஊர்	மைல்	நி
விழுப்புரம்	56	3½
திருவண்ணாமலை	69	4
கொழும்பு	25	1½
இராமேசுவரம்	70	4
பட்டுக்கோட்டை	67	4
மன்னார்குடி	35	2
நாகபட்டணம்	31	2
தஞ்சாவூர்	80	4
சீர்காழி	39	2
சிதம்பரம்	42	2
பரங்கிப்பேட்டை	37	2
கூடலூர்	37	2
செங்கல்பட்டு	22	1
வாணியம்பாடி	126	7
திருநெல்வேலி	180	10½
திண்டுக்கல்	162	9½

ஊர்	மைல்	நி
தாராபுரம்	193	11¼
பெங்களூர்	187	10¾
கோயமுத்தூர்	241	14
காஞ்சீபுரம்	43	2½
வேலூர்	81	4½
ஆறுகாடு	81	4½
தூத்துக்குடி	147	8½
ராமநாதபுரம்	103	6
புதுக்கோட்டை	201	12
திருச்சினாப்பள்ளி	111	6½
சேலம்	144	8½
தர்மபுரி	147	8½
மேட்டுப்பாளையம்	236	14
உதகமண்டலம்	248	14½
மதுரை	150	8½
சிவகங்கை	124	7½

Printed at the Kesari Printing Works, & Edited & Published by Moulvi A.R Abdur Rahim Saheb
Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.